20 Years

கனடாவின் மூத்த தமிழ் இதழ்

# விளம்பரம்™

VLAMBARAM™

416-282-8059 E-mail: vlambaram@sympatico.ca Web: www.vlambaram.com 416-282-4978

RBC Insurance

இளமையோ முதுமையோ காப்புறுதி ஒரு வழமை

உங்கள் அனைத்து காப்புறுதி தேவைகளிற்கும் கலந்து ஆலோசிக்க அழையுங்கள்

Jey Ahamparam P.F.P
Insurance Advisor
RBC காப்புறுதியில் விஷேடத்துவம் பெற்றவர்
(Specialized in RBC Insurance)

அத்துடன் உங்கள் வீட்டு வாகன காப்புறுதிகளிற்கும் (Home & Auto) உதவி வழங்கப்படும்.

Call: 416.301.1733

Dr. Iru Vijayanathan
DENTAL SURGEON
DENTAL OFFICE
3150 Eglinton Ave. E., Unit 5
Markham & Eglinton
Tel:416.264.3232
3351Markham Rd., #129
Markaham & Steeles
Tel: 416.609.2022

நதி 20 பாலம் 12 சமூக முன்னேற்றப்பத்திரிகை மாதமிருமுறை இலவசம் JUNE 15, 2010

# உலகக்கோப்பை யாருக்கு?

உலகம் முழுவதும் உள்ள ரசிகர்கள் ஆவலோடு எதிர்பார்த்து காத்திருந்த 19வது உலகக் கோப்பை கால்பந்து திருவிழா வெள்ளிக்கிழமை யூன் 11, அன்று தென்னாபிரிக்காவில் ஆரம்பமாகியது. இப் போட்டியில் யூன் 11 தொடங்கி யூலை 11 ஆம் திகதி வரை நடுவர் கடைசி விசில் அடிக்கும் வரை வெற்றி பெறப்போவது எது? யார் என்பதை பொறுத்திருந்து பார்ப்போம்.

1930 ஆம் ஆண்டு முதல் முறையாக உலகக் கிண்ணபோட்டியில் ஆரம்பிக்கப்பட்டு 1942, 1946 உலகமகாயுத்தத்தின் நிமித்தம் காரணமாக இப் போட்டி நடைபெறவில்லை. 123 அணிகள் கடந்த மூன்று ஆண்டுகளாக போட்டி போட்டு 32 அணிகள் இறுதிப் போட்டிக்கு தெரிவாகியுள்ளன. இதுவரை நடந்த 18 போட்டிகளில் 7 தடவைகள் இறுதி ஆட்டத்துக்கு ஜேர்மனி, பிரேசில் தகுதி பெற்றுள்ளன. இந்த ஏழு இறுதி ஆட்டங்களிலும் பிரேசில் ஐந்து தடவைகளிலும் ஜேர்மனி மூன்று தடவைகளிலும் நடப்புச் சம்பியனான இத்தாலி நாலு தடவைகளிலும் உலகக் கிண்ணத்தை கைப்பற்றியுள்ளன. இம்முறை அசத்தப் போவது யாரு??? என்ற கேள்விக்கு பல பிரபல நட்சத்திரங்கள் வரிசையில் உள்ளார்கள்.

**1. லயனல் மேசி (ஆஜென்ரீனா)** - மிகவும் திறமையான முன்னணி ஆட்டக்காரர். இவருடைய மந்திரக் கால்களால் போடப்படும் தந்திரக் கோல்களுக்கு அடிமையாக இலட்சோப இலட்சம் ரசிகர்கள் அடிமையாக உள்ளார்கள்.

**2. இகர் கசிலாஸ் (ஸ்பெயின்)** - உலகின் மிகச் சிறந்த கோல் காப்பாளரான இவர் 2008 ஆம் ஆண்டு ஐரோப்பியக் கிண்ணத்தை 44 ஆண்டுகளாக எந்தவொரு பெரிய கிண்ணத்தை யும் கைப்பற்றாத ஸ்பெயின் அணிக்கு யூரோ கிண்ணத்தை வென்றெடுத்துக் கொடுத்தார்.

**3. றோபின் வான் (நெதர்லாந்து)** - காயத்திலிருந்து மீண்டு வந்து இம்முறை

தொடர்ச்சி 06ம் பக்கம்

# G20 மாநாடு

G20 நாடுகளின் நாலாவது மாநாடு ஜுன் 26, 27ஆம் திகதிகளில் ரொறொன்ரோவில் நடை- பெறவுள்ளது. 1977 இல் ஆசிய நாடுகளில் ஏற்பட்ட நிதி நெருக்கடியை தொடர்ந்து அப்போது இருந்த G 7 நாடுகளில் பொருளாதாரத்தில் வளர்ச்சி அடைந்துவரும் நாடுகளின் பங்கு இல்லாததால் G20 நாடுகளின் கூட்டமைப்பு உருவாக்கப்பட்டது. G20 நாடுகள் முதல் தடவையாக பேர்லின் இல் 1990 ஆம் ஆண்டு கூடியது.



நன்றி - CBC

இதில் அடங்கும் நாடுகள்:- ஆஜன்ரீனா, அவுஸ்ரேலியா, பிரேசில், கனடா, சீனா, பிரான்ஸ், யேர்மனி, இந்தியா, இத்தாலி, இந்தோனேசியா, யப்பான், மெக்சிக்கோ, ரஸ்சியா, பிரித்தானியா, சவூதி அரேபியா, தென் ஆபிரிக்கா, கொரியா, துருக்கி, அமெரிக்கா, மற்றும் ஐரோப்பிய ஒன்றியம்.

G20 நாடுகளின் குறிக்கோள் தொழிற்துறையில் (Industrial) முன்னேறிய நாடுகளுக்கும் பொருளாதாரத்துறையில் மிகவேகமாக வளர்ந்து வரும் நாடுகளுக்கு மிடையில் ஆக்க பூர்வமான விமர்சனங்களை யும் கலந்துரையாடல்களையும் ஊக்குவிப்பதே யாகும். இந்த G20 நாடுகளில் உலக சனத்தொகையில் மூன்றில் இரண்டு பங்கு மக்கள் வாழ்கிறார்கள். இவர்கள் உலகில் நடைபெறும் வர்த்தக ஏற்றமதி இறக்குமதிகளில் 80% ஐயும் உலகின் மொத்த பொருளாதார வளர்ச்சியில் 90% ஐயும் தமது கையில் வைத்திருக்கிறார்கள்.

G20 நாடுகள் தங்கள் கலந்துரையாடலினால் பின்வருவனவற்றை இதுவரை நிறைவேற்றி யுள்ளனர். உலக நாடுகளுக்கிடையேயான வரிவிதிப்பை பற்றி விரிவாக கலந்துரையாடி நாடுகளுக்கிடையே யான நிதி நிர்வாகத்தில் நடைபெற்று வந்த குழறுபடியால் பலர் செய்து வந்த வரி ஏய்ப்பு மோசடிகள் பலவற்றை கண்டுபிடித்து நிவர்த்தி செய்துள்ளார்கள். 2008 ஆம் ஆண்டில் ஏற்பட்ட பெரிய நிதி நெருக்கடியினால் உலகில் ஏற்பட இருந்த பெரிய பொருளாதார சரிவு G20 நாடுகளின் கலந்துரையாடல்களால் சமநிலைப்படுத்தப் பட்டது. 2009 இல் நடைபெற்ற G20 நாடுகளின் மாநாட்டில் உலகில் ஏற்பட்ட நிதிநெருக்கடியை சரி செய்ய பல நாடுகளில் வேலை வாய்ப்பை ஏற்படுத்தவும் நிதி நிறுவனங்களில் கடன்சுமையை குறைக்கவும் ஒரு இலட்சம் கோடி அமெரிக்க டொலரில் ($1 trillion US dollar) பல திட்டங்களை வகுத்து செயற்படுத்தினார்கள்.

G20 நாடுகளை பற்றி கூறப்படும் சிலகுறைகளில் பின்வருவன முக்கியமானவை. எந்த ஒரு விடயத்தையும் G20 நாடுகளுக்கு விவாதித்து நிறைவேற்றுவது, இக்குழு மிகவும் பெரிதாக இருப்பதால் மிகவும் நேரம் எடுக்கின்றது. சில வேளைகளில் முடியாமலும் இருக்கின்றது. இதை விட இக்குழுவில் ஐரோப்பிய நாடுகள் அதிகம் இருப்பதால் இவர்களின் முடிவுகளும் பெரும்பாலும் ஐரோப்பிய நாடுகளுக்கு சார்பாகவே இருக்கின்றன. இக்குழுவில் இருக்கும் ஒரே

தொடர்ச்சி 02ஆம் பக்கம்

RBC Royal Bank
Switch your Mortgage to RBC
And Consolidate Your Debts for FREE!
• No Lawyers Fee • No Appraisal Fee
• No Discharge Fee
•1st Time Home Buyers •Pre-Approvals
•Debt Consolidation
•Home Equity Line of Credit
•New Immigrant & Self-Employed Programs
•Over 20 years of experience with RBC
•Fast and Efficient Service
Always with a Smile!!!
Nala Brodie
Mortgage Specialist
(416) 409-4900
Nala.Brodie@Rbc.com
Markham&14th Ave
Greater Toronto Region
Let Me Optimize Your Mortgage Payments and other Debt Payments

GSF Golden Store Fixtures
Friend for your Business
www.goldenstorefixtures.com sales@goldenstorefixtures.com Toll Free: 1 877-565-6554
நீங்கள் புதிதாக ஆரம்பிக்கும் வியாபார நிலையத்தை எங்கள் கைவண்ணத்தால் அழகுற வடிவமைத்து பொருத்துவதற்கும், உங்கள் வியாபார நிலையத்துக்குத் தேவையான பொருட்களை பெற்றுக் கொள்வதற்கும் நீங்கள் நாடவேண்டிய தமிழரின் ஒரே ஒரு ஸ்தாபனம் Golden Store Fixtures Ltd.
» Counter Top Displays » Gift Bags & Ribbons » Glass Displays » Grid Panels & Accessories » Mannequins » Pegboard & Accessories » Racks » Shopping Cart & Baskets » Showcases » Sign & Sign Holders » Slatwall & Accessories » Steel Shelving » Wood Displays » And Much More.........
355 ADMIRAL BLVD. UNIT 5
MISSISSAUGA, ON, L5T 2N1
TEL: (905) 565 6555
FAX: (905) 565 8655

RBC Royal Bank®
உங்கள் அனைத்து அடமானக் கடன் தேவைகளுக்கும்
Great Options for all your Mortgage needs
• Lowest interest rates and best prepayment options. • 1st time Home buyers.
• Pre-approvals.
சுலபமாக, துரிதமாக குறைந்த வட்டி வீதத்தில் மோட்கேஜ்க்கு அழையுங்கள்
Paskaran K. (Paski) Mortgage Specialist
416.569.3099 /416.288.9855
E-mail: paskaran.kanagasabapathy@rbc.com

Sales & LEASING
MARKVILLE TOYOTA
KUMAR JEGASOTHY
905.294.8100 & 416.798.7234
Cell: 416.451.0565
கவர்ச்சியான உலக தரம் வாய்ந்த பாவித்த புதிய வாகனங்களை தமிழில் உரையாடி மிக மலிவு விலையில் பெற்றுக்கொள்ள அழைக்கவேண்டியவர்
>குமார் ஜெகசோதி<
E-MAIL: kjegasothy@markville.com 1.800.828.6585

Raj A. Rasaratnam
Sales Representative
Cell: 416-726-8055
Bus: 416-321-6969
HomeLife/GTA Realty Inc
Real Estate Brokerage*
1711 McCowan Rd.
Suite #206
Scarborough, ON
M1S 2Y3
*Independently Owned and Operated

துரித பணமாற்றுச் சேவை
• 52 ஆண்டுகள் வர்த்தகத்துறையில் முன்னோடிகள்
• கனடாவில் தொடர்ந்து 19 வருடங்கள் சேவை
• தந்தையுடன் மைந்தர்களும் இணைந்த சேவை
MONEY TRANSFER
மு. காசிப்பிள்ளை சக புத்திரர்கள்
3228 Eglinton Ave. E. #3
416.267.8221
3351 Markham Rd. #109
416.321.8221

வீடு வாங்கவும் விற்கவும்...
HOMELIFE
ரவி பரமு
Real Estate Broker
Cell: 416-262-4176
Bus: 416-298-3200
HomeLife/Today Realty Ltd., Brokerage
31 Progress Ave. Suite 210, Toronto
Independently owned and operated

VLAMBARAM, GTA SQUARE, 5215 FINCH AVENUE EAST, #201, TORONTO, ON M1S 0C2, CANADA TEL: 416-282-8059, FAX: 416-282-4978, e-mail: vlambaram@sympatico.ca, Web: www.Vlambaram.com

# யாழ் - கொழும்பு ரயில் பயணமும் கோணர் சீற் பிடித்தலும்

புலவர் ஈழத்து சிவானந்தன் உண்! உறங்கு! உழை! என்ற தலைப்பில் ஏப்பிரல் 15இல் எழுதிய கட்டுரையில் யாழ் - கொழும்பு ரயிலில் பயணமும் கோணர் சீற் பிடிப்பது பற்றி சுவாரஸ்யமாகக் குறிப்பிட்டிருந்தார். அத்துடன் சம்பந்தப்பட்ட சில விடயங்களை இக் கட்டுரையில் குறிப்பிட வேண்டும் போலத் தோன்றியது.

யாழ் - கொழும்பு ரயிலில் கோணர் சீற் பிடிப்பதற்காக யாழ் பட்டணத்தில் வசிப்பவர்களில் சிலரும் கோண்டாவில், சுண்ணாகம், காங்கேசன்துறை ஆகிய புகையிரத நிலையங்களுக்கு செல்வது வழக்கம். சில இளம் வாலிபர்கள் புகையிரதம் பிளாட்பாரத்துக்குள் நுழைந்து ஒரு சில வினாடிக்குள் அத்துடன் சேர்ந்து ஓடி, ஏறி கோணர் சீற் பிடிப்பது ஏதோ ஒரு சாகச நிகழ்வை பார்ப்பது போலிருக்கும். தந்தை செல்வாவின் மறைவின் பின் ஏற்பட்ட காங்கேசன்துறைத் தொகுதி வெற்றிடத்திற்கு தமிழரசுக் கட்சி சார்பில் போட்டியிடும் வேட்பாளரை "பாரளுமன்றம் செல்வதற்கு கோணர் சீற் பிடிக்கப் போனவர்" என்று யாழ் இந்துவில் எனது முன்னாள் ஆங்கில ஆசிரியரான கொம்யூனிஸ்ட் கார்த்திகேசன் ஹாஸ்சிமாக கூறுவார்.

பிரித்தானியர் 1864இல் சேவையை ஆரம்பித்த போதும் கனடியன் எஞ்சின் பொருத்தப்பட்ட யாழ்தேவி 1956லேயே சேவைக்கு வந்தது. அக்கால கட்டத்தில் இங்கு வசிக்கும் எம்மில் எவரும் எமது பிற்கால வாழ்க்கையையும் கனடிய எஞ்சின் தான் இழுத்து செல்லுமென்று சற்று ஊகித்துமிருக்கவில்லை. அக்காலத்தில் "தேசத்தின் நேரக்கணிப்பாளர்" என வர்ணிக்கப்பட்ட விமலதர்ம சகோதரர்களின் கிளை யாழ்ப்பாணத்தில் இல்லாதிருந்த போதும் புகையிரதங்கள் நேரக்கணிப்பாளர் களாக செயலாற்றின. அநேகமாக நேரம் தவறாமல் ஓடின.

பிரயாணிகள் U.K. எட்மண்டின் சிற்றுண்டிச் சாலையை அண்மித்தும் அதிலிருந்து வரும் "டபிள் ஓம்லற்" வாசம் மூக்கைத் துளைக்கும். அதைவிட அவர்கள் தயாரிப்பான "Three Coins Beer" சில பயணிகளை கொழும்பு செல்லும் வரை உற்சாகமாக வைத்திருக்கும். புகையிரதங் கள் அக்காலத்தில் வெளிமாவட்டங்களில் கணிசமான அளவில் சேவையிலிருந்த யாழ் அரச ஊழியருக்கு வரப்பிரசாதமாக இருந்தது. கல்வி காரணமாக தமது குடும்பங்களை யாழ்ப்பாணத்திலேயே வைத்து பராமரித்து தாம் மாதமொரு முறையாவது யாழ்ப்பாணம் வந்து செல்வதற்கு வாய்ப்பாக இருந்தது. பிராயாணச் சீட்டிலும் பல சலுகைகள் இருந்தன. இக்காரணத்தினாலும் வேறு சில காரணங்களாலும் யாழ்ப்பாணத்தின் அக்கால பொருளாதாரத்தை "மணி ஓடர் பொருளாதாரம்" என்று சில ஆசிரியர்கள் கூறுவார்கள்.

ரயில்வே திணைக்களத்தில் தமிழர்கள் காலம் காலமாக சில உயர் பதவிகளில் இருந்தார்கள். ஐம்பது நடுப்பகுதியில் கனகசபை G.M.R ஆக இருந்தார். இவர் இளைப்பாறிய பின்பும் G.M.R. கனகசபை என்றே குறிப்பிடப்படுவார்கள். இவர் பின் G.M.R ஆக பதவியேற்ற B.D றம்பாலா சிறந்த நிர்வாகி மட்டமல்ல றெயில்வேயின் தொழில்நுட்பத்தை தனது விரல் நுனியில் வைத்திருந்தவர். இவருக்கு அடுத்தபடியாக N.A வைத்தியலிங்கமும் (Chief Engineer Way And Works) P. றாஜகோபாலும் (Chief Mechanical Engineer) உயர் பதவிகளில் இருந்தனர். அத்துடன் A. சண்முகராஜாவும் (Operational Superintendent) முக்கிய பதவியில் இருந்தார். இவர்கள் அறுபது இறுதி வரை சேவையில் இருந்தார்கள். அறுபது நடுப்பகுதியில் நிர்மாணிக்கப்பட்ட யாழ் புகையிரத நிலையம் N.A. வைத்தியலிங்கத்தின் திட்டமிடலில் அமைக்கப்பட்டது என்று கூறுவார்கள்.

வடமாகாணமே இத் திணைக்களத்திற்கு அதி கூடிய வருமானம் ஈட்டிக் கொடுத்ததனால் அச் சேவையை திறம்பட இயக்குவதில் அதிக கவனம் செலுத்தப்பட்டது. எது எவ்வாறாயினும் நாட்டின் போர்ச்சூழ்நிலை காரணமாக 1990 ஜூன் 11ம் திகதியுடன் யாழ்ப்பாணத்திற்குரிய சகல சேவைகளும் ஸ்தபிதம் அடைந்தது. மீண்டும் இச்சேவை விரைவில் ஆரம்பமாகும் என்பது பலரின் எதிர்பார்ப்பும்.



**சி. மார்க்கண்டன்**
(இளைப்பாறிய பிரதம தபாலதிபர் யாழ்ப்பாணம்)

# G20 மாநாடு

ஒரு ஆபிரிக்கா கண்டத்தை சேர்ந்த நாடு தென் ஆபிரிக்கா மட்டுமே.

கனேடிய வரியிறுப்பாளர்கள் இம் மாநாட்டின் பாதுகாப்பு செலவினங்களுக்காக 100 கோடி கனேடிய டொலர் ($1 billion) செலவழிக்கிறார்கள். இப்பாதுகாப்பு செலவினங்களில் ஒன்றாக ரொறொன்ரோ நகரின் மையப்பகுதியில் மாநாடு நடைபெறும் இடத்தை சுற்றவரவுள்ள இடங்களை சுற்றி ஒரு பாதுகாப்பு வேலி கட்டப்பட்டு வருகின்றது.

இவ்வேலிக்கு மட்டுமே 55 இலட்சம் ($5.5 million) கனேடிய டொலர் செலவழிக்கப்பட உள்ளது.

## கனடாவின் தமிழர் தேசிய அவைக்கான தேர்தல்

ஜூன் 20, 2010ஆம் நாள் கனேடிய தமிழர் தேசிய அவைக்கு கனடா தழுவி 22 உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட உள்ளனர். இதில் 9 உறுப்பினர்கள் கனடா தழுவிய தேசிய பட்டியல் மூலம் தெரிவுசெய்யப்பட வுள்ளார்கள். இதில் 2 உறுப்பினர்கள் பெண்களுக்கும் 2 உறுப்பினர்கள் இளையோருக்குமாக ஒதுக்கப்பட்டுள்ளது.

ஏனைய 13 இடங்களும் மாகாணம் தழுவிய மாகாணப்பட்டியல் மூலம் தெரிவு செய்யப்படுவார்கள். இதில் 7 உறுப்பினர்கள் ஒன்ராறியோ மாகாணத்தில் இருந்தும் (2 உறுப்பினர்கள் பெண்கள் 2 உறுப்பினர்கள் இளையோர்) 4 உறுப்பினர்கள் கியூபெக் உட்பட கிழக்கு கனடாவில் இருந்தும் (1 உறுப்பினர் பெண், 1 உறுப்பினர் இளையோர்) 2 உறுப்பினர்கள் மேற்கு கனடாவில் இருந்தும் தெரிவு செய்யப்பட இருக்கிறார்கள்.

இதைவிட பெரும்பான்மை தமிழ் மக்கள் வாழும் பிராந்திய சபைகளுக்கான தேர்தலும் இதே தினத்தில் நடைபெறவுள்ளது. இதில் 30 உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட உள்ளனர். இவர்களில் 7 உறுப்பினர்கள் ரொறொன்ரோ கிழக்கில் இருந்தும், 3 உறுப்பினர்கள் ரொறொன்ரோ மேற்கில் இருந்தும் 7 உறுப்பினர்கள் யோர்க் பிரதேசத்தில் இருந்தும், 3 உறுப்பினர்கள் டுரம் பிரதேசத்திலிருந்தும், 5 உறுப்பினர்கள் பீல் பிரதேசத்திலிருந்தும், 5 உறுப்பினர்கள் மொன்றியலில் இருந்தும் தெரிவு செய்யப்படவுள்ளனர்.

இதில் போட்டியிடும் வேட்பாளர்கள் பற்றிய விபரங்களை www.tamilelections.ca என்ற இணையதளத்தில் பார்வையிடலாம்.

## பிரிட்டிஷ் கொலம்பியாவில் மண்சரிவு!

மலைச்சரிவில் மனிதனால் கட்டப்பட்ட குளத்தின் அணை உடைந்து கடந்த ஞாயிறு ஜூன் 13 அன்று பிரிட்டிஷ் கொலம்பியாவில் உள்ள ஒலிவர் பிரதேசத்தில் மண்சரிவு ஏற்பட்டது. இதனால் ஒரு உயிருக்கும் சேதம் ஏற்படாவிட்டாலும் ஏழுக்கு மேற்பட்ட



வீடுகளும் பல முந்திரிகை பந்தல்களும் பழத்தோட்டங்களும் அழிந்துள்ளன. இதனால் ஏற்பட்ட சேதம் கோடிக்கணக்கில் இருக்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. அச்சுற்றாடலில் 30 இற்கு மேற்பட்ட குடும்பங்கள் கனேடிய பாதுகாவலர்களினால் வெளியேறுமாறு உத்தரவிடப்பட்டுள்ளது. குளத்தில் உள்ள 2/3 பங்கு நீர் வழிந்தோடிவிட்டாலும் சுற்றாடல் சேறும் சகதியுமாக இருப்பதால் மேலும் மண் சரிவு ஏற்படலாம் என அஞ்சப்படுகிறது. இதனூடாகச் செல்லும் பெருந்தெரு (HWY 97) பாதுகாப்புக்கருதி பாவிப்பிற்கு தடை-செய்யப்பட்டுள்ளது.



## வாசகர்களின் எண்ணங்கள்

விளம்பரம்™ ஐ வாசிப்பவர்கள் தங்கள் எண்ணக்கருவை தெரியப்படுத்துமாறு கேட்டுக் கொள்கின்றோம். ஆக்கபூர்வமான உங்கள் கருத்தை இப்பகுதியில் வெளியிட இருக்கின்றோம். உங்கள் அபிப்பிராயங்களைக் கடிதம் மூலம், தொலைநகல் மூலம், அல்லது மின்னஞ்சல் மூலம் அனுப்புமாறு கேட்டுக்கொள்கிறோம்.

1. Vlambaram, 5215 Finch Ave. E. #201, Toronto, ON M1S 0C2
2. Tel.: 416.282.8059
3. Fax: 416.282.4978
4. email: vlambaram@sympatico.ca
5. web: vlambaram.com


விளம்பரம் VLAMBARAM™

விளம்பரம் பத்திரிகை 'விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ் இங்' ஆல் வெளியிடப்படுகிறது. விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களே பொறுப்பாளர்கள்.

**பதிப்புரிமை:** 2004 விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ். விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களை முழுமையாகவோ, பகுதியாகவோ ஆசிரியரின் எழுத்து மூல அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.

**Vlambaram, GTA SQUARE, 5215 FINCH AVE. E., #201, Toronto, ON M1S 0C2, Canada**
TEL: 416-282-8059 FAX: 416-282-4978
e-mail: vlambaram@sympatico.ca Web: www.vlambaram.com

ஜெனிஷா ரெயிலஸ் & டிசைன்ஸ்
*Jenisha Tailors & Designs*
Saree Blouses, Salwar Kameez, Party-Frocks,
Saree pleetting, Bridal Dressing, Facial, Threading
போன்ற தேவைகளைப் பூர்த்தி செய்ய அழையுங்கள்
குறித்த நேரத்தில்
குறைந்த செலவில் நிறைந்த சேவை



416.298.6917 / 416.802.1039/ 519.748.0553
1560 Brimley Road, #216, Brimley & Ellesmere / 920 Marlmeadow Crt., Kitchener, ON

# வாழத் துடிக்கும் வன்னி

## - ஒரு நேரடி ரிப்போர்ட்

"வன்னிப்பகுதியில் மீளக்குடியமர்ந்துள்ள மக்கள் மிகவும் நொந்து போயிருக்கின்றார்கள். மாதாந்தம் சீரான வருமானத்தைப் பெற்று கௌரவமாக வாழ்ந்து வந்த அவர்கள் இன்று கொட்டில் களிலும், கூடாரங்களிலும், உடைந்த, கூரைகள் இல்லாத வீடுகளிலுமே தஞ்சமடைந்திருக்கின்றார்கள். சுயமாகத் தொழில் செய்து பண்பாக, கௌரவமாக வாழ்க்கை நடத்தி வந்த அவர்கள் இன்று தெருவில் நிற்கின்றார்கள். அவர்களுக்கு எந்தவிதமான தொழில் வாய்ப்புகளும் இல்லை. விவசாயம், மீன்பிடி, வியாபாரம் போன்ற தமது சொந்தத் தொழில்களைக் கூட அவர்களால் இன்று செய்ய முடியாமல் இருக்கின்றது."

தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் அண்மைய வன்னி விஜயம் பற்றி அதன் தலைவர் ஆர்.சம்பந்தன் கூறிய வார்த்தைகள் இவை.

அவரது தலைமையில் தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் 12 நாடாளுமன்ற உறுப்பினர் கள் வன்னிப்பிரதேசத்திற்கு நான்கு நாள் விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்தார்கள். பல இடங்களுக்கும் சென்று நிலைமைகளை அவர்கள் நேரடியாகக் கண்டிருக்கின்றார்கள். நாட்டில் யுத்தம் முடிந்து ஒரு வருடமாகின்றது. இடம்பெயர்ந்தவர்களை மீள்குடியேற்றும் நடவடிக்கைகள் ஆரம்பமாகி சுமார் 8

**- செல்வரட்ணம் சிறிதரன் -**

மாதங்கள் ஆகின்றன. இந்த நிலையில்தான் முதல் தடவையாக அந்தப் பிரதேசங்களுக்கு குழுவாகச் சென்று பார்வையிடுவதற்கும், அங்குள்ள மக்களைச் சந்திப்பதற்கும் தமிழ் மக்களின் நாடாளுமன்ற பிரதிநிதிகளுக்குச் சந்தர்ப்பம் கிட்டியிருந்தது. யுத்தம் நடைபெற்ற போதும் சரி, யுத்தம் முடிவடைந்த பின்னரும் சரி, வன்னிப்பகுதிக்கு அரச தரப்பினர் மாத்திரமே சென்று வந்தார்கள். தேசிய பாதுகாப்பைக் காரணம் காட்டி, வேறு எவரையும் அரசாங்கம் அந்தப் பகுதிகளுக்குள் செல்வதற்கு அனுமதிக்கவில்லை.

பொதுத் தேர்தலின்போது, மீள்குடியேற்றம் செய்யப்பட்டுள்ள பகுதிகளில் தேர்தல் பிரசார நடவடிக்கைகளுக்காக எதிர்க்கட்சி யாகிய தமிழ்த்தேசிய கூட்டமைப்பினருக்கும் அனுமதி வழங்கப்பட்டிருந்தது. பரபரப்பான தேர்தல் பரப்புரை சூழல் அது. ஆகவே, மீள்குடியேற்றம் செய்யப்பட்டுள்ள மக்களின் உண்மையான நிலைமை என்ன, அவர்கள் எப்படி வாழ்கின்றார்கள் என்பதைத் தமது தலைவருடன் சென்று முழுமையாகக் கண்டறி-வதற்கான சந்தர்ப்பமாக அவர்களுக்கு அது அமையவில்லை. இறுதிக் கட்ட யுத்தத்தின் போது, சுமார் 3 லட்சம் பேர் இடம்பெயர நேர்ந்தது. யுத்தத்தின் இறுதி நாட்களில் என்ன நடந்தது என்பதை அறிவதற்கு உலகம் ஆர்வமாக இருந்தது. உலகத்தின் அந்த ஆர்வம் இன்னும் குறையவில்லை. ஆயினும், அதற்கான சந்தர்ப்பத்தை இலங்கை அரசாங்கம் கடைசி வரையிலும் சம்பந்தப்பட்ட எந்தத் தரப்பினருக்கும் வழங்கவில்லை. அதுமட்டுமல்லாமல், மீள் குடியேற்ற நடவடிக்கைகள் எவ்வாறு மேற்கொள்ளப்படுகின்றன என்பதைப் பார்வையிடுவதற்கும் அரசு அனுமதி மறுத்து வருவதையே காணக்கூடியதாக இருக்கின்றது.

யுத்தம் முடிவுக்கு வந்து ஒரு வருடத்திற்கு மேலாகிவிட்ட போதிலும் வன்னிப்பிரதேசத்திற்கு ஊடகவியலாளர்கள் சுதந்திரமாகச் சென்று வருவதற்கான அனுமதி அரசாங்கத்தினால் இன்னும் வழங்கப்படவில்லை.



"வன்னிப்பகுதிக்குச் செல்வதற்கு ஊடகவியலாளர்கள் எவரேனும் விரும்பினால் எங்களிடம் கூறுங்கள் நாங்கள் உங்களை அழைத்துச் சென்று அந்தப் பகுதிகளைச் சுற்றிக் காட்டுவோம்" என புதிய ஊடகத்துறை அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல கூறியுள்ளதாக ஊடகங்களில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத்தகைய ஒரு நிலையில்தான் தமிழ்த் தேசிய கூட்டமைப்பினரின் வன்னிப் பிரதேசத்திற்கான விஜயம் இடம்பெற்றிருக் கின்றது. வடபகுதியைப் பொருத்தமட்டில் அரசாங்கத்திடம் வெளிப்படைத்தன்மையான போக்கு இல்லை என்ற குற்றச்சாட்டு பரவலாக முன்வைக்கப்பட்டிருக்கின்றது. இறுதிச் சமரின்போது இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்படுகின்ற மிகமோசமான மனித உரிமை மீறல் சம்பவங்கள் குறித்து சுதந்திரமான விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் என்ற சர்வதேச கோரிக்கையும் அரசாங்கத்தின் இந்தப் போக்கு காரணமாகவே தொடர்ச்சியாக முன்னெடுக்கப் பட்டு, அது ஒரு விவகாரமாக விசுவரூபம் எடுத்து வருகின்றது. வெளிப்படைத்தன்மை இல்லாத காரணத்தினால், வன்னிப் பிரதேசத்தில் என்ன நடக்கின்றது என்பது பற்றி பலருக்கும் தெளிவாகத் தெரியாமல் இருக்கின்றது. ஆனால், "மீள்குடியேற்ற நடவடிக்கைகள் அங்கு சிறப்பாக நடைபெறுகின்றன. பல்வேறு அபிவிருத்தி வேலைகளையும், உட்கட்டமைப்பு வேலைகளையும் நாங்கள் மேற்கொண்டு வருகின்றோம். இடம்பெயர்ந்த மக்கள் தமது சொந்த இடங்களுக்குத் திரும்பிச் சென்று சந்தோஷமாக இருக்கின்றார்கள்" என்று அரசாங்கம் கூறுகின்றது.

இது உண்மையா? அங்கு நிலைமைகள் எப்படி இருக்கின்றன? அங்கு சென்ற தமிழ்த் தேசிய கூட்டமைப்பு குழு கண்டதென்ன?

தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் 14 நாடாளுமன்ற உறுப்பினர்களில் யாழ் மாவட்டப் பிரதிநிதிக-



ளாகிய சுரேஷ் பிரேமச்சந்திரன், அப்பாப்பிள்ளை வினாயக மூர்த்தி ஆகிய இருவரையும் தவிர, ஏனைய 12 நாடாளுமன்ற உறுப்பினர்களும் வன்னிப்பிரதேசத்திற்குச் சென்ற இந்தக் குழுவில் இடம்பெற்றிருந்தார்கள்.

புதுப் பொலிவு பெற்று வருகின்ற ஏ9 வீதியில் இந்தக் குழுவினர் ஐந்து வாகனங்களில் தமது பயணத்தை ஆரம்பித்தார்கள். பரபரப்பும் வாகன நெரிசலும் மிக்க இந்த வீதியில் ஓமந்தையைக் கடந்து புளியங்குளம் சந்தியைச் சென்றடைந்த வாகனத்தொடரணி, நெடுங்கேணி வீதியில் இறங்கியது. ஏ9 வீதியைப் போல வாகன நெரிசல் இல்லை. கரடு முரடான அந்த வீதி வெறிச்சோடிக் கிடந்தது. வளைந்து நெளிந்து சென்ற வீதியின் இரு பக்கங்களிலும் ஆங்காங்கே பற்றைகளும், வெளிகளும் இருந்தன. இடை இடையே மீளக்குடியமர்ந்துள்ள மக்களின் வாழ்விடமாக சிறிய சிறிய கூடாரங்கள் அமைக்கப்பட்டிருந்தன. காட்டுப்பாங்கான இந்தப் பிரதேசத்தில் மதியாமடு பாடசாலையின் மாடிக்கட்டிடம் வெளிப்பார்வைக்கு சேதங்களின்றி கம்பீரமாக உயர்ந்து நின்றிருந்தது. அருகில் பெண்களும் ஆண்களும் வீதியைத் துப்பரவு செய்யும் பணியில் ஈடுபட்டிருந்தார்கள். அவர்களிடத்தில் வாகனத் தொடரணி நின்றது. வந்திருப்பவர்கள் யார் என, சுருக்கமான ஓர் அறிமுகம். அதனையடுத்து, ஒரு மரநிழலில் சந்திப்பு நடைபெற்றது. மீள்குடியேற்றம் எப்படி இருக்கின்றது என நாடாளுமன்ற உறுப்பினர்கள் அவர்களிடம் வினவினார்கள்.

"எங்கள் ஊரில் 102 குடும்பங்கள். நாங்கள் 2009 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் ஒரு தொகுதியாகவும், இந்த வருடம் ஏப்ரல் மாதம் ஒரு தொகுதியாகவும் மனிக்பாம் முகாமில் இருந்து இங்கு வந்தோம். எங்கள் வீடுகள் எல்லாமே கல் வீடுகளாக இருந்தன. எல்லா வீடுகளும் இப்போது அழிந்திருக் கின்றன. சில வீடுகள் தரைமட்டமாக்கப்பட்டி ருக்கின்றன. கூடாரங்களில் தான் நாங்கள் வசிக்கின்றோம். தரப்பாள் கிடைக்காதவர் களும் இருக்கின்றார்கள். அவர்கள் பனை ஓலை, கிடுகுகளைப் பயன்படுத்தி கொட்டில்கள் அமைத்து இருக்கின்றார்கள் என அந்த மக்கள் தெரிவித்தார்கள்.

"எங்கள் ஊரில் 14 விதவைகள் இருக்கின்றார்கள். 16 ஷெல் தாக்குதல்கள் வான்தாக்குதல்களிலும் துப்பாக்கிச் சூட்டிலும் இறந்து போனார்கள். பத்துக்கும் மேற்பட்ட எங்களது பிள்ளைகள் தடுப்பில் இருக்கின்றார்கள். சிலரைக் காணவில்லை. அவர்கள் எங்கு இருக்கின்றார்கள் என்பது தெரியவில்லை. "மீளக்குடியமர்வு கொடுப்பன வாக 5 ஆயிரம் ரூபா முதலில் தந்தார்கள். பின்னர் 20 ஆயிரம் ரூபா கொடுத்தார்கள். இது எல்லோருக்கும் கிடைக்கவில்லை. மீள் குடியேற்றத்திற்காக பிந்தி வந்தவர்களுக்கு இந்தக் கொடுப்பனவு இன்னும் வழங்கப்படவில்லை.

"முதலில் வந்த 50 குடும்பங்களுக்கு குளத்தில் உள்ள நீரின் அளவுக்கு ஏற்றவகையில் காணிப்பங்கீடு செய்து நெல்விவசாயம் செய்வதற்கு அரசாங்கம் உதவி செய்துள்ளது. பிந்தி வந்தவர்களுக்கு இந்த உதவி கிடைக்கவில்லை. நிவாரணமாக உலருணவு தருகின்றார்கள். அதுவும் 6 மாதத்தில் நிறுத்தப்பட்டுவிடும் என்று சொல்கிறார்கள். எங்களுக்கு நிரந்தரத் தொழில் இல்லை. விவசாயம் செய்வதற்கு எல்லோருக்கும் வசத-யில்லை. உதவிகளும் கிடைக்கவில்லை. இதனால் உலருணவு நிவாரணத்தை மேலும் 6 மாதத்திற்காவது நீடிக்க வேண்டும்.

"எங்களுடைய காணிகள் எல்லாவற்றிலும் கிணறுகள் இருக்கின்றன. ஒருசில கிணறுகளை

தொடர்ச்சி 09ஆம் பக்கம்

STATE FARM Auto Life Fire INSURANCE
DISCOUNTS UP TO 30% ON CAR INSURANCE
Li Chen, Agent
http://www.licheninsurance.ca
Bus: 416-431-6800
Mano Selvam
Auto Insurance Representative
Bus:416-431-6800
தமிழில் உரையாடுவோம்
1200 Markham Road, Suite# 123, Scarborough, ON M1H 3C3
Intersection: Markham Road & Ellesmere Road
State Farm • Head Office, Aurora, Ontario • statefarm.ca™

APPLEMORE AUTOMOTIVE
உட்புற, வெளிப்புற திருத்த பராமரிப்பு வேலைகளுக்கு என்றும் உங்கள் மத்தியில்
ONTARIO'S DRIVE CLEAN
Accredited Test & Repair Facility
• Detailing
• Motor Shampoo
• Interior Shampoo
• Exterior Wash
• Waxing
• Repairs
• Safety Certification
• Overall Maintenance
• Under Coating
• Rust Proofing
416-285-4998
435 Midwest Road. Unit B5, Scarborough, ON. M1P 3A6
SPECIAL

# ஈஷாவின் பசுமைக்கரங்கள் திட்டத்திற்கு தேசிய விருது

ஈஷா பசுமைக் கரங்கள் திட்டத்திற்கு, 2008ம் வருடத்திற்கான இந்திரா காந்தி பர்யவரன் புரஸ்கார் (IGPP) விருது ஜூன் 5ந் தேதி, இந்திய அரசாங்கத்தால் வழங்கப்பட்டது.




From Left:- Shri. Salman Kurshid - Union Minister of State for Corporate Affairs, Dr. A.P. J. Abdul Kalam - Former President, Shri. Sachin Pilot - Union Minister of State for Minority Affairs and Sadhguru J Vasudev - Founder, Isha Foundation. Sadhguru Receives Indira Gandhi Paryavaran Puraskar from Dr. A.P.J. Abdul Kalam.

பசுமைக்கரங்கள் திட்டம் மக்களிடையே சுற்றுப்புற விழிப்புணர்வை ஏற்படுத்தி சுற்றுச்சூழல் மாசுபடுவதைத் தவிர்க்கும் முயற்சியை பெருமளவில் மேற்கொண்டதை அங்கீகரித்து இந்த விருது வழங்கப்பட்டது.

இந்த விருது ஐந்து லட்ச ரூபாயையும், ஒரு வெள்ளித் தாமரைக் கோப்பையையும் உள்ளடக்கியது. புதுடெல்லியில் விஞ்ஞான் பவனில் அன்று நடந்த விழாவொன்றில் முன்னாள் ஜனாதிபதி A.G. அப்துல் கலாம் அவர்களால் இந்த விருது வழங்கப்பட்டது. உலகச் சுற்றுச்சூழல் தினத்தைக் கொண்டாடும் பொருட்டும், தாங்கள் இவ்விருது பெறுவதை முன்னிட்டும் ஈஷா பசுமைக் கரங்கள் திட்டம், ஜூன் 5 அன்று, தமிழ்நாட்டில் 32 இடங்களில் மரக்கன்றுகளை நட்டது.

சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அமைச்சகம், 1987 ஆம் ஆண்டு இந்த விருதை (IGPP) துவக்கி வைத்தது. இந்த தேசிய விருது, முன்னாள் பிரதமர் இந்திராகாந்தி அவர்களின் பெயரில் வழங்கப்படுகிறது. சுற்றுச்சூழலின் பாதுகாப்பு, பராமரிப்பு, மறுஉருவாக்கம், சுற்றுச்சூழல் விழிப்புணர்வு மற்றும் பிரச்சாரம் ஆகியவற்றில் அரும்பணி புரியும் தனிநபர் அல்லது அமைப்புகளுக்கு இவ்விருது வழங்கப்படுகிறது. இந்த விருதிற்கானவரை தேர்ந்தெடுக்கும் முன் அவர்கள் செய்த வேலையின் பயன், அதன் புதுமை, பயன் பெறும் நபர்கள் அதாவது பெண்கள், கிராமப்புறத்தினர், நகர்புறத்தில் வாழும் ஏழை மக்கள் மற்றும் இந்த அமைப்பினால் ஏற்பட்ட விளைவுகள் மற்றும் இந்தத் திட்டத்தின் நிரந்தரத் தன்மை ஆகிய அனைத்தும் அலசி ஆராயப்படுகிறது.



## சத்குரு வாசுதேவ்

ஆகியவற்றுடன் சேர்ந்து பல்வேறு சுற்றுச்சூழல் நிகழ்வுகளில் நகர்புறங்களைப் பசுமையாக்கும் பொருட்டு தமிழ்நாடு முழுவதிலும் பிரச்சாரம் செய்துவருகிறது.

ஈஷா தொண்டு நிறுவனம், மதச்சார்பற்ற, பொதுநலச்சேவை புரியும் நிறுவனமாகும். இது தன்னை உணர்ந்த ஞானியான சத்குரு ஜக்கி வாசுதேவ் அவர்களால் நிறுவப்பட்ட ஒன்று.


# Inner Engineering Program

Date: **August 11th to 17th**

Location: **Toronto Botanical Garden,**

777 Lawrence Avenue East ,

(Lawrence & Leslie intersection), Toronto, ON M3C 1P2 - Canada

Free Introductory talk on August 11th at 6:30pm to 7:30pm

ALL ARE WELCOME

Session Info: ***Morning Session : 9:30 am to 12:30 pm*** OR

***Evening Session: 6:30 pm to 9:30 pm***

Website: www.ishafoundation.org / www.ishayoga.org

Email: toronto@ishafoundation.org Phone: 1-866-424 - ISHA (4742)


இந்தப் பசுமைக் கரங்கள் திட்டம், சுற்றுப்புறச் சூழலை பாதுகாக்கும் பொருட்டு ஈஷா பௌண்டேஷனால் ஏற்படுத்தப்பட்டது. சுற்றுச்சூழலை பாதுகாத்து சரியான ஆரோக்கிய நிலையை உருவாக்கும் பொருட்டு பசுமையை அதிகரிக்கவும், மண்வளத்தை நிலைப்படுத்தவும், இயற்கை வளங்களை சரியான முறையில் மேலாண்மை செய்யவும் தேவையான நடவடிக்கை எடுக்கிறது.

இதன் வடிவமாக பசுமைக்கரங்கள் திட்டம், அது ஆரம்பிக்கப்பட்ட 2004ம் வருடத்திலிருந்து 82 லட்சம் மரக்கன்றுகளை, 20 லட்சத் தன்னார்வத் தொண்டர்களுக்கும் மேலானவர்களைக் கொண்டு நட்டுள்ளது. 2006ஆம் வருடத்தில் இரண்டரை லட்சத்திற்கும் மேலான தன்னார்வத் தொண்டர்கள், 3 நாட்களில் 8,56,000 மரக்கன்றுகளை நட்டனர். இச்செயல் கின்னஸ் உலக சாதனையில் இடம் பெற்றுள்ளது. பசுமைக்கரங்கள் திட்டம் அரசாங்கம், தொழில் நிறுவனங்கள், பள்ளிகள், கல்லூரிகள் மற்றும் அரசு சாரா நிறுவனங்கள்

இது மனிதனின் அனைத்து நலன்களையும் கருத்தில் கொண்டுள்ளது. இது முற்றிலும் இலாபமற்ற தன்னார்வத் தொண்டர்களால், மனிதவள மேம்பாட்டிற்காக அமைக்கப்பட்ட நிறுவனமாகும். ஈஷா சமூகநலத் திட்டங்கள் என்பது ஈஷா தொண்டு நிறுவனத்தில் சமூக மேம்பாட்டிற்காக நிறுவப்பட்ட ஒரு கிளையாகும். இதன் முக்கிய நோக்கம் இந்தியாவில் நலிந்த சமுதாயத்தினரிடம் ஆரோக்கியம், கல்வி, சுற்றுச்சூழல் நலம் ஆகியவற்றை மேம்படுத்துவதாகும். இதன் பொருட்டு 2,50,000 தன்னார்வத் தொண்டர்கள் செயல் புரிந்து வருகின்றனர். பசுமைக்கரங்கள் திட்டம், கிராமப் புத்துணர்வு இயக்கம் மற்றும் ஈஷா வித்யா கல்வி நிறுவனங்கள், ஈஷா சமூகநலத் திட்டங்களின் மூன்று பகுதிகளாக உள்ளன. இவை கிராமப்புற ஏழை மக்களின் வாழ்வை உருமாற்றம் செய்யும் முயற்சியில், ஒன்றுக்கொன்று தொடர்புடையவையாகவும், உணர்வுப்பூர்வமானவைகளாகவும் உள்ளன.


# TORONTO BUSINESS COLLEGE

கணக்கியல் கல்வியில் ஓர் முதன்மை நிறுவனம்



**Computerized Accounting Diploma**

- EI பெற்றுக்கொண்டிருப்பவர்கள் ✔
- 2005 ஆண்டு January க்குப்பின் EI பெற்றவர்கள் ✔
- 5 வருடங்களுக்குள் Maternity Benefits பெற்றவர்கள் ✔

அரசாங்க நிதி உதவியில் கற்கலாம்

EI,WSIB,ODSP,WELFARE

பெறுபவர்கள் வரவேற்கப்படுகிறார்கள்

Our Experienced Counselor Will Help You To Apply For Funding

INSTRUCTORS

★ Pushpa ★ SP

More than 20 years of teaching experience

CERTIFICATE COURSES

**Buy One Get One Free**

Windows,Key Boarding,Data Entry,Word,Excel,Power Point

Access,Outlook,Quick Books,Simply Accounting,Accpac

Certificate Will Be Issued On Successful Completion

**416-291-5155**

4465 Sheppard Ave. East #208 (Sheppard & Brimley)


Scarborough

OACC PROUD MEMBER

www.t-businesscollege.com

(Registered as a Private Career College under the Private Career Colleges Act 2005)





# சந்திரமௌலீஸ்வர சிவாலயம்

தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்

ஆலயம் திறந்திருக்கும் நேரம்

வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில் காலை 7am - மாலை 9pm வரை

திங்கள் - வியாழன் - காலை 7am - 2pm மாலை 5pm - 9pm

விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம். ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்

**Tel: 416 . 754 . 7338 / 416 .724 .7480**

3011 Markham Road , Unit 62 & 63 (North of McNicoll Ave.), Scarborough

# போருக்குப் பிந்திய அரசின் போக்கு அழிவிலிருந்து மீண்ட நாட்டின் முன்னேற்றத்திற்கு வழிவகுக்குமா?

இலங்கையில் இருந்து மங்களநாதன் அரவிந்தன்

விடுதலைப்புலிகளை இராணுவ ரீதியாகத் தோற்கடித்ததன் ஒரு வருட நிறைவை வெற்றி விழாவாகக் கொண்டாடுவதற்கு இலங்கை அரசாங்கம் எடுத்த முயற்சி இயற்கையின் சீற்றத்தினால் நிறைவேறாமல் போனது. மே மாதம் 18 ஆம் திகதி கடந்த வருடம் விடுதலைப் புலிகள் தோற்கடிக்கப் பட்டதாக அரசாங்கம் அதிகாரபூர்வமாக அறிவித்திருந்தது. விடுதலைப் புலிகளும் தமது ஆயுதப் போராட்டத்தைக் கைவிடுவ தாக (தமது ஆயுதங்கள் மௌனிக்கப்படுவ தாக) அப்போது அறிவித்திருந்தார்கள். விடுதலைப்புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் இராணுவத்தின ரால் கொல்லப்பட்டதாக அரசாங்கம் கூறியிருந்தது. இந்த நிலையில் புலம்பெயர் தமிழர் சமூகத்திலிருந்து விடுதலைப் புலிகளின் பெயரால் இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

கடந்த ஒரு வருட காலமாக இலங்கையில் போர் நடவடிக்கைகள் ஓய்ந்து அமைதி நிலவுகின்றது. இந்த ஒரு வருட காலமாக அரசாங்கம் போர் நடைபெற்ற பகுதிகளைக் கட்டியெழுப்புவதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றது. போர் நடவடிக்கைகள் காரணமாக சுமார் 3 லட்சம் பொதுமக்கள் இடம்பெயர்ந்து போர்ப்பிரதேசத்தில் இருந்து இராணுவத்தின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திற்குள் வந்திருந்தார்கள்.

வவுனியா செட்டிகுளம் மனிக்பாம் முள்கம்பி முகாம் தொகுதிக்குள் கடுமையான இராணுவ பாதுகாப்பினுள் வைக்கப்பட்டிருந்த இந்த மக்களில் இரண்டு லட்சத்திற்கும் அதிகமான-வர்கள் அவர்களது சொந்த இடங்களில் மீள்குடியேற்றம் செய்யப்பட்டிருக்கின்றார்கள் என்று அரசாங்கம் கூறிவருகின்றது. இவர்களில் பெரும்பான்மையானவர்கள் தமது உறவினர்கள் நண்பர்களது வீடுகளில் வசித்து வருகின்றார்கள் என்பது அரச அதிகாரிகளின் தகவலாகும்.

மீள்குடியேற்றம் இடம்பெற்று வருகின்ற வன்னிப்பிரதேசத்தில் போர்க்காலத்தைப் போலவே எங்கும் நிறைந்துள்ள இராணுவத்தி னர் பாதுகாப்பு கடமையுடன், மீள்குடியேற்ற நடவடிக்கைகளிலும் தீவிர கவனம் செலுத்தி வருகின்றனர். நகரமாக இருந்தாலும் சரி, குக்கிராமமாக இருந்தாலும் சரி, இராணுவத்தின் அனுமதி பெற்றே மீள் குடியேற்றம் செய்யப்பட வேண்டும் என்ற நியதி எழுதாத சட்டமாகக் கடைப்பிடிக்கப் பட்டு வருகின்றது.

நாட்டில் யுத்தம் முடிந்துவிட்டது. இராணுவத்தின் வேலைகளும் முடிந்துவிட்டன என்றுதான் எல்லோரும் நினைத்திருந்தார்கள். ஆனால் இங்கு நிலைமை வேறுவிதமாகவே இருக்கின்றது. போர்க்காலத்தைப்போலவே இராணுவத்தின் பிரசன்னம் வவுனியா, மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம் ஆகிய வடபகுதி மாவட்டங் களில் நிரந்தரமாகக் காணப்படுகின்றது. மொத்தத்தில் ஓர் இராணுவ ஆட்சிக்குரிய அனைத்து லட்சணங்களும் இங்கு காணப்படுகின்றன. அதற்கான நடைமுறைகளே கிரமமாக அதிகாரிகளினாலும், அரசாங்கத்தினாலும் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது.



"யுத்தம் முடிவுற்ற ஒரு வருட நிறைவு நாளாகிய கடந்த 18 ஆம் திகதி யையொட்டி, கொழும்பில் 20 ஆம் திகதி வெற்றிவிழா கொண்டாட்டங்களுக்கான ஆயத்தங்களை அரசாங்கம் செய்திருந்தது. காலிமுகத் திடலில் இதனை கோலாகலமாக நடத்துவதற்கான ஏற்பாடுகள் மட்டுமல்லாமல், அதற்கான ஒத்திகைகளும் இடம்பெற்று வந்தன. ஆயினும் அந்த வாரத்தில் கொழும்பிலும் அதனைச் சூழ்ந்த மாவட்டங்களிலும் பெய்த அடைமழை, கோரமான இடிமின்னல் தாக்குதல்களினால் இந்தக் கொண்டாட்டங்கள் கைவிடப்பட்டன."

இந்தச் சூழ்நிலையில்தான், விடுதலைப் புலிகள் தோற்கடிக்கப்பட்ட ஒரு வருட நிறைவின்போது மே மாதத்தின் 27 ஆம் 28 ஆம் திகதிகளில் பௌத்தர்களின் அதிமுக்கியத்து வம் மிக்க வெசாக் பண்டிகை கொண்டாடப்பட்டிருக்கின்றது.

யுத்தம் முடிவுற்ற ஒரு வருட நிறைவு நாளாகிய கடந்த 18 ஆம் திகதி யையொட்டி, கொழும்பில் 20 ஆம் திகதி வெற்றிவிழா கொண்டாட்டங்களுக்கான ஆயத்தங்களை அரசாங்கம் செய்திருந்தது. காலிமுகத் திடலில் இதனை கோலாகலமாக நடத்துவதற்கான ஏற்பாடுகள் மட்டுமல்லாமல், அதற்கான ஒத்திகைகளும் இடம்பெற்று வந்தன. ஆயினும் அந்த வாரத்தில் கொழும்பிலும் அதனைச் சூழ்ந்த மாவட்டங்களிலும் பெய்த அடைமழை, கோரமான இடிமின்னல் தாக்குதல்களினால் இந்தக் கொண்டாட்டங்கள் கைவிடப்பட்டன.


காலிமுகத்திடலில் வெற்றிவிழா ஏற்பாடுகளில் இராணுவத்தினர் முழுமூச்சாக ஈடுபட்டிருந்த போது தாக்கிய இடி மின்னல் காரணமாக 4 பேர் கொல்லப்பட்டனர். மேலும் சிலர் காய மடைந்ததாக சிங்கள ஊடகங்கள் தகவல் வெளியிட்டிருந்தன. இந்தப் பின்னணியில் தான் வெசாக் பண்டிகையை வெற்றிவிழா கொண்டாட்டத்திற்கு நிகரானதாகக் கொண்டாடுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

வெசாக் பண்டிகை என்பது பௌத்த சமயம் சார்ந்த முக்கியமான ஒரு விழாவாக கருதப்படுகின்ற போதிலும், வடமாகாணத்தில் நிலை கொண்டுள்ள இராணுவத்தினர் அதனை விடுதலைப்புலிகள் தோற்கடிக்கப் பட்ட வெற்றிவிழாவாகக் கொண்டாடுவதைப் போலவே அமைந்திருந்தது. இராணுவ முகாம்கள், பொலிஸ் நிலையங்கள் என்பவற்றில் வெசாக் தோரணங்கள் அலங்காரப்பந்தல்கள் என்பவற்றை சிங்களப் பிரதேசங்களைவிட அதிகமாக படையினரால் அமைக்கப்பட்டிருக்கின்றது. குறிப்பாக யாழ்ப்பாணத்தில் இதனைக் கண்கூடாகக் காணக்கூடியதாக இருந்தது.

விடுதலைப்புலிகளிடமிருந்து மீட்கப்பட்டதாக அரசாங்கத்தினால் குறிப்பிடப்படுகின்ற வன்னிப்பிரதேசத்தின் மாங்குளம், மல்லாவி, துணுக்காய், கிளிநொச்சி, ஒட்டுசுட்டான், புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு என்று பல இடங்களிலும் ஆடம்பரமாக வெசாக் பண்டிகைக்கான அலங்காரங்கள் காணப்பட்டன. சமயம் சார்ந்த பண்டிகை என்னும்பொழுது, அதனை குடும்பத்தாருடன் குதூகலமாகக் கொண்டாடுவதே மரபு. ஆனால், இலங்கையில் அரசாங்கத்தின் ஆசிர்வாதத்துடன், போர் நடைபெற்ற பிரதேசங்களில் போர் முடிவுற்று ஒரு வருடத்திற்கு மேலாகிவிட்ட பின்பும் நிலைகொண்டிருக்கும் படையினர் இந்த வெசாக் பண்டிகையை மரபுக்கு மீறிய வகையில் தமது இராணுவ வெற்றியை குறிக்கும் வகையில் கொண்டாடுகின்றார்கள்.

போரினால் பாதிக்கப்பட்ட மக்கள் மீள்குடியேற்றத்திற்காக போர்ப்பிரதேசத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டிருக்கின்றார்கள். முழுமையாக அழிந்துள்ள அந்தப் பிரதேசங்களில் அவர்கள் அடிப்படை வசதி களற்ற நிலையில் தமது வாழ்க்கையை மீண்டும் ஆரம்பிப்பதற்கு அல்லாடிக் கொண்டிருக்கின்றார்கள். போரின் தாக்கம், அவர்களுக்கு ஏற்பட்டுள்ள இழப்புக்கள் என்பவற்றில் இருந்து அவர்கள் இன்னும் மீளமுடியாத ஒரு சோகமான மனநிலையில் இருக்கும் போது, இராணுவத்தினரின் இந்த வெற்றிக்கொண்டாட்ட நடவடிக்கைகள் அவர்களைப் பொறுத்தமட்டில், வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவதைப்போலவே அமைந்திருக்கின்றன. பத்து பன்னிரண்டு கூரைத்தகடுகள், ஒரு சில தடிகள், இரண்டு

தொடர்ச்சி 08ம் பக்கம்



# கலாய்க்கும் உதைபந்தாட்டம்

## விளையாட்டுத் தகவல்கள் 284

ஜேர்மனியின் பயன் விளையாட்டுக் கழகத்துக்கு விளையாடி இம்முறை ஐரோப்பிய கழக சம்பியன் இறுதி ஆட்டத்துக்கு இட்டுச் சென்ற பெருமை இவரையே சாரும். பறக்கும் வீரர் என வர்ணிக்கப்படும் இவர் இம்முறை ரசிகர்களை மகிழ்விப்பார் என நம்பலாம்.

4. கிறிஸ்ரியானோ றொனால்டோ (போர்த்துக்கல்) - 2006 உலகக் கிண்ணப் போட்டிகளில் அசத்திய றொனால்டோ இவ்வருடம் ஸ்பெயினின் ரியால் மற்றிக் விளையாட்டுக் கழகத்தில் 35 போட்டிகளில் 33 கோல்களை போட்டுள்ள இவர் தன்னுடைய தனிப்பட்ட திறமை மூலம் போர்த்துக்கல் அணிக்கு இம்முறை உலகக் கிண்ணத்தை பெற்றுக்கொடுப்பாரா என்பது சந்தேகத்துக்குரிய விடயம். இந்த நட்சத்திரங்களை விட வெயின் றூணி (இங்கிலாந்து), மைக்கான் (பிறேசில்), சாமுவேல் (கமறுன்), டின்சி (USA), பெர்ணான்டோ டோறஸ் (ஸ்பெயின்), பிராங் றிபெரி (பிரான்ஸ்) இப்படியான முன்னணி வீரர்களின் திறமைகளை ரசிகர்கள் கண்டுகளிக்க ஆவலாக உள்ளனர்.

என்னுடைய கணிப்பின்படி பிரேசில், ஜேர்மனி, கொலண்ட், ஆஜென்ரீனா இந்நான்கு நாடுகளில் இரண்டு நாடுகள் இறுதி ஆட்டத்துக்கு தகுதி பெறும் என்று நம்புகின்றேன். ஆனாலும் இங்கிலாந்து அணியை குறைத்து மதிப்பிட முடியாது என்ற நப்பாசையில் இருந்த எனக்கு நேற்று நடைபெற்ற இங்கிலாந்து எதிர் அமெரிக்க ஆட்டம் மண்ணைப் போட்டுள்ளது. எந்தவொரு உலகக் கிண்ணத்திலும் இங்கிலாந்து அணிக்கு அதிஷ்ட தேவதையினுடைய பக்கம் திரும்புவதில்லை. 1982 ஆம் ஆண்டு உலகக் கிண்ணப் போட்டிகளில் முதல் பிரிவு ஆட்டங்களில் எந்த வொரு போட்டிகளிலும் தோல்வியடையாத நிலையில் கோல் வித்தியாச புள்ளி அடிப்படையில் இங்கிலாந்து வீடு செல்ல நேர்ந்தமையும் 1986 ஆம் ஆண்டு மூன்று தடவைகள் உலகக் கிண்ணத்தை வென்ற (1990, 1998, 2006) ஆஜென்ரீனா அணியில் விளையாடிய மரிடோனா கையால் பந்தை கோலுக்குள் அடித்து பரிதாபகரமாக இங்கிலாந்தை வெளியேற்றியமையும் ரசிகர்கள் யாவரும் மறந்திருக்க முடியாது. ஆபிரிக்க மண்ணில் ஆறு ஆபிரிக்க நாடுகள் இம்முறை கலந்து கொண்டாலும் 1950 ஆம் ஆண்டு சொந்த மண்ணிலேயே பிரேசில் மண் கவ்வியதும் 1992 ஆம் ஆண்டு சொந்த நாட்டிலே மண்கவ்வியதை வைத்துப் பார்த்தால் இம்முறை சுதந்திர சுவாசக் காற்றை சுவாசிக்கும் தென் ஆபிரிக்கா தன்னுடைய சொந்த மண்ணில் சாதிக்குமா என்பது கேள்விக்குறியே?

பொறுத்திருந்து பார்ப்போம். அசத்தப் போவது யாரு?. மேலும் பல தகவல்கள்...

• தென்னாப்பிரிக்கா வின் ஜோகன்னஸ் பர்க்கில் உள்ள சொக்கர் சிட்டி மைதானம் (Soccer City stadium), எல்லிஸ்பார்க் மைதானம், போர்ட் ஒப் எலிசபெத்தில் உள்ள நெல்சன் மண்டேலா மைதானம், கேப்டவுன் கிரீன் பாயிண்ட் மைதானம், நெல்ஸ் புரூட் மொம்பேலா மைதானம், பிரிட்டோரியாவில் உள்ள லூப்டஸ் வெர்ஸ்பி.்.ல்ட் மைதானம், போலக்வானேயில் உள்ள பீட்டர் மோகாபா மைதானம், புளோயம் பாண்டீனில் உள்ள பிரீ ஸ்டேட் மைதானம், ரஸ்டன்பர்க்கில் உள்ள ரோயல் பாபோகெங் மைதானம், டர்பனில் உள்ள மபிடா மைதானம் ஆகிய 10 மைதானங்களில் போட்டிகள் நடைபெறவுள்ளன.

• மொத்தம் 32 அணிகள் பங்கேற்கின்றன.

• பல்வேறு நாட்டின் கொடிகள், வீரர்களின் உடைகள் என தென்னாப்பிரிக்கா முழுவதும் கோலாகலமாக காட்சியளிக்கிறது. தென்னாப் பிரிக்காவில் மட்டுமின்றி உலகின் அனைத்துப் பகுதிகளிலும் கால்பந்து ஜூரம் பரவியுள்ளது.



• உலகக் கோப்பை கால்பந்து திருவிழா ஆரம்ப நிகழ்ச்சிகள் ஜோகன்னஸ்பர்க்கில் உள்ள சொக்கர் சிட்டி மைதானத்தில் நடக்கிறது. முதல் ஆட்டத்தில் தென்னாப்பி ரிக்க அணி மெக்சிகோவை எதிர்கொள்கிறது.

• தங்கள் நாட்டு அணியினரை உற்சாகப்படுத்துவதற்காக வெளிநாட்டினர் ஏராளமானோர் தென்னாப்பிரிக்காவில் குவிந்துள்ளனர். ரசிகர்களின் வசதிக்காக போக்குவரத்து வசதிகள் தென்னாப்பிரிக்க நகரங்களில் விரிவாகச் செய்யப்பட்டுள்ளன.

• மேலும் போட்டியின்போது தீவிரவாதிகள் தாக்கும் அபாயம் இருப்பதாக செய்திகள் வெளியாயின. இதையடுத்து தீவிரவாத தாக்குதல்களை முறியடிக்கும் வகையில் கடுமையான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட் டுள்ளன. இதற்காக முக்கிய நகரங்களில் போலீஸ் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

கோப்பை கனவு நனவாகுமா? கால்பந்து போட்டியில் இந்தமுறை தென்னாப்பிரிக்கா கோப்பையை வெல்லுமா என்ற எதிர்பார்ப்பு தென்னாப்பிரிக்க கால்பந்து ரசிகர்களிடையே அதிகரித்துள்ளது.

• உலகக் கோப்பை கால்பந்துப் போட்டியை ஏராளமான பொருள் செலவில் தென்னாப்பிரிக்கா நடத்தவுள்ளது. உலகத் தரத்தில் மைதானங்கள் கட்டப்பட்டுள்ளன. கிரிக்கெட், கால்பந்து என உலகக் கோப்பை போட்டிகளை தென்னாப்பிரிக்கா நடத்தினாலும் இதுவரை கோப்பையை வெல்லவில்லை என்ற குறை இருந்து வருகிறது.

• ஒவ்வொரு முறையும் கோப்பையை வெல்லும் உத்வேகத்தோடு தென்னாப்பிரிக்கா களமிறங்கி னாலும், துரதிர்ஷ்டவசமாக ஆட்டத்திலிருந்து வெளியேறுவதை தவிர்க்க முடியவில்லை.

• ஆனால் இந்தமுறை சொந்த மண்ணில் உள்ளூர் ரசிகர்களின் ஆதரவோடு தென்னாப்பிரிக்கா களமிறங்குகிறது. இதுவரை எந்த விளையாட்டிலும் பெரிய அளவில் கோப்பைகளை வெல்லவில்லை என்ற குறை ஒருபுறம் இருக்க, எப்படியும் தென்னாபிரிக்கா சாம்பியனாக முயற்சிக்கும் என்ற எதிர்பார்ப்பு ரசிகர்களிடையே அதிகரித்துள்ளது.

• ரசிகர்களின் கோப்பை கனவு நனவாகுமா? என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும்.

### அணிகள் இடம்பெற்றுள்ள பிரிவுகள்

ஏ பிரிவு: தென்னாபிரிக்கா, மெக்சிகோ, பிரான்ஸ், உருகுவே.
பி பிரிவு: ஆர்ஜென்டீனா, நைஜீரியா, கிரீஸ், தென்கொரியா.
சி பிரிவு: இங்கிலாந்து, அமெரிக்கா, அல்ஜீரியா, ஸ்லோவேனியா.
டி பிரிவு: ஜெர்மனி, கானா, ஆஸ்திரேலியா, செர்பியா
இ பிரிவு: நெதர்லாந்து, டென்மார்க், ஜப்பான், கேமரூன்.
எ.்.ப் பிரிவு: இத்தாலி, பராகுவே, நியூசிலாந்து, ஸ்லோவேகியா.
ஜி பிரிவு: பிரேசில், வடகொரியா, ஐவரிகோஸ்ட், போர்ச்சுகல்.
எச் பிரிவு: ஸ்பெயின், ஸ்விட்சர்லாந்து, ஹோண்டுராஸ், சிலி.

5-வது முறையாக பிரேசில் சாம்பியன்

2002-ம் ஆண்டு நடைபெற்ற 17-வது உலகக் கோப்பை கால்பந்து போட்டியை கொரியா, ஜப்பான் ஆகியவை இணைந்து நடத்தின. இது ஆசியாவில் நடைபெற்ற முதல் உலகக் கோப்பை போட்டியாகும். இந்த போட்டியில் தான் கோல்டன் கோல் விதிமுறை அறிமுகம் செய்யப்பட்டது. இப்போட்டியில் மொத்தம் 32 அணிகள் பங்கேற்றன.

• காலிறுதி ஆட்டத்தில் பிரேசில் இங்கிலாந்தையும், ஜெர்மனி அமெரிக்காவை யும், ஸ்பெயின் கொரியாவையும் வீழ்த்தி, செனிகலை துருக்கியும் வீழ்த்தி அரை இறுதிக்குள் நுழைந்தது. அரைஇறுதி ஆட்டத்தில் ஜெர்மனி 1-0 என்ற கோல் கணக்கில் கொரியாவையும், பிரேசில் 1-0 என்ற கோல் கணக்கில் துருக்கியையும் வென்று இறுதிச்சுற்றுக்குள் நுழைந்தன. இறுதி ஆட்டத்தில் பிரேசில் 2-0 என்ற கோல்கள் கணக்கில் ஜெர்மனியை வீழ்த்தி சாம்பியன் பட்டத்தைக் கைப்பற்றியது. மூன்றாவது இடத்திற்கான ஆட்டத்தில் துருக்கி 3-2 என்ற கோல்கள் கணக்கில் கொரியாவை வீழ்த்தியது.

• பிரேசிலின் ரொனால்டோ கோல்டன் பூட்ஸ் விருதையும், ஜெர்மனியின் கோல்கீப்பர் கோல்டன் போல் விருது, யாசின் விருது ஆகியவற்றையும் வென்றனர். பெல்ஜியம் அணிக்கு பி.்.பா பேர் பிளே டிராபி விருதும், சிறந்த பொழுது போக்கு அணிக்கான விருது கொரியாவுக்கு வழங்கப்பட்டது. உலகக் கோப்பை வரலாற்றில் கோல்டன் பந்து விருதை வென்ற ஒரே கோல் கீப்பர் ஒலிவர்கான்தான். இந்தபோட்டியில் மொத்தம் 161 கோல்கள் அடிக்கப்பட்டன. பிரேசிலின் ரொனால்டோ அதிகபட்சமாக 8 கோல்கள் அடித்து கோப்பையை வெல்லக் காரணமாக அமைந்தார். 1998-ம் ஆண்டு இறுதி ஆட்டத்தில் சோபிக்காமல் போன ரொனால்டோ, 2002-ம் ஆண்டு இறுதி ஆட்டத்தில் சிறப்பாக விளையாடி அந்தக் குறையைப் போக்கினார். சிறந்த வீரருக்கான விருது ஜெர்மனியின் ஒலிவர்கானுக்கு வழங்கப்பட்டது.

இத்தாலிக்கு கோப்பை

• 2006-ம் ஆண்டு நடைபெற்ற 18-வது உலகக் கோப்பை போட்டியை ஜெர்மனி நடத்தியது. 12 முக்கிய நகரங்களில் போட்டிகள் நடத்தப்பட்டன. ஜூன் 9 முதல் ஜூலை 9 வரை போட்டிகள் நடை-பெற்றன.

• காலிறுதி ஆட்டத்தில் ஜெர்மனி ஆர்ஜென்டினாவையும், இத்தாலி உக்ரைனையும், போர்ச்சுகல் இங்கிலாந்தையும், பிரான்ஸ் பிரேசிலையும் வீழ்த்தி அரைஇறுதிக்குத் தகுதிபெற்றது.

• அரை இறுதிச்சுற்றில் இத்தாலி 2-0 என்ற கோல்கள் கணக்கில் ஜெர்மனியையும், பிரான்ஸ் 1-0 என்ற கோல் கணக்கில் போர்ச்சுகல்லையும் வீழ்த்தி இறுதிப்போட்டிக்கு தகுதிபெற்றது.


• இறுதிப்போட்டியில் இத்தாலி 1(5)-1(3) என்ற கோல்கள் கணக்கில் பிரான்ஸை வீழ்த்தி கோப்பையை வென்றது. மூன்றாவது இடத்துக்கான போட்டியில் ஜெர்மனி- போர்ச்சுகல் அணிகள் மோதின. இதில் ஜெர்மனி 3-1 என்ற கோல்கள் கணக்கில் போச்சுகல்லை வீழ்த்தியது.

• கோல்டன் பூட்ஸ் விருது அதிக கோல்கள் (5) அடித்த ஜெர்மனி வீரர் மிரோஸ்லேவ் குளோசிக்கும், கோல்டன் பந்து விருது இத்தால-ியின் ஸின்டைன் ஸிடேனுக்கும், யாசின் விருது இத்தாலி வீரர் ஜியன்லுய்கி ப.ீபூனுக்கும், சிறந்த வீரருக்கான விருது ஜெர்மனி வீரர் லூக்காஸ் போடோல்ஸ்கிக்கும், .்.பிபா பேர்பிளே விருது பிரேசில், ஸ்பெயின் அணிகளுக்கும், சிறந்த பொழுதுபோக்கு அணிக்கான விருது போர்ச்சுகல்லுக்கும் வழங்கப்பட்டன. இந்தப் போட்டியில் 147 கோல்கள் அடிக்கப்பட்டன. இந்தப்போட்டி அதிகமானோர் தொலைக்காட்சி மூலம் பார்த்து ரசித்த போட்டி என்ற சாதனையையும் படைத்தது.



எஸ். கணேஷ்

ELECTRICAL WORKS



FRIDGE, WASHER, DRYER போன்ற மின் உபகரண திருத்த வேலைகள் செய்து கொடுக்கப்படும். நியாயமான கட்டணம். தரமான சேவை. வாடிக்கையாளர்களின் நன்மதிப்பீடு.

தொடர்புகளுக்கு: ஈசன் - 416-286-2880

# ஆதன வியாபாரத்தில் ஒன்றிணைந்த வரியின் தாக்கம்

## HST

ஒன்ராரியோ மாகாண அரசும், பிரிட்டிஸ் கொலம்பியா மாகாண அரசும், கனடா நாளாகிய யூலை 1ஆம் திகதியிலிருந்த மாகாண அரசின் வியாபார வரியையும் மத்திய (நடுவன்) அரசினால் அறவிடப்படும் பொருட்களிற்கும், சேவைகளிற்குமான வரிகளை, இணைத்து, தனிப்பட்ட ஒருவரியாக அறிவிடப்பட இருக்கின்றது.

இந்த இணைந்த / சேர்க்கப்பட்ட வியாபாரத்திற்கான வரி (Harmonized Sales Tax = HST) என அழைக்கப்படுகின்றது. இப்பொழுது ஒன்ராரியோ மாகாணத்தில் இருக்கும் 8% ஆன வியாபார வரியும் (PST), நடுவண் அரசின் 5% ஆன பொருட்களிற்கும், சேவைகளிற்குமான வரியும் இணைந்து 13% ஆன அறவிடப்பட இருக்கின்றது. இந்த புதிய அறவிடுதலினால் சாதாரண மக்கள் மேலதிக வரி செலுத்தப்படல் வேண்டும். இது அரசினால் வசூலிக்கப்படும் புதிய வரியாகும். இந்த மேலதிக சுமையிலிருந்து கனடிய மக்கள் உடனடியான சிறிய நிவாரணம் பெற 1 பில்லியன் பெறுமதியான டொலர், மக்களிற்கு கொடுக்கப்பட இருக்கின்றது.

புதிய இணைந்த வரியை, இன்றைய லிபரல் கட்சி மார்ச் 09, 2009 இல் முதல் தடவையாக அறிவித்தது. இந்த இணைந்த புதிய வரிக்கு ஆரம்பத்திலிருந்து எதிர்ப்பு மிகவும் பலமாக இருந்த போதிலும், ஒன்ராரியோவில் இருக்கும் லிபரல் மாகாண அரசின் பலத்தினால் சட்டம் இலகுவாக நடைமுறைக்கு கொண்டு வரப்பட்டுள்ளது. எனவே இந்த வரி யூலை 1ஆம் திகதியிலிருந்து எதுவித தடைகளும் இல்லாமல் நடைமுறைப்படுத்தப்படும். அதுமட்டுமல்லாமல், ஏற்கனவே இந்த வரி நடைமுறைக்கு வந்துள்ளது என்பதனை எதிர்காலத்தில் செய்யப்படும் சேவைகளிற்கு இப்பவே அறவிடப்படுவதனை காணலாம். ஆதனம் சம்பந்தமான வியாபாரத்தில் இதன் பாதிப்பு எவ்வாறு இருக்கும்? நிச்சயமாக இந்த புதிய வரியின் பாதிப்பு, உடனடியாகக் காணப்படும் என்பது உண்மை. காலப்போக்கில் மறந்து போகலாம். அல்லது வேறு ஒரு புதிய விதமான வரி நடைமுறைக்கு வரும்போது இதன் பாதிப்பு மறைந்து போகும். இவ்வாறே GST (Goods and Sales Tax) வரியை பிறையன் மல்றோனி (Brian Mulroney) அரசு கொண்டு வந்த போதும் பலவிதமான, எதிர்ப்புகள் இருந்தது. இப்பொழுது இந்த வரி வாழ்க்கையின் ஒரு பகுதியாக மாறியுள்ளதைக் காணலாம். இதனைப்பற்றி ஒருவரும் குறை சொல்வதனைக் காண முடியாது. புதிய வரி எவ்வாறு எப்படி அறவிடப்படும்:

1. ஆதனம் விற்பதற்கான செலவில் (Commission) இதுவரை ஆதனம் விற்பதற்கான தரகு செலவிற்கு (Commission) GST வரி அறவிடப்பட்டு வருவதனை வாசகர்கள் அறிவார்கள். இதுவரை 5% ஆக அறவிடப்பட்ட தொகை, யூலை01, 2010 இலிருந்து தரகு செலவிற்கு 13% (GST=5% மற்றும் PST=8%) HST நடைமுறைப்படுத்தப்படும்.

உதாரணம்: விற்கப்பட்ட ஆதனத்தின் விலை $300,000 எனவும் மொத்தமாக அறவிடப்படும் தரகு 4% எனவும் கொள்வோம்.

இப்பொழுது நடைமுறையில் உள்ளதின்படி தரகுச் செலவு $200,000 x 4/100 = $8,000 ஆகும்.

இதற்குரிய GST = $8,000 x 5% = $400
அதாவது GST $400 அறவிடப்பட்டுள்ளது.

புதிய நடைமுறையின்படி (யூலை 01, 2010 இற்கு பிற்பாடு)
புதிய வரி HST = $8,000 x 13% = $1040

GST $400, HST $1040
அதாவது மேலதிக $640 அறவிடப்படும். இந்த மேலதிக அறவீடு HST இனால் அதிகரித்ததாகும்.

2. இது ஒரு உதாரணம். இந்த முறையிலே கணக்கிடப்படும் முதல் தடவையாக வாங்கும், விற்கும் வீடு அல்லது மனை தவிர அதாவது Resales மனைகளிற்கு HST அறவிடப்படமாட்டாது.

தொடர்ச்சி 09ஆம் பக்கம்

நாமும் நமது இல்லமும்
ராஜா மகேந்திரன்
தொடர் - 321


HomeLife GTA Realty Inc., Brokerage
Independently Owned & Operated
"கனவு உங்களுடையது பொறுப்பு எங்களுடையது"
1711 Mccowan Rd. #206, Toronto - Tel: 416.321.6969
145 Traders Blvd #29, Mississauga - Tel: 905.712.2666



Raja M. Mahendran, P. Eng
(Broker / Owner)

BUSINESS FOR SALE
$64,900 + STOCK




* HWY 401 & WESNEY - AJAX
* Best location / Main road exposure
* Over $7,000 weekly sales
* Lotto Commission over $1500 monthly
* Asking Only $69,000
* Very reasonable rent.
* Easily converted into Grocery/ Convenience store.
* Don't miss the chance

HOUSE FOR SALE
AURORA



* BAYVIEW & SPRINGFARM
* Detached 2-Storey * 4 bedrooms
* Finished Walkout Basement
* 5 Washrooms * Doule garage
* 6 Years old house * Ceramic floor
* Hardwood floor * Granite
* Stainless fridge, stove, dishwasher Exhaust fan, gas stove, fridge, washer dryer, All Elfs, chandelier, california shutters, garage Door Opener, Granite, Hardwood Floor, Central Air, Hwt(R)

HOUSE FOR SALE
$288,888



* DIXIE & FINCH
* 2 Storey detached house
* 3 + 1 bedrooms
* 2 Washrooms
* All ELFS, Fridge, stove, washer Dryer, central Air, Garage Door Opener & Remote, Beautifully Decorated with Laminate Flooring & Broadloom, Finished Basement with Wood Burning Fireplace, Renovated Washroom.

CONDO FOR SALE
$159,000



* FINCH & WARDEN
* 2 + 1 Bedrooms
* 2 Washrooms
* Fridge, stove, washer, dryer, All Elfs, cac, parking (Tandem = 2 cars may be parked
* Security System
* Recreation Room
* Exercise Room

SPACE FOR RENT



Middlefield / Finch
* Second Floor Unit In Gta Square Shopping Mall.
* Conveniently Located On The South-East Corner Of Middlefield Rd. & Finch Ave. E.
* Unit Is Close To A Main Entrance
* High Traffic Area & Plenty Of Surface And Underground Parking Available.
* Some Other Units Available For Sale Or Lease

CONODO FOR SALE
$ 214,000



Mccowan/Steeles
* Luxury Condo , 2+1 bedrooms.
* Spacious Unit With Solarium.
* Bright, Clean And Well Kept Unit.
* Best Recreation Facilities.
* Huge Living & Dining,Beautiful Lay Out.
* New Laminate Floor On Living & Dining Area.
* Fridge(1Yr), Stove,B/I
* Dishwasher(1Yr), Microwave,
* Washer And Dryer. Ensuite Laundry,
* All Window Covrings And All Elfs.
* Walk To Ttc School,Shopping,
* Library And All Other Amenities.
* Great Location.

CONDO FOR SALE
$ 107,900



Sheppard / Neilson
Bright 2-Bdrm/2 Bath Corner Unit.
Master Bedroom With 2 Pc Ensuite And Walk-In Closet.One Of The Largest Unit In The Building.
Why Rent If You Can Own For Less Money?
Walk To Shopping, Ttc, Schools, Library, Recreation Centre, Doctors' Office,Good Investment**Easy To Rent
Stove, Fridge, B/I Dishwasher, Great Location-Across From Mall, Ttc At The Door, Walk To Medical Centre, Schools, Library And Rec Centre.
Mins To 401 & Scarborough Town Centre. Parking# B2-24, Locker#b2-66

STORE FOR SALE
79,000 PLUS STOCK



Highway 401/Westney
* Established Con/Variety Store In Good Area Of Ajax.
* Nice Setup.
* Lotto Commission And
* Atm Commission Over $2000/Month.
* Steady Custumer Traffic.
* All Chattels And Equipment As Is.

CONODO FOR SALE
$ 152,900



Neilson / Finch
Immaculate Luxury 'Mayfair Condo' About 1000Sqft.
Amazing South East Exposure. Extremely Spacious Unit.
Georgeous Laminate Flooring In Living, Dining And Bedrooms.
Full Sized Washer And Dryer. 2 Full Baths. Large Walk-In Close t In Master Bedroom With Separate Shower And Tub. Huge Eat-In Kitchen.
Close To Mall, Ttc, Schools And Highway 401, With Good Recreational Facilities Incl., Outdoor Tennis Court And 24Hrs Gate House Security
Fridge, Stove, Built-In Dishwasher, Stack Up Washer And Dryer, All Electric Light Fixtures, All Window Coverings.

HOUSE FOR SALE
$ 349,000



Morningside/Finch
Absolutley Immaculate, Shows Well, Finished Bsmt With Apt,Close To To All Local Amenities.
Fridge,Stove,Washer,Dryer,B/I Dishwasher, All Window Covering And Elfs.

Nantha Aiyadurai, B.Eng.
Real Estate Broker
Cell: 613 850 9931

COLDWELL BANKER

கனடாவின் தலைநகர் ஒட்டாவாவில்

Buying or Selling

Relocation Service
Ottawa> > > < < < GTA



நந்தா ஐயாத்துரை

Coldwell Banker Sarazen Realty, Brokerage 2544 Bank St. Ottawa, Ontario K1T 1M9 Office: (613) 288-1999 Fax: (613) 288-1555

# போருக்குப் பிந்திய...

05ஆம் பக்கத்தொடர்ச்சி

அல்லது மூன்று தரப்பாள்கள், சமையலறைக்குரிய பாத்திரங்கள், ஒரு கோடரி, ஒரு கத்தி, ஒரு குப்பைவாரி, ஒரு மாதத்திற்கான உலருணவு - இவைதான் அனைத்தையும் இழந்து வெறும் கையோடு மீள்குடியேற்றத்திற்காகத் தமது கிராமங்களுக்குச் சென்றுள்ள இடம்பெயர்ந்த குடும்பங்களுக்குப் புதிய வாழ்க்கையை ஆரம்பிப்பதற்காக வழங்கப்பட்டுள்ள முதலீடாகும்.

குடிநீருக்கும், மலசலகூடம் உட்பட்ட சுகாதார வசதிகளுமின்றி சிரமப்படுகின்ற இந்த மக்கள் பாதுகாப்பற்ற கூடாரங்களிலேயே வசித்து படுத்துறங்குகின்றார்கள். அவர்களது சொந்த ஆலயங்கள் அழிந்து கிடக்கின்றன. துயரம் தோய்ந்துள்ள மனதுக்கு ஆறுதல் பெறுவதற்காக அங்கு செல்லவோ, அல்லது மனக்கவலைகளை தமது இஸ்ட தெய்வங்களிடம் பிரார்த்தனையின் ஊடாகப் பகிர்ந்து ஆறுதலடையவோ இயலாத ஒரு துக்ககரமான நிலையில் இந்த வெசாக் கொண்டாட்டங்கள் அமைந்திருக்கின்றன.

விடுதலைப்புலிகளின் அரசியல் தலைநகரமாகத் திகழ்ந்த கிளிநொச்சி நகரின் மத்தியில் (இங்கு முன்பு ஒரு பௌத்த விகாரை அமைந்திருந்தது என்பது குறிப்பிடத்தக்கது) பிரம்மாண்டமான முறையில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள பௌத்த விகாரையில் விசேட அலங்காரங்கள் விசேட வழிபாடுகள், பிரித் ஓதுதல் என்பன நடைபெற்றன. அந்த பௌத்த விகாரையின் சூழலில் குடியேறியுள்ள மக்களினதும், கிளிநொச்சி நகரத்திற்குப் பல்வேறு தேவைகளுக்காகவும் வந்து செல்கின்ற மீளக்குடியமர்ந்துள்ள மக்களினதும் துயரத்தை மேலும் அதிகரிக்கச் செய்வதாகவும் அமைந்திருந்தது. அத்துடன், தமது சொந்தக் கிராமங்களில், சொந்த நகரத்தில் சுதந்திரத்தை இழந்து அன்னியமாகிவிட்ட ஓர் உணர்வையுமே அவர்களிடம் ஏற்படுத்தியுள்ளது.

தமிழ் மக்களின் கலாசாரத் தலைநகரமாக யாழ்ப்பாணம் அடையாளப்படுத்தப்படுகின்றது. அந்த நகரில் இப்போது இராணுவத்தினர் ஆயிரக்கணக்கில் குவிக்கப்பட்டுள்ளார்கள். வீதிகள் தோறும், கிராமங்கள் எங்கும், கடைவீதிகள் முழுதும் அவர்கள் காணப்படுகின்றார்கள். குடாநாடு முழுதும் ஆங்காங்கே பெரிதும் சிறிதுமாக அமைக்கப்பட்டுள்ள இராணுவ முகாம்கள் தோறும் வெசாக் பண்டிகைக் கொண்டாட்டம் வெகு சிறப்பாக நடைபெற்றுள்ளது. இது யாழ். குடாநாட்டு மக்களின் கலாசார மனநிலையை சீண்டுவதாகவும், அதற்கு சவால் விடும் வகையிலும் அமைந்திருந்ததாகவே பலரும் கூறுகின்றார்கள். இலங்கையில் புரையோடிப் போயுள்ள இனப்பிரச்சினையானது, இந்த நாட்டின் இருபெரும் சமூகங்களாகிய சிங்களம் மற்றும் தமிழ் மக்களிடையே பாரிய இடைவெளியைத் தோற்றுவித்திருக்கின்றது.



பெரும்பான்மை இனத்தவராகிய சிங்களத் தலைவர்களினால் அரசியல் ரீதியாக ஒடுக்கப்பட்ட தமிழ் மக்கள் அந்தத் தலைவர்களை மட்டுமல்லாமல், சிங்கள மக்களையும் சந்தேகக் கண்கொண்டே பார்க்கும் மனோபாவம் பல ஆண்டுகளாகவே நிலவி வருகின்றது. அஹிம்சை ரீதியான அரசியல் போராட்டங்கள் ஆயுத ரீதியாக, அதிகார பலத்துடன் அடக்கப்பட்டதனால், ஆயுதந் தரித்த அதிகார பலத்தை எதிர்ப்பதற்காகத் தமிழ் மக்கள் சார்பில் முளைவிட்ட ஆயுதப் போராட்டம் சிங்கள மக்களை தமிழ் மக்களிடம் இருந்து அன்னியப்படுத்தியது வரலாற்று நிகழ்வாக இருக்கின்றது.

இந்த அன்னியத்தன்மையானது, தமிழ் மக்களின் அரசியல் உரிமைக்காக ஆயுதப் போராட்டத்தை முன்னெடுத்த விடுதலைப் புலிகளை பரம எதிரிகளாக நோக்கும் நிலைமைக்கு இலங்கையில் அடுத்தடுத்து வந்த அரசாங்கங்கள் சிங்கள மக்களை இட்டுச் சென்றன. நாளடைவில் ஆயுதப் போராட்டம் நடத்தி வந்த விடுதலைப் புலிகளை மட்டுமல்லாமல், தமிழ் மக்களையும் தமது பரம விரோதிகளாக நோக்கும் நிலைக்கு சிங்கள மக்களை அரசு வழிநடத்திச் சென்றிருந்தது. இந்த நிலையில் இராணுவத்தின் மேலாதிக்கத்தின் மூலம் தமிழர்களின் ஆயுதப் போராட்டம் நசுக்கப்பட்டதையடுத்து, விடுதலைப்புலிகளை மட்டுமல்லாமல் தமது எதிரிகளாகிய தமிழ் மக்களையும் வென்றுவிட்டோம் என்ற இறுமாப்பான போக்கு இராணுவத்திடமும், இப்போது யாழ்ப்பாணத்திற்கு பெருமளவில் படையெடுத்து வருகின்ற சிங்கள மக்களிடமும் காணப்படுகின்றது.

நாட்டில் யுத்தம் முடிந்த கையோடு, போரினால் பாதிக்கப்பட்ட மக்களின் மனங்களை வெல்வதற்கும், அவர்களின் நம்பிக்கையைப் பெறுவதற்குமான செயற்பாடுகளை அரசாங்கம் முன்னெடுக்கும் என்று தமிழ் மக்கள் நம்பினார்கள். ஆனால் அந்த நம்பிக்கையை அரசாங்கம் அடுத்தடுத்து தகர்த்து வருவதையே காணக் கூடியதாக இருக்கின்றது.

யுத்தம் முடிந்தவுடன், குறிப்பிட்ட காலத்திற்கு முன்னதாகவே நடத்தப்பட்ட பொதுத் தேர்தலில் மக்களால் தெரிவு செய்யப்பட்ட தமிழ் பிரதிநிதிகளுடன் பேச்சுக்கள் நடத்தி தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு அரசியல் தீர்வு காணப்படும் என்று ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச அறிவித்திருந்தார். அத்துடன் இடம்பெயர்ந்த மக்கள் தமது சொந்த இடங்களுக்குத் திரும்பிச் சென்று கௌரவமாக வாழக்கூடிய வகையில் மீள்குடியேற்ற நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என்றும் அவர் உறுதியளித்திருந்தார். ஆயினும் இந்த இரண்டு முக்கிய விடயங்களிலும் அரசாங்கம் பாராமுகமாக நடந்து கொள்வதாகவே கருத வேண்டியிருக்கின்றது.

தமிழ் மக்களினால் வடக்கு கிழக்குப் பிரதேசங்களில் இருந்து நாடாளுமன்றத்திற்குப் பெரும்பான்மையாகத் தெரிவு செய்யப்பட்டுள்ள தமிழ்த்தேசிய கூட்டமைப்பினரைப் பேச்சுவார்த்தைக்கு ஊடகங்களின் ஊடாக ஜனாதிபதி அழைப்பு விட்டாரேயொழிய, அதற்கு மேல் அந்த விடயத்தில் ஆக்கபூர்வமான நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை.

இடம்பெயர்ந்த மக்கள் அவசர அவசரமாக மீள்குடியேற்றத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ள போதிலும், அவர்களுக்கான அடிப்படை வசதிகளை சீராகவும், சகலருக்கும் கிடைக்கத்தக்க வகையிலும் நடவடிக்கை எடுப்பதற்கு அரசாங்கம் தவறியுள்ளதையே மீள்குடியேற்றப் பகுதிகளுக்குச் செல்பவர்களினால் காணக்கூடியதாக இருக்கின்றது.

அண்மையில் மீள்குடியேற்றப் பகுதிகளுக்குச் சென்றிருந்த தமிழ்த்தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழு தாங்கள் அங்கு நேரடியாகக் கண்டவற்றையும், மீளக்குடியமர்ந்துள்ள மக்கள் தங்களிடம் தெரிவித்த கருத்துக்களையும் ஆதாரமாகக் கொண்டு அரசாங்கம் போதிய நடவடிக்கைகளை மீள்குடியேற்றச் செயற்பாடுகளில் எடுக்கவில்லை என தமிழ்த்தேசிய கூட்டமைப்பு தெரிவித்திருந்தது.

தமிழ்த்தேசிய கூட்டமைப்பு தெரிவிப்பதில் எந்தவிதமான ஆதாரமும் இல்லை. அதன் கூற்று உண்மைக்கு மாறானது என அரசாங்கம் இப்போது மறுத்துரைத்துள்ளது, மீள்குடியேற்றப் பகுதிகளில் பல்வேறு அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. மீளக்குடியமர்ந்துள்ள மக்கள் மகிழ்ச்சியாக அங்கு வாழ்கின்றார்கள் என்றும் அரசாங்கம் முழு பூசணிக்காயை சோற்றில் மறைப்பது போல அடித்துக் கூறுகின்றது.

இனப்பிரச்சினை விவகாரத்தில் போருக்குப் பிந்திய இலங்கை அரசாங்கத்தின் நிலைப்பாடும், அரசியல் போக்கும் அழிவுகளில் இருந்து மீண்டுள்ள அந்த நாட்டை கட்டியெழுப்பி முன்னேற்றப்பாதையில் வழிநடத்திச் செல்ல உதவுமா என்ற கேள்வி விசுவரூபமெடுக்கத் தொடங்கியுள்ளது.




# வாழத் துடிக்கும்...

03ஆம் பக்கத்தொடர்ச்சி

மட்டுமே இறைத்து சுத்தம் செய்து உதவியிருக்கின்றார்கள். இதனால், எல்லோருக்கும் சுத்தமான குடிநீரைப் பெற்றுக்கொள்ள முடியாமல் இருக்கின்றது. கிணறுகளை இறைத்துச் சுத்தம் செய்துதர வேண்டும். இறைப்புக்கு நீர் இறைக்கும் இயந்திரங்களை வழங்கி உதவினால், நாங்கள் தோட்டச் செய்கையில் ஈடுபட வசதி யாக இருக்கும்” என்று மதியாமடு ஊர் மக்கள் ஒரே குரலில் நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் கூறினார்கள்.

சேதமடைந்த கட்டிடத்தில் இயங்கத் தொடங்கியுள்ள பாடசாலைக்கு பிள்ளைகள் சென்று கல்வி கற்கின்றார்கள். ஆனால் பலருக்கு சப்பாத்துக்கள் இல்லை. கொப்பிகள், புத்தகங்களும் தேவையாக இருக்கின்றது. முன்னர் சைக்கிள்களில்தான் பிள்ளைகள் பாடசாலைக்குப் போவார்கள். தொலைவில் உள்ள பிள்ளைகள் இப்போது நடந்துதான் வருகின்றார்கள். அவர்களுக்கு சைக்கிள்கள் வேண்டும். அருகில் உள்ள புளியங்குளத்திற்கு அவசரத் தேவைக்குச் செல்வதாக இருந்தால், நாங்கள் நடந்துதான் செல்ல வேண்டும். முல்லைத்தீவு, முத்தையன்கட்டு ஆகிய இடங்களில் மக்கள் மீளக்குடியமர்த்தப்பட்டிருப்பதனால், வவுனியாவுக்கும் அந்த இடங்களுக்கும் இடையே சேவையில் ஈடுபடுகின்ற பஸ் வண்டிகளைத்தான் நாங்களும் போக்குவரத்திற்காகப் பயன்படுத்துகின்றோம். ஆனால் அவசரத் தேவைக்கு அந்த போக்குவரத்து எங்களுக்கு தோதாக இல்லை. முன்னர் எங்கள் வீடுகளில் மோட்டார் சைக்கிள்கள், சைக்கிள்கள் எல்லாம் நின்றன. இப்போது அந்தரம் ஆபத்துக்குப் பயன்படுத்தக்கூட ஊரில் சைக்கிளே இல்லாத நிலைமையாகத்தான் இருக்கிறது என்றும் அந்தக் கிராம மக்கள் தெரிவித்துள்ளார்கள்.

குறிப்பிடத்தக்கது. அருகில் இருந்த மதியாமடு பாடசாலைக்குச் சென்ற போது மாணவர்கள் கற்றலில் ஈடுபட்டிருந்தார்கள். தளபாடப் பற்றாக்குறை காரணமாக பல மாணவர்கள் வகுப்புத் தரையில் அமர்ந்து படித்துக் கொண்டிருந்தார்கள். பலருக்கு சப்பாத்துக்கள் இல்லை. வெறுங்காலுடன் இருந்தார்கள்.

பாடசாலை அதிபர் ஆசிரியர்களுடனான சுருக்கமான சந்திப்பின் பின்னர் ஊர் தெருக்களில் வாகனத் தொடரணி ஊர்ந்தது. பற்றைகளாகக் கிடந்த காணிகளில் நடு நடுவே சுத்தம் செய்யப்பட்ட சிறிய காணிப்பகுதியில் கூடாரங்கள் அமைக்கப்பட்டிருந்தன. ஒரு சில கொட்டில்களும் காணப்பட்டன. உடைந்த வீட்டுச்சுவர்களின் உதவியோடு சிலர் தரப்பாள்களை மூடி கூரை அமைத்திருந்தார்கள்.

நாடாளுமன்றக் குழு அங்கிருந்து நெடுங்கேணி நகரைச் சென்றடைந்தது. போரினால் மிகவும் பாதிக்கப்பட்டிருந்த அந்தக் கிராமிய நகரம் உயிர்த்துடிப்போடு காணப்பட்டது. மக்கள் வீதிகளில் காணப்பட்டார்கள். கடைகள் சில புதிதாகத் திறக்கப்பட்டிருந்தன. அதற்கு அடையாளமாக உடைந்த கட்டிடங்களிலும் கொட்டில்களிலும் வியாபாரப் பொருட்கள் வைக்கப்பட்டிருந்தன. பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் மக்களோடு மக்களாக அந்தப் பிரதேசத்திற்கு வந்திருந்தது தெரிந்தது. ஆலயம் ஒன்று சிதைந்த நிலையில் இருந்தது. அருகில் வான் ஒன்றில் பல்வேறு மரக்கன்றுகள் கொண்டு வரப்பட்டிருந்தன. அதனைச்சுற்றி ஆண்களும் பெண்களுமாக விரல்விட்டு எண்ணக்கூடிய சிலர் மரக்கன்றுகளை வாங்குவதற்காக நின்றுகொண்டிருந்தார்கள்.

நெடுங்கேணி மகாவித்தியாலயத்திற்கு அருகில் ஒரு சிறிய கூட்டம். சுமார் நூறுபேர் இருக்கும். மீள்குடியேற்றக் கொடுப்பனவாகிய 5 ஆயிரம் ரூபா போக, வங்கிக் கணக்கில் இடப்படுகின்ற



இந்தச் சந்திப்பு முன்கூட்டியே ஒழுங்கு செய்யப்பட்டதாக இல்லை. நெடுங்கேணிக்குச் சென்ற வழியில் வீதியில் காணப்பட்ட பொதுமக்களிடம் நடத்தப்பட்ட ஒரு சந்திப்பாக இருந்தது.

மதியாமடு மட்டுமல்ல. வன்னிப்பிரதேசத்திற்குச் சென்ற இடங்கள் எல்லாவற்றிலுமே இத்தகைய சந்திப்பே நடைபெற்றது. இதன் ஊடாக வன்னியில் மீளக்குடியமர்ந்துள்ள மக்களின் குறுக்குவெட்டு முகச் சந்திப்பாக இந்தச்சந்திப்புகள் அமைந்திருந்தன என்பது

மிகுதி 20 ஆயிரம் ரூபாவுக்கான சேமிப்புப் புத்தகத்தைப் பெறுவதற்காக அவர்கள் காத்திருந்தார்கள். அதிகாரிகள் வருவதற்குத் தாமதமாகும் எனத் தெரிந்தது. நெடுங்கேணியை அண்டிய பட்டிக்குடியிருப்பு, மாறாஇலுப்பை, துவரங்குளம், பட்டறை பிரிந்தகுளம், கீரிசுட்டான், சேனைப்பிலவு போன்ற கிராமங்களில் மீளக் குடியமர்த்தப்பட்டிருந்த குடும்பத் தலைவர்களும் குடும்பத் தலைவிகளும் அங்கிருந்தார்கள். அவர்களிடம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பேச்சுக்கொடுத்தார்கள். இந்தப் பிரதேசத்தில் உள்ள அனைத்து கிராமங்களுமே யுத்த மோதல்களின்போது மிகமோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளன. மாறாஇலுப்பை கிராமத்தில் கணவனை இழந்தவர்களின் எண்ணிக்கை அதிகம். ஏனைய அயல் கிராமங்களிலும் பார்க்க ஒப்பீட்டளவில் இது கூடுதலாக இருப்பதாக அந்தக் கிராமத்தைச் சேர்ந்த முக்கியஸ்தர் ஒருவர் கூறினார். இங்கு 150 குடும்பங்கள் இருக்கின்றன.

சேனைப்பிலவு என்பது நெடுங்கேணி பகுதியில் ஒரு கிராமம். இங்கு ஒரு பாடசாலை இருந்தது. 90 மாணவர்கள் இங்கு கல்வி கற்றார்கள். இப்போது 60 மாணவர்கள் படிக்கின்றார்கள். 2008 ஆம் ஆண்டு இந்தக் கிராமம் இடம்பெயர்ந்தது. முள்ளிவாய்க்கால்வரையில் சென்று மனிக்பாம் முகாமில் அடைபட்டிருந்து இப்போதுதான் மக்கள் ஊருக்குத் திரும்பியுள்ளார்கள். பாடசாலை தரைமட்டமாகக் கிடக்கின்றது. மரங்களுக்கு

தொடர்ச்சி 12ஆம் பக்கம்

# ஆதன வியாபாரத்தில்...

07ஆம் பக்கத்தொடர்ச்சி

3. புதிதாக நிர்மாணம் செய்யப்படும் நிறுவனத்திலிருந்து வாங்கும் போது ஏற்கனவே GST அறவிடப்பட்டது போல HST அறவிடப்படும். (இருந்தபோதிலும் அரசின் Rebate நடைமுறையில் இருக்கும் என்பதனையும் கவனத்தில் கொள்ளவும்.

4. வீடு அல்லது மனைகளின் வாடகைக்கு HSTஅறவிடப்படமாட்டாது. ஆனால் கட்டிட, வியாபார நிலையங்களின் வாடகைக்கு HST அறவிடப்படும்.



உதாரணமாக வியாபார அல்லது கட்டிட நிலையத்தில் மாதாந்த வாடகை $2000 ஆக இருந்தால் மேலதிகமாக $2000 x 13/100 = $260. இன்றைய நடைமுறையில் GST மட்டுமே அறவிடப்படுகின்றது. மொத்தத்தில் $2260 அறவிடப்படும்.

5. சட்டத்தரணியின் ஊதியத்திற்கு HST அறவிடப்படும்.
6. Moving Expense களின் HST அறவிடப்படும்.
7. Home Inspection களின் HST அறவிடப்படும்.
8. Condominium Fee இல் HSTஅறவிடப்படும்.
9. Appraisal Fee இற்கு HST அறவிடப்படும்.
10. வீட்டின் நிலை அமைப்பு சம்பந்தமான சேவைக்கு வீட்டின் (Survey) பெறுவதற்கு HST அறவிடப்படும்.

இந்த புதிய வரியின் வரவு ஆதன வியாபாரத்தில் பாதிப்பை ஏற்படுத்துமா? வீடு அல்லது மனையின் விலையுடன் ஒப்பிடும்போது புதிதாக வரப்படும் வரியின் பாதிப்பு ஒப்பீட்டளவில் சிறிதாகக் காணப்படுகின்றது. எனினும் உடனடியாக சிறிதளவு பாதிப்பு அல்லது தேக்கம் ஏற்படலாம். குறுகிய காலத்தில் இந்த பாதிப்பு மறைந்து விடும். பிற்பாடு இதே வியாபாரத்தின் ஒரு பகுதியாக உள்ள மாதிரி மாறி விடும்.

எனினும், இந்த வருடம் ஆதன வியாபாரத்தில் முறையில் மாற்றம் ஏற்பட்டதனைக் காணக்கூடியதாக உள்ளது.

வியாபார சரித்திரத்தைப் பார்க்கும் போது இளவேனிற்காலம் (Spring) ஆதன வியாபாரத்தில் மிகவும் முக்கியமானதாகக் காணப்படுகிறது. இந்த வருடத்தின் ஆரம்பத்தில் கூடியளவு மக்கள் வீடுகள் வாங்கியுள்ளார்கள். இதன் பாதிப்பை இளவேனிற்காலத்தில் காணக்கூடியதாக உள்ளது. அதாவது மே, யூன் மாதங்களில் வீட்டு வியாபாரம் ஜனவரி, பெப்ரவரி, மார்ச், ஏப்ரல் மாதங்களுடன் ஒப்பிடும்போது சிறிதளவு மந்தமாகவே உள்ளது.


**கோண்டாவில் இந்து மகாவித்தியாலய பழைய மாணவர் சங்கம் அறிவிக்கும்**

## முக்கிய அறிவித்தல

பழை மாணவர் சங்கத்தின் நடப்பு வருட நிர்வாக சபை பொதுக்கூட்டமும் புதிய நிர்வாக சபைத்தெரிவும், எதிர்வரும் ஜுன் 20ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 5.00 மணிக்கு ***MCCOWAN & ALTON TOWER 350*** மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் கோண்டாவில் மக்கள், கலன்விரும்பிகளும், பழையமாணவர்களும் புதிதாக இணைய விரும்பும் அங்கத்தவர்களும் தவறாது சமூகமளிக்குமாறு பணிவுடன் கேட்டுகொள்கின்றோம்.

கேமன்: 647.244.8215 / சிவா: 647.836.2849 / பத்மநாதன்: 416.500.7366

(சென்ற இதழ் தொடர்ச்சி)

# பல்கலைக் கல்லூரி

பிற்காலத்தில் மத்திய கல்லூரிகள் மத்திய மகாவித்தியாலயங்கள் என்று பெயர்மாற்றம் செய்யப்பட்டன. அதற்கு அமைய வயாவிளான் மத்திய கல்லூரியும் வயாவிளான் மத்திய மகா வித்தியாலயம் என்று அழைக்கப்பட்டது.

வித்தியாலயம் அமைந்திருக்கும் நிலையமும் மிக வாய்ப்பானது. காங்கேசன்துறைத் தொகுதி, கோப்பாய்த் தொகுதி, உடுவில் தொகுதி ஆகிய மூன்று தொகுதிப் பிள்ளைகளும் வந்து கல்வி கற்கக்கூடிய ஒரு மையமான இடத்தில் வித்தியாலயம் அமைந்திருப்பது ஒரு தனிச் சிறப்பாகும்.

ஐந்தாம் வகுப்புப் புலமைப் பரிசில் பெற்ற மாணவர்களை அரசாங்கம் மத்திய கல்லூரி களுக்கே அனுப்பிவந்தது. அந்த வகையில் பல வெளியூர் புலமைப்பரிசில் மாணவரும் வயாவிளானுக்கு அனுப்பப்பட்டனர். அவர்கள் தங்கிப்படிப்பதற்கு விடுதி வசதிகளையும் கல்லூரி கொண்டிருந்தது.

கட்டிட வசதிகள் மட்டுமன்றிப் பலவிதமான கற்கை நெறிகளையும் கொண்ட பல்கலைக் கல்லூரியாக இது விளங்கியது. வழமையான மொழி, சமயம், விஞ்ஞானம் மற்றும் சமூகவியற் பாடங்களோடு விவசாயம், மரவேலை, நெசவு, உலோக வேலை, மனையியல், தையல், சங்கீதம், நடனம் என்று பலவிதமான பாடங்கள் அங்கு கற்பிக்கப்பட்டன. நாடகத்தையும் ஒரு பாடமாக முதன்முதலாக அங்கு நான் உயர் வகுப்புக்குக் கற்பிக்கத் தொடங்கினேன்.



உயர் வகுப்புகள் தொடக்கத்தில் இருக்க வில்லை. ஆறிலிருந்து பத்துவரைதான் வகுப்புகள் நடத்தப்பட்டன. பின்பு உயர்தரவகுப்புத் தொடங்கப்பட்டபின்னர் அதிற் சேர்ந்து கற்ற மாணவர்களில் குரும்ப சிட்டியைச் சேர்ந்த திரு. வ. கிருஷ்ணசாமி அவர்களே பல்கலைக்கழகத்துக்கு முதன்முதலாகத் தெரிவுசெய்யப்பட்டார்.

உங்கள் அதிபர் வைரவிழாச் சிறப்பு மலர் ஒன்றைத் தந்துதவினார். 2006ல் வைரவிழா வைச் சிறப்பாகக் கொண்டாடியிருக்கிறீர்கள். நாங்கள் 1972ஆம் ஆண்டு இதன் வெள்ளி விழாவை மூன்று நாட்கள் கொண்டாடினோம். பொருட்காட்சி, கலைவிழா, கல்விக்



கருத்தரங்கம், பரிசளிப்பு என்று பலவகை யான நிகழ்ச்சிகளோடு வெள்ளிவிழா மலர் ஒன்றையும் வெளியிட்டிருந்தோம். அந்த மலர்தான் கல்லூரியின் 25 ஆண்டுக்கால வரலாற்றில் முதன்முதலாக வெளிவந்த மலராகும். அந்தவகையில் அதற்கு ஒரு வரலாற்று மகிமையுண்டு.

இவ்விதம் வளர்ந்துகொண்டிருந்த இக்கல்லூரி, எல்லாவகையாலும் சிறப்புற்று விளங்கிய இக்கல்லூரி குண்டுத் தாக்குதல்களுக்கு உள்ளாகி இடம்பெயர வேண்டிய நிர்ப்பந்தத்துக்குத் தள்ளப்பட்டது மிகுந்த கவலைக்குரியது.

யாருமே எதிர்பார்த்திராத இந்த அவல நிலையிலிருந்து எத்தனையோ இடர்ப் பாடுகளுக்கு மத்தியில் மிகத் துணிச்சலுடன் பூனை தன் குட்டிகளை இடத்துக்கிடம் காவிக்கொண்டு சென்று பாதுகாத்தல்போல, கல்லூரியைக் காத்து வளர்த்த பெருமை

அப்போதைய அதிபரும் எனது நல்ல நண்பருமாகிய திரு. ஆ.சி. நடராசா அவர்களைச் சாரும்.

அவரைத் தொடர்ந்து இப்போதைய அதிபரும் குறைவான வசதிகளோடு நிறை வான பெறுபேறுகளைப் பெற்றுவருவது பாராட்டுதலுக்குரியது. அவருக்கு ஆதரவாக இருக்கின்ற ஆசிரியர்களது உழைப்பும் இந்தக் கல்லூரியின் கல்வித்தரத்தைக் கல்விமான்கள் பாராட்டும் அளவுக்கு நிலைநாட்டிக் கொண்டிருக்கின்றது. மாலை வகுப்புகளையும் ஆசிரியர்கள் இலவசமாக நடத்தி மாணவர்களின் ஐயங்களைத் தீர்த்து வருகின்றார்கள் என்ற தகவலும் உற்சாகம் ஊட்டுகின்றது. இத்தகைய சேவை மனப்பான்மையுடைய அதிபர் மற்றும் ஆசிரியர்களால் கல்லூரி மீண்டும் தலையெடுத்துள்ளது.

உண்மை யென்னவென்றால், பெறுபேறு களைப் பொறுத்தவரையில் அக்காலத்திலும் பார்க்க இக்காலம் பொற்காலமாக உள்ளது என்பதே எனது மதிப்பீடாகும். கடினமான போர்ச்சூழலிலும் கல்வியிற் கவனமாக இருந்து மாணவர் கற்றுவருவது பாராட்டுக்குரியது.

கற்கைநன்றே கற்கை நன்றே
பிச்சை புகினும் கற்கை நன்றே

என்பது வெற்றி வேற்கை என்ற நீதிநூல் கூறும் அறிவுரை. இதனை நீங்களும் உங்கள் பெற்றோரும் நன்றாகப் புரிந்திருக்கின்றீர்கள். கல்வியின் அடிப்படை நோக்கம் வாழ்க்கையில் நம்பிக்கையை ஊட்டுவதுதான்.

நம்பிக்கையோடு கல்லுங்கள்! உறுதியோடு தடைகளை எதிர்த்து நில்லுங்கள்! சவால்களைச் சாதுரியமாக வெல்லுங்கள்! நாளைய உலகம் உங்களுடையதாகவே இருக்கும். வாழ்த்துக்கள்.
வணக்கம்.

- தொடரும்




**கவிஞர் வி. கந்தவனம்**

MOHAN
HOMEOPATHIC CLINIC
& MASSAGE CLINIC

• கழுத்து, முதுகு நோவு
• வாகன விபத்து
• மன அழுத்தம்
• விளையாட்டுக் காயங்கள்
• தலையிடி, தலைவருத்தும்

போன்ற நோய்களிற்கு அழையுங்கள் **டாக்டர் ஜே. மோகன்**




Dr. J. Mohan
D.H.M.S., N.H.C.

WE OFFER CONSULTATION
REGARDING ALL HEALTH PROBLEMS INCLUDING:

• STRESS
• SKIN PROBLEM
• RESPIRATORY PROBLEMS
• DIGESTIVE PROBLEMS
• VARICOSE VEINS
• BACK PROBLEM /NECK PROBLEM
• TENNIS ELBOW PROBLEM
• TREAT WITH MASSAGE THERAP
• ALLERGIES
• SEXUAL PROBLEMS
• SEXUAL PROBLEMS
• CHOLESTEROL
• TUMOR
• FOOT PROBLEM

HOMEOPATHIC TREATMENT ABOUT FOLLOWING

Cough, Flu, Depression, Anxiety, Asthma
Tonsillitis, Gout, Arthritis, P.M.S, Leucorrhea
Migraines, Hair Loss, Diabetes, Cystitis, Cancer
Prostatitis, Obesity, Hemorrhoids, Stumatitis, Colitis

Also other Acute & Chronic Problems
HOMEOPATHIC PRACTITIONER

TEL: 416-298-7537/416-291-3022

5200 Finch Ave, East Suite 210
At Middle Field, Scarborough, M1S 4Z4

# ஆயிரம் ஆயிரம் ஆண்டுகள் போனாலும் ஆறாத அதிர்வலைகள்

பாரதப்போரில் அபிமன்யு மடிந்த போர் நடைபெற்ற பதின்மூன்றாவது நாளில் இருந்து சிந்திக்க ஆரம்பிப்போம்.

சுமார் நாற்பது ஆண்டுகளுக்கு முன்னர் வல்வை நெடியகாடு திருச்சிற்றம்பலப் பிள்ளையார் ஆலயத்தில் மகாபாரதக் கதையை பிரபல சொற்பொழிவாளர் நல்லை ஆதீனம் மணிஐயர் நிகழ்த்திக் கொண்டிருந்தார்.

ஒலிபெருக்கிகள் பூட்டி ஜனத்திரள் நிறைந்த கிழக்கு வீதியில் பதினெட்டு நாட்கள் தொடர்ச்சியாக அவருடைய பிரசங்கம் நடைபெற்றுக் கொண்டிருந்தது.

தினசரி அங்குபோய் அவர் என்ன கூறுகிறார், எப்படிக் கூறுகிறார் என்பதைக் காதுகொடுத்து கேட்பேன். அப்போது அவருடைய பிரசங்கத்தின் பதின்மூன்றாவது நாள் வந்தது, அன்று அபிமன்யு வதம். கைகள் வெட்டப்பட்டு, கால்கள் தறிக்கப்பட்டு அவன் உயிருக்காகப் போராடிக் கொண்டிருக்கிறான்.

கதை கேட்ட நம் உள்ளம் உடனடியாக போர்க்களம் போகவேண்டும், அந்த வீரனைக் காப்பாற்ற வேண்டும் என்று துடிக்கிறது 'ஆண்டவனே அபிமன்யுவைக் காப்பாற்று' என்ற மன ஓலங்கள் வேண்டுதலாகி வான்வெளியில் அதிர்கிறது.

அவ்வளவுதான் மின்சாரம் நின்றுவிட்டது. கும்மிருட்டு. மின்சாரம்தானே, அங்கு அடிக்கடி மின்வெட்டு வருவதுதானே, என்று எண்ணிவிடாதீர்கள். கணபதி மின் அமைப்பாளர்களின் இயந்திரம் மின்சாரத்தை வழங்கிக் கொண்டிருந்தது, மின்தடை பிரசங்கத்தைக் குழப்பிவிடக் கூடாது என்பதற்காக அப்படிச் செய்திருந்தார்கள். அரைமணி நேரமாக சல்லடை போட்டு காரணங்களைத் தேடினார்கள். யாதொரு தவறும் நடைபெறவில்லை.

சரி இன்று பிரசங்கம் நடைபெறாது என்று எல்லோரும் சிந்திக்க ஆரம்பிக்கிறோம். நாளைக்கு தொடரலாம் என்று கோயில் நிர்வாகிகள் கூறுவது கேட்கிறது. அப்போது அனைவரும் அபிமன்யுவை மறந்து கவனத்தைத் திசை திருப்புகிறார்கள்.

மெல்லிய வெற்றிடம், தடைப்பட்ட மின்சாரம் சட்டென வருகிறது. அப்போது மணிஐயர் என்ற மாபெரும் பிரசங்க மேதை சொன்னார். இது இன்று மட்டும் நடைபெறும் நிகழ்ச்சி யல்ல. பாரதக்கதை நடைபெறும்போது அபிமன்யு வதம் வரும். அப்போது இப்படி இனம்புரியாமல் மின்சாரம் தடைபடுவது, அல்லது ஏதோ ஒரு தடங்கல் வருவது வழமை.

இதற்குக் காரணம் என்ன. உங்களுடைய மனம்தான் காரணம். உங்களில் யாருக்குமே அபிமன்யு மீது தனிப்பட்ட வெறுப்பு கிடையாது. அந்த வீரன் கொல்லப்பட்ட முறை தவறு என்பதில் உங்களுடைய மனம் உறுதியாக இருக்கிறது.

அந்த மனமொத்த கூட்டு வேண்டுதல் இறைவனான பேரருளின் காதுகளில் எதிர்ப்பின்றி ஒலிக்கிறது. இயற்கை உங்கள் வேண்டுதலை ஏற்றுக் கொள்கிறது. ஒன்றிணைந்த உள்ளங்கள் ஏற்படுத்தும் அதிர்வலைக்கு அந்த மாபெரும் இயற்கை தரும் உடன் பதில்தான் இந்த மின்தடை.

இது வெறும் மின்தடையல்ல. இதுபோன்ற வஞ்சப்போரை யார் நடாத்தினாலும் முடிவில் தோல்வி வரும் என்பதை இயற்கை இப்படிச் சொல்கிறது. எதை வேண்டுமானாலும் செய்யுங்கள், வஞ்சப் போரை மட்டும் செய்யாதீர்கள். செய்தால் என்றோ இயற்கையின் தீர்ப்பை அனுபவிக்க நேரிடும். இது மாற்றமில்லாத பெருவிதி.

ஆயிரம் ஆயிரம் ஆண்டுகள் போனாலும் மாறாத அதிர்வலைதான் இந்த அபிமன்யு என்று கூறிவிட்டு தனது பிரசங்கத்தைத் தொடர்ந்தார்.

அபிமன்யு மரணத்திற்கும் புதுமாத்தளனுக்கும் போரியல் ரீதியாக பெரிய ஒற்றுமை இருக்கிறது. சர்ப்ப வியூகம் அமைக்கப்பட்டு, பாம்பு வால்போல படைகளால் வளையம் போடப்பட்டு, பாம்பு தன் வாய்க்குள்ளேயே தன் வாலை நுழைத்தது போல படைகளால் சுற்றி ஜெயத்திரதன் தலைமையிலான அணி அபிமன்யுவைத் தாக்கினார்கள். அவர்கள் போட்டிருக்கும் வியூகத்தை உடைக்க வல்லவன் அபிமன்யுவின் தந்தையான அர்ச்சுனன் ஒருவன் மட்டுமே.

உன் உயிருக்கு ஆபத்து நேர்ந்தால் உன்னிடமிருக்கும் போர்ச்சங்கை ஊது. ஒலி கேட்டதும் நான் அந்த இடத்திற்கு வந்துவிடுவேன் என்று கூறி ஒரு விசேட ஒலி கொண்ட சங்கை அர்ச்சுனன் அவனிடம் வழங்கியிருந்தான். எந்த வியூகமானாலும் உடைக்க தந்தை வருவார் என்ற நம்பிக்கையில் வியூகத்தைப் பற்றிய கவலை இல்லாமலே போர் புரிகிறான் அபிமன்யு.

எனினும் ஒரு கட்டத்தில்...
முற்றுமுழுதாகச் சுற்றி வளைக்கப்பட்ட நயவஞ்சக வியூகத்தில் மாட்டிக் கொண்டு விட்டதை உணர்கிறான். உடனே தன்னிடமிருந்த சங்கை எடுத்து ஊதுகிறான். ஆனால் அதன் ஒலி அர்ச்சுனனுக்கு கேட்கவில்லை.

காரணம்... யாருமே இல்லாத கடற்கரையோரமாக அர்ச்சுனனை அழைத்துச் சென்றுவிடுகிறான் கண்ணன்.

அபிமன்யு தாயின் வயிற்றில் இருக்கும்போதே அவனுடைய மரணம் (பாரதப்போரில்) 13 ம் நாள் என்று தீர்ப்பளித்துவிட்டான் கண்ணன். அந்தநாள் வந்திருக்கிறது. அதைத் தடுக்க கண்ணன் விரும்பவில்லை, அதற்குக் காரணமும் இருந்தது. தந்தை வரவைக் காத்திருந்து ஏமாற்ற மடைந்து களத்தில் யாருடைய உதவியும் இல்லாமல் அபிமன்யு நயவஞ்சகமாகக் கொல்லப்படுகிறான்.

புதுமாத்தளனும் இதுபோலத்தான் சர்ப்ப வியூகமாகச் சுற்றி வளைக்கப்பட்டது. அபிமன்யு போலத்தான் அதற்குள் சிக்குண்ட நம் வீரர்கள் போராடிக் கொண்டிருந்தார்கள். அவர்களின் குரல் வியூகத்தை உடைக்கக் கூடியவர்கள் காதுகளில் விழவில்லை. புதுமாத்தளன் சங்கொலிகளும் தூரத்து ஓசை களாக்கப்பட்டிருந்தன. புலம் பெயர் தமிழர்கள் வீதியில் இறங்கி போராடினார்கள். தீயில் எரிந்து தற்கொலை செய்தார்கள். ஆனால் கேட்க வேண்டிய உலகம் கேட்கவே இல்லை.

அன்று, அபிமன்யுவின் சங்கொலி கேட்காதது ஏன் என்று சிந்தித்துப் பார்த்தால், ஓர் உண்மை புலப்படும். போரில் உலகம் கேட்காத பொழுதென்றும் ஒரு பொழுது வரும். இது அபிமன்யு மரணத்தில் இருந்த முக்கிய செய்தி. அப்படி உலகம் கேட்காத பொழுதுதான் புதுமாத்தளனிலும் வந்தது. போர், வியூகம், நயவஞ்சகம், மரணம் யாவுமே அபிமன்யு கதைபோலவே அங்கும் அரங்கேறின. ஏன் இப்படியொரு வஞ்சப் போரை பரமாத்மாவாகிய கண்ணன் அனுமதித்தான். இதுதான் இக்கதையின் முக்கிய கேள்வி..?

பதினெட்டு நாட்கள் நடைபெற்ற போரில் திருப்புமுனையானதும், பாண்டவருக்கே வெற்றி என்ற இடத்திற்குள் அடுத்த ஆறு தினங்களை வெற்றிகரமாக நகர்த்தியதும் இந்த நிகழ்வுதான். எதிரி மிகப்பெரிய நயவஞ்சகத்தை செய்தான் என்ற உறுதியான தகவல் கிடைக்கும்வரை இயற்கை வெற்றியை யாருடைய கையிலும் இலகுவில் கொடுத்துவிடாது.

நடந்தது, நடக்கப் போவதற்கு அப்பால் களத்தில் நீதி எந்தப்பக்கம் அதுபோல அதர்மம் எந்தப் பக்கம் என்பதை இயற்கை தீர்மானிக்க ஓர் இடம் அவசியம். அதை போருக்குள் நடைபெறும் நயவஞ்சகத்தால் இயற்கை தீர்மானம் பண்ணும். காற்றாய், கடலாய், ஒலியாய் பரந்திருந்து யாவற்றையும் பார்த்துக் கொண்டிருக்கும் பரம்பொருள் இறுதித் தீர்ப்பை வழங்க 13ம் நாள் போரும், அபிமன்யு வதமும் அவசியம் என்பதை பரமாத்மாவாகிய கண்ணன் அறிந்தான் அதனால் அவ்விதம் செய்தான்.

யாருமே உதவி செய்யவில்லை என்பதை அறிந்த இயற்கை இரங்கி தானாக இறங்கிவந்து பாண்டவருக்கு வெற்றியைக் கொடுத்தது. இதுபோலத்தான் 18ம் நாள் போரில் கர்ணன் வீழ்ந்துகிடக்க தர்மதேவதை ஆயுதம் எடுத்துப் போர் புரிந்தது.

அதுபோல காற்றாய், கடலாய், ஒலியாய், ஒளியாய், நெருப்பாய் இருந்து பரம்பொருள் புதுமாத்தளனைப் பார்த்தது, அங்கு புலிகள் யாருமே இல்லாது நிற்கிறார்கள் என்பதை இயற்கை கண்டது. இயற்கை என்னும் தாய் இரங்கி தன் தீர்ப்பை எழுதியிருப்பாள். இதில் யாருக்குமே சந்தேகம் வேண்டாம்.

புதுமாத்தளன் போரை ஐ.நா பதிவு செய்ய முன் இயற்கை என்னும் பேரோசான் பதிவு செய்துவிட்டது. எல்லோரும் குரோதங்களை மறந்து ஒரு நொடி பரம்பொருளை வணங்குங்கள்.

போரின் தடயங்கள் அழிக்கப்பட்டுவிட்டன. என்று கவலைப்பட வேண்டாம். தர்மத்தின் தடயங்களை யாருமே அழிக்க முடியாது. இயற்கையை குருடனாக எண்ண வேண்டாம். இயற்கை என்னும் தாய் தரும் புதிய நீதி தமிழருக்குக் கிடைக்கும். நன்றி: அலைகள்


## Computer Repair Services

சகல விதமான கணனி சார்ந்த பழுதுபார்த்தல் மற்றும் Virus Removal உட்பட அனைத்து வேலைகளையும் செய்து கொள்ளலாம். Troubleshooting இலவசம். ஏற்படக்கூடிய செலவு பற்றிய விபரங்களை முற்கூட்டியே அறிந்து கொள்ள முடியும்.

PC Repair, Upgrade, Anti-Virus & Fire-Wall Installation; Virus, Spyware, Malware Removal.

Data Recovery from infected or corrupted, & mistakenly formatted Computers.

Setup your Router & wireless security. Buy used and new computers. (Scanning, Browsing, Printing, Toner Cartridges & Refill etc..

**PRO-WIN COMPUTER SERVICES**

919 Ellesmere Road, Unit – 302 , Scarborough, ON, M1P 2W7.
*(KENNEDY & ELLESMERE- South East Corner )*
*(Besides Active Green + Ross & In front of Honda )*




**Tel: 647 340 5568/416 879 7489 (தமிழ் -English)**
**( Contact :** *Niruthan Nadarajah* **)**
**Mon-Sat 10 am – 8 pm / Sun 10 am – 6 pm**

# வாழத் துடிக்கும்...

09ஆம் பக்கத்தொடர்ச்சி

கீழேதான் படிப்பு நடக்கின்றது. டொய்லட்டுகளும் இல்லை. கொட்டில்கள் கூட கிடையாது. கொட்டில்கள் அமைத்துத் தருமாறு உதவி நிறுவனங்களிடம் விடுத்த கோரிக்கை இன்னும் கோரிக்கையாகவே இருக்கின்றது. வலயக்கல்விப் பணிமனை அதிகாரிகளது முயற்சியும் இன்னும் கைகூடவில்லை. பிள்ளைகளுக்கான உடைகள், சப்பாத்துக்கள் மற்றும் அத்தியாவசிய தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு வழியிருக்குமா என ஏக்கத்தோடு நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் வினவினார் அந்தப் பாடசாலையின் அதிபர் திருநாவுக்கரசு அரவிந்தன்.

நெடுங்கேணி பிரதேசத்தில் 5 க.பொ.த சாதாரண தர வகுப்பு வரையிலான



பாடசாலைகள் உள்ளன. இவற்றில் கற்கும் மாணவர்களின் உயர்கல்விக்கான ஒரே இடம் இந்தப் பகுதியில் நெடுங்கேணி மகாவித்தியாலயம் மட்டும்தான். 400க்கும் மேற்பட்ட மாணவர்கள் கற்கின்றார்கள். விஞ்ஞான பாடத்திற்கு ஆசிரியர் இல்லை. தொண்டர் ஆசிரியர் ஒருவர் தான் போருக்கு முந்திய காலத்திலும் விஞ்ஞானம் படிப்பித்தார். ஏஎல் மாணவர்கள் இந்தப் பாடசாலையைவிட்டு வெளியிடங்களுக்குச் சென்று படிக்கலாமா என்று யோசிக்க வேண்டிய நிலைமைக்குத் தள்ளப்பட்டிருக்கின்றார்கள். அவ்வாறு செல்வதற்கு அவர்களிடம் வசதியில்லை. என்ன செய்யலாம் என அவர்கள் தடுமாறுவதாக அந்தப்பாடசாலை அதிபர் கூறுகின்றார். தூர இடங்களில் இருந்து கால்நடையாக வருகின்ற மாணவர்களில் இருவர் காலிழந்தவர்கள். இவர்களின் நிலைமை மிகமோசமாக இருக்கின்றது. மாணவர்களுக்கு சைக்கிள்கள் தேவை. இந்த இரண்டு மாணவர்களுக்கும் பெற்றோர்கள் பயன்படுத்தத்தக்கதாக, அவசரமாக சைக்கிள்கள் தேவைப்படுகின்றன. ஏதாவது ஏற்பாடுகள் செய்ய முடியுமா என வினவுகின்றார் பாடசாலை அதிபர்.

பாடசாலை செயற்படத் தொடங்கியதும், கட்டிடங்களின் நிலைமையைக் கருத்திற்கொண்டு, அவசர உதவியாக கதவுகளுக்கென ஒரு லட்சத்து 90 ஆயிரம் ரூபா நிதியொதுக்கீடு கிடைத்தது. ஆனால் அந்த நிதி இன்னும் வந்து சேரவில்லை. நடந்து வருகின்ற மாணவர்களில் அநேகமானவர்களிடம் சப்பாத்துக்கள் இல்லை. பாடசாலைக்கு வேலியும் கிடையாது. இதனால் கட்டாக்காலி மாடுகளின் தொல்லையைக் கட்டுப்படுத்த முடியாமல் இருக்கின்றது. பல இடங்களில் முயற்சித்தோம். பலன் கிடைக்கவில்லை என வருந்தினார் அந்த அதிபர்.

இதனைப்பார்த்தபோது, அழிவுக்கு மத்தியிலும், அனைத்தையும் இழந்த நிலையிலும், அந்தப் பகுதி மக்களின் உழைப்புத் திறனை உணர முடிந்தது.

பேரழிவுகளுக்கு மத்தியிலும் நெடுங்கேணி பிரதேச செயலகம் பாரிய சேதமின்றி இருந்தது. போர்க்காலத்தின் போது இது புதிதாக அமைக்கப்பட்டிருந்தது. பிரதேச செயலாளர் அலுவலகத்தில் இருந்தார். இடம்பெயர்ந்த நிலையில் வவுனியாவில் இந்த அலுவலகம் செயற்பட்டு வந்தது. இப்போது ஊருக்கு சொந்த இடத்திற்குத் திரும்பியிருக்கின்றது. ஆனால் ஒரு பிரதேச செயலகத்திற்கே உரிய அதிகாரிகள், பணியாளர்களைத்தான் காண முடியவில்லை. அலுவலர்கள் பற்றாக்குறை காரணமாக அலுவலக அறைகள் பெருமளவில் வெறிச்சோடிக்கிடந்தன.

இந்தப் பிரதேசத்தில் 2005 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட ஒரு கணக்கெடுப்பிற்கமைய இன்னும் 5000 பேர் மாத்திரமே ஊர் திரும்பாமல் இருக்கின்றார்கள். பத்தாயிரம்பேர் வரையில் மீளக்குடியமர்த்தப்பட்டிருக்கின்றார் கள். உட்கட்டமைப்பு வேலைகள் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மீளக்குடியமர் பவர்களுக்கான உலருணவு விநியோகம், சமையல் பாத்திரங்கள், காணிகளைச் சுத்தம் செய்வதற்கான உபகரணங்கள் உள்ளிட்ட அனைத்து உதவிகளும் செய்யப்பட்டிருப்ப தாகப்பிரதேச செயலாளர் தெரிவித்தார்.

நெடுங்கேணி பிரதேச செயலகப்பிரிவில் ஏற்பட்டுள்ள சேத விபரங்கள் தொடர்பான விபரங்கள் திரட்டப்பட்டு வருவதாகவும் அவர் கூறினார். இங்கு விதவைகள் அதிகமாக இருப்பதாக இதுவரையில் திரட்டப்பட்டுள்ள புள்ளிவிபரங்கள் காட்டுகின்றன. பல்வேறு உட்கட்டமைப்பு வேலைகள் நடைபெற்று வருகின்றன. அவற்றிற்கான முன்மொழிவுகள் சமர்ப்பிக்கப்பட்டு நிதியொதுக்கீடுகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

நெடுங்கேணியில் 100 மில்லியன் ரூபா செலவி-ல் நீர் விநியோகத் திட்டம் வரப்போகின்றது. புதிய பஸ் நிலையம், சந்தைக்கட்டிடம் என்பவற்றை அமைப்பதற்கு 43 மில்லியன் ரூபா நிதியொதுக்கப்பட்டுள்ளது. இதுபோன்ற இன்னும் பல உட்கட்டமைப்பு வேலைத்திட்டங்கள் மேற்கொள்ளப்பட இருக்கின்றன. இது வவுனியா அரசாங்க அதிபர் தெரிவித்துள்ள தகவல்கள். ஆனால் அழிந்து போயுள்ள கிராமங்களில் மீளக்குடியமர்ந்துள்ள மக்களுக்கு சீரான வகையில் ஒரே வகையான உதவிகள், ஒத்தாசைகள் வழங்கப்பட்டிருக்கின்றனவா? இந்தக் கேள்விக்கு அரசாங்கத் தரப்பிலிருந்து ஆம் என்ற பதிலே தெரிவிக்கப்படுகின்றது. எனினும் அங்கு சென்றுள்ள மக்கள் கூறுவதும், அவர்களின் உண்மையான வாழ்க்கை நிலைமையும் வேறாகத்தான் இருக்கின்றது.

நெடுங்கேணி நகரத்தை அண்டிய பகுதியில் ஒலுமடு என்றொரு கிராமம். நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழு அங்கு சென்றபோது ஊர்ப்பிரமுகர்களும், கிராம மக்கள் சிலரும் அங்கு கூடியிருந்தார்கள். இந்தக் கிராமத்தில் 210 குடும்பங்கள் இப்போது இருக்கின்றன. 90 வீதமானவர்கள் மீள்குடியேற்றத்திற்காகத் திரும்பியிருக்கின்றார்கள். மரங்களின் கீழ் அமைக்கப்பட்ட தரப்பாள் கொட்டில்களில்தான் சீவியம் நடக்கின்றது. காணிகள் காடுகளாக இருக்கின்றன. இன்னும் துப்பரவு செய்து முடியவில்லை. இதனால் மிருகங்களின் தொல்லை இரவில் அதிகமாக இருக்கின்றது. கண்ணிவெடி ஆபத்து இல்லை. அதனால் மனதுக்கு சற்று ஆறுதல். ஆனால், நெற்செய்கை செய்யக்கூடிய குளங்களில் இருந்து தண்ணீர் பெருமளவில் வெளியேற்றப்பட்டுள்ளது. இதனால் கொஞ்சம்கூட வயல் விதைக்க முடியாத நிலையில் மக்கள் இருக்கின்றார்கள்.

இங்குள்ளவர்களில் 50 வீதமானவர்கள் விதவைகளாகவும், ஊனமுற்றவர்களாகவுமே இருக்கிறார்கள் என்ற தகவலையும் ஊர் முக்கியஸ்தர்கள் தெரிவித்தனர். கணவன் தடுப்புக்காவலில், பூஸாவில் இருப்பதாக 5 பிள்ளைகளின் தாயாரான 34 வயதுடைய இளம் தாய் ஒருவர் தெரிவித்தார்.

"எங்கள் கிராமத்தில் 50 பேர் வரையில் தடுப்பில் இருக்கிறார்கள். வவுனியா, பூஸா, பொலன்னறுவை என்று பல இடங்களிலும் அவர்களை வைத்திருக்கின்றார்கள். அண்மையில் 215 பேரை வவுனியாவில் இருந்து பூஸாவுக்குக் கொண்டு போயிருக்கின்றார்கள். எனது கணவரும் அதில் ஒருவர். பூஸாவுக்குப் போனால் 20 நிமிடம் மட்டுமே நாங்கள் அவர்களைப் பார்க்க முடியும். அதுவும் ஜன்னல் கம்பிகளுக்கு ஊடாகத்தான் சந்திக்கலாம். அங்கு இருப்பது கஸ்டமாக இருக்கின்றது என அங்குள்ளவர்கள் சொல்கிறார்கள். மாதம் ஒரு தடவை நான் அங்கு போய் வருவேன். இரண்டு மாதத்திற்கு ஒரு தடவை ஐசிஆர்சி பிரயாணச் செலவாக 3400 ரூபா கொடுக்கும். ஆனால், அது எங்களின் பிரயாணத்திற்குப் போதாது. ஐந்து பிள்ளைகளையும் பார்க்க வேண்டும். அவர்களுக்கு சமைக்க வேண்டும். அவர்களின் கல்வியைக் கவனிக்க வேண்டும். உழைப்பு என்று எதுவுமே இல்லை. நிவாரணத்தை மட்டுமே நம்பியிருக்கிறோம். இந்த நிலையில் ஒவ்வொரு மாதமும் பூஸாவுக்குப் போய் வர முடியாமல் இருக்கின்றது. ஐந்து பிள்ளைகளில் எத்தனை பேரை என்னோடு பூஸாவுக்குக் கூட்டிச் செல்ல முடியும்? அவர்களை அயல் வீட்டாருடன் விட்டுச் சென்றால் வீடு திரும்பும் வரையில் அவர்களைப் பற்றிய சிந்தனைதான். கணவனைத் தடுப்பில் பிரிந்து மிகவும் கஸ்டப்படுகிறேன். உதவிக்கு ஒருவருமே இல்லை. ஐந்து குழந்தைகளையும் எப்படி வளர்த்து பெரியாட்களாக்கப் போகிறேனோ தெரியவில்லை." என கண்ணீர் மல்க மடை திறந்த வெள்ளமாகத் தனது கஸ்டங்களைக் கொட்டினார் அந்த இளம் தாய்.


என் மூலம் வீடு வாங்குவது / விற்பதன் மூலம் BMW ஒன்றை வெற்றிகொள்ளலாம்



Interest Rate going up soon best time to buy Real Estate

3 bedroom Condo. Markham / Eglinton Low Maintenance

INVESTMENT
Why Scarborough? Brampton, Milton, Mississaouga Near Airport $320,000

Gas Stations 4 million litres / year in Peterborough, Oshawa, Hamilton with 6/49, good income

2 Bedroom Condo Near 401, Mississauga $125,000 Low Mainteance good start

Bungalow
MEADOWALE /ELLESMERE U of T area big lot 3 bedroom

Big Lot
Bungalow House
3 Bedroom bsmt Apartment

Live Like Millionaive
Estate Home with Natural 1 - 5 Acres Low tax. Build your dream home + pond

$50,000 Net profit in 5year term. Plus Rental income pay mortgage

பரந்த நிலப்பரப்பு பங்களோ இரண்டு மூன்று குடும்பங்கட்கு வேலைவாய்ப்பு

அழையுங்கள் - Sitham Sam Shanmugam (Sales Rep.)
416.230.7820 / 905.696.7310
HomeLife GTA Realty Inc. - 416.321.6969 /905.712.2666

150 - 200 Acres land for sale in Peteboroug. Farm Land value.

# நெல்லும் புல்லும்

## ஓடும் நீர் உறைவதில்லை 03

## இரண்டாம் பாகம்

ஏதாவது ஒன்றைப் பற்றி உயர்வாகக் கூறவேண்டுமாயின் அதற்கு எதிரான அல்லது தாழ்வான ஒன்றை ஒப்பிட்டே உயர்த்துகின்றோம். நல்லவன் என்று ஒருவரை நிலைப்படுத்துவதற்குக் கெட்டவன் அல்லாதவன் எனும் நிலையை முன்வைக்கின்றோம். நல்லவை, கெட்டவை என நாம் ஏற்றுக்கொள்ளும் விடயங்கள் அனைத்தும் ஒப்பீட்டு ரீதியில் கணிப்பிடப் படுபவைகளாகும். இந்த ஒப்பீட்டானது எமது எதிர்பார்ப்புக்களின் அடிப்படையில் கணிப்பிடப்படுகின்றன. இதனால்தான் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் ஒரு விடயம் சம்பந்தமான கணிப்பீடுகள் ஒவ்வொருவருக்கும் வேறுபட்ட கணிப்பீட்டையும் ஒப்பீட்டையும் கொடுக்க வேண்டிய சந்தர்ப்பங்களும் இடம் பெறுகின்றன.

நெல்லா அல்லது புல்லா உயர்ந்தது என்பது நமது தேவையையும் எதிர்பார்ப்பையும் பொறுத்து அமைகின்றது. நமக்கு நெல் அவசியமாயின் நெல் உயர்ந்ததாகவும் புல் அவசியமாயின் புல் உயர்ந்ததாகவும் அமைகின்றது. ஆனால் சாதாரண வழக்கில் நெல் உயர்ந்தது என்னும் புல் பயனற்றது என்னும் கணிக்கிறோம். இதற்கு அடிப்படையாக அமைவது நமது பயன் பாடாகும். ஒருவேளை நாம் புல்லை உண்டு வாழக்கூடியவர்களாக இருந்திருப்பின் புல்லானது நெல்லை விட உயர்ந்ததாகக் கருதப்பட்டிருக்கும்.

இயற்கையில் புல்லின் அளவு நெல்லை விடப் பலமடங்கு அதிகமானதாக அமைந்து விடுகின்றது. அதற்குக் காரணமாக அமைவது புல்லின் இயல்பு வாழ்க்கை. தானாகவே தளைத்து வருகின்றது புல். ஆனால் நெல்லை நாம் விதைத்துத் தான் பெற வேண்டியுள்ளது.

சில சந்தர்ப்பங்களில் ஒன்றினது வழங்கல் (Supply) நமது தேவைக்கு மிக அதிகமாக அமையும் போது அதற்கு ஒரு அதிக பெறுமதி கொடுக்கப்படுவதில்லை. மிகவும் குறைந்த மதிப்பே கொடுக்கப்படுகின்றது. நெல்லுக்குக்கொடுக்க வேண்டிய முக்கியத் துவத்தைப் புல்லுக்குக் கொடுக்காமைக்கு இதுவும் ஒரு காரணமாக அமையலாம். மறுபுறத்தில் புல்லானது எமது உழைப்பை வேண்டி நிற்பதில்லை. அது தானாகவே தன்னைப் பெருக்கிக் கொள்கின்றது. ஆனால் நெல்லோ அதிகளவான எமது உழைப்பை வேண்டி நிற்பதால் அதற்கு ஒரு மதிப்பு அல்லது பெறுமதி என்பது அவசியமாகின்றது எனக் கருதுவதும் உண்டு. உண்மையென்னவெனில் புல் இல்லாமல் நெல்லுக்கு வாய்ப்பே இல்லை என்பது தான். என்ன! புதிராக இருக்கின்றதா? புதிரல்ல வாசகர்களே! அது உலகியல் உண்மை.



“இயற்கையில் புல்லின் அளவு நெல்லை விடப் பலமடங்கு அதிகமானதாக அமைந்து விடுகின்றது. அதற்குக் காரணமாக அமைவது புல்லின் இயல்பு வாழ்க்கை. தானாகவே தளைத்து வருகின்றது புல். ஆனால் நெல்லை நாம் விதைத்துத் தான் பெற வேண்டியுள்ளது.”

முதலில் புல்லைப் பற்றிப் பார்ப்போம். நெல்லைப்பற்றி அதிகம் நாம் அறிந்துள்ளோம். ஆனால் நெல்லுக்கு வாழ்வளிக்கும் புல்லைப்பற்றி நாம் புரிந்திருப்பது மிகவும் குறைவு. உலக நிலப்பரப்பில் அதிகளவு பகுதியைத் தனதாக்கி வைத்திருப்பது புல். இந்தப் புல் இந்தப் பூமிக்குச் செலவழிப்பையும், பசுமையையும் கொடுக்கின்றது. அதுமட்டுமன்றி நமது உயிர் வாழ்தலிலும் அவற்றின் பங்கு அளப்பரியன. நகர்ப்புறங்களில் பசுமைக்காக நாம் பணத்தைக் கொடுத்துப் பயிரிட வேண்டிய தேவை ஏற்படுவதற்குக் காரணம் அவற்றின் பங்களிப்பும் அவசியமென்பதால் தான்.

இயற்கையின் மிகப் பெறுமதியான பங்களிப்பில் மிகவும் முக்கியமானது இந்தப் புல் தான். பசுமையின் பெருக்கத்துக்கும், பசி ஆறவைக்கும் உணவுவகைகளின் ஆரம்பத்துக்கும் அவற்றின் தொடர்ச்சிக்கும் அடிப்படையாக அமைவது இந்தப் புல்தான். இயற்கையின் அன்பளிப்பான இந்தப் புல் எமக்குத் தரும் ஒத்துழைப்பை நாம் ஒரு பொழுதும் குறைத்து மதிப்பிடலாகாது. அப்படி எதைத்தான் இந்தப் புல் செய்கிறது என்று புருவத்தை உயர்த்துவது எனக்குத் தெரிகிறது. இன்று நாம் பயன்படுத்திக் கொள்ளும் எந்தத் தாவரங்களாக இருப்பினும் நெல்லும், உள்ளடலங்கலாக பயிரிடப்படுகின்ற நிலப்பரப்பு நிச்சயமாகப் ஒரு காலத்தில் புல்லுக்குச் சொந்தமாக இருந்தவைதான். இங்கேதான் புல்லின் மகிமையை நாம் புரிந்து கொள்ள வேண்டியுள்ளது. எங்கெல்லாம் நாம் பயிர் செய்வதற்கான வாய்ப்பு இருப்பதாக நமக்கு அறிவிப்பது தான் புல்லின் புனிதமான பங்களிப்பு. இயற்கையின் ஒத்துழைப்புடன் எத்தனையோ சவால்களுக்கு முகம் கொடுத்து அந்த மண்ணில் தன்னை நிலை நிறுத்தி பசுமை எனும் மொழியில் மனிதன் தனக்குத் தேவையானவற்றைப் பயிர் செய்வதற்கு பாதை வகுத்துக் கொடுப்பது தான் புல்லின் புனிதமான செயற்பாடு.

நாம் இன்று பயிர் நிலங்களாகப் பயன்படுத்தும் அத்தனை நிலப்பரப்புகளும் புல்லின் உடமையாக இருந்தவை தான். தன்னைத் தவிர ஏனைய தேவைகளுக்காகத் தன்னைப் பயன்படுத்துவதற்குத் தாராளமாக ஒத்துழைப்புக் கொடுப்பதுதான் இந்தப்புல். அதுமட்டுமல்ல தனது பயன்பாட்டில் இருந்த நிலத்தைத் தானாக விட்டுக் கொடுத்து அதனால் தன்னை இழந்து, தாங்கொணா வெயிலில் கருக்கப்பட்டுப் பின் தகனம் செய்யப் பட்டாலும் மீண்டும் தனது பங்களிப்பைச் செய்வதில் தயங்குவதில்லை. இயற்கை ஒரு பொழுதும் ஏற்றத்தாழ்வுகளுக்கு இடமளிப்பதில்லை. ஆனால் மனிதர்களாகிய நாம் தான் புல்லையும் நெல்லையும் ஒப்பிடுகிறோம். நெல்லின் விருத்திக்குப் பண்படுத்தப்படக்கூடிய நிலப்பரப்பு என்பது புல்லினால் நமக்கு அடையாளப்படுத்தப் பட்டவை என்பதைக் கூட நாம் புரிவதில்லை. புல்முளைக்காத நிலத்தில் எதுவுமே முளைக்காது என்பது மட்டும் நாம் அறிந்த உண்மை. ஆனால் இந்த நிலம் பொருத்தமான நிலம் என்பதை அறைகூவி நம்மை அழைப்பது புல் என்பதை ஏனோ நாம் புரிந்து கொள்வதில்லை.

KG Master-kgmaster@rogers.com

உண்மையில் இங்கு நான் வெளிப்படுத்த முனையும் விடயம் என்னவெனில் நாம் ஒவ்வொருவரும் எந்த நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம் என்பது எமது மனோபாவங்களின் அடிப்படைகளினால் தீர்மானிக்கப்படுகின்றது என்பது தான்.
ஒவ்வொரு மனிதனும் தனது அடிப்படை மனோபாவங்கள் தனது முன்னேற்றத்துக்கு பயனற்றதாக இருக்குமாயின் புதிய மனோபாவங்களைப் பயிரிடல் வேண்டும். சிறுவயதில் இருந்து அறிந்தோ அறியாமலோ பல விடயங்கள் நமது ஆழ்மனதில் பதிவு செய்யப்பட்டிருக்கலாம். இங்கே ஆழ்மனமானது நிலம் என்று கொள்ளல் வேண்டும். பதிவு செய்யப் பட்டுள்ள மனோபாவங்கள் புல் எனக் கொள்ளுங்கள். ஆழ்மனம் எனும் நிலத்தை ஆரம்பத்தில் இருந்து தாமாகச் சொந்தமாக்கியிருக்கும் புல் எனும் மனோபாவங்கள் நமது வாழ்க்கைக்குச் சிறப்பைத்தர உதவுமாயின் புல்லுடனேயே வாழலாம். மாறாக புதிய மனோபாவங்களாகிய நெல்லை விதைப்பதன் மூலம் தான் வாழ்வைச் சிறப்பாக்க வேண்டுமாயின் புல்லை அகற்றி நெல்லைப் பயிரிடல் வேண்டும். இங்கே நிலம் (ஆழ்மனம்) ஒன்றுதான். நெல்லா அல்லது புல்லா என்பது எமது தெரிவு. நெல்லை விதைப்பதற்கான நிலத்தைப் புல் தெரிவு செய்து விட்டது. நெல்லுக்குக்கேற்றவாறு அதைப்பண்படுத்தவும் புல் ஒத்துழைப்புத் தருகின்றது. அதற்காகத் தன்னை அர்ப்பணிக்கவும் தயாராக இருக்கின்றது. தொடர்ச்சியாக நெல்லைப் பயிரிடுவதாயின் தானாக விலகிக் கொள்வதாகவும் அது உத்தரவாதமளிக்கின்றது. நாம் செய்ய வேண்டியதெல்லாம் ஒன்றே ஒன்று தான். பண்படுத்தக்கூடிய நிலம் என்று பறை சாற்றும் புல்லுக்கு நன்றி சொல்வது தான்.

அன்பார்ந்த விளம்பரம் வாசகர்களுக்கு: வாழ்வியல் சார்ந்த எனது ஆக்கங்கள் எழுத்து வடிவில் 'விளம்பரம்' பத்திரிகையிலும் ஒலிவடிவில் கீதவாணி வானொலியிலும் இடம்பெறுகின்றன. இயலுமானவரை இவற்றை உங்கள் உற்றார், உறவினர், நண்பர்களுடன் பகிர்ந்து கொள்ளுங்கள்.
நன்றியுடன் KG Master

**அமைதியின் குரல் - Words of Peace**

அன்பு, அமைதி, ஆனந்தம், கடவுள் எனப் பல பெயர் கொண்டு அழைத்தாலும் விடயம் ஒன்றுதான். நீங்கள் வெளியே தேடும் ஆனந்தமும் நிம்மதியும் உங்களின் உள்ளேதான் உள்ளது. தேடுங்கள். எல்லா இடங்களிலும் தேடுங்கள். கிடைக்கவில்லை என்றால் என்னிடம் வாருங்கள். அதனை நீங்கள் உங்கள் வாழ்வில் அனுபவிப்பதற்கு என்னால் உதவிசெய்ய முடியும். - மஹாராஜி

**1-877-707-3221 / தமிழில் - 416.431.5000**

**- MAHARAJI -**



மஹாராஜியின் உரைகள்

**On DVD**
இலவச DVDக்கு அழையுங்கள்
(416) 431-5000
1 877 707 3221

**On TV**
Saturdays at 11:00 am
Rogers Cable Channel - 20
Bell Express vu Channel - 219

# மயிலைப் பாருங்கள் அழகு



அன்ன நடை அழகு நடை என்பார்கள். ஆனால் மயிலின் நடை அதனை விட அழகு. மயில் நடக்கும் போது தலையை முன்னும் பின்னும் அசைத்து நடக்கும் அழகை வன்னியில் இருந்த காலத்தில் நேரடியாகப் பார்த்து அனுபவித்த நினைவு இன்றும் பசுமரத்து ஆணிபோல நினைவில் நிற்கின்றது. எமது மனத்தில் பதியப்படுவன அனைத்தும் நினைவுக்கு வருவதில்லை. ஆனால் ஆழ்மனத்தில் பதியப்பட்டவை சட்டென வெளிவருகின்றன. காரணம் மனத்தில் முழுமையாக இடம்பிடித்துக் கொள்வதே காரணம். காலைத் தூக்கி வைக்கும் போது கூட அதில் ஒரு நளினம், எளிமை அவதானம் அனைத்தும் மயிலுக்கு உண்டு. பெண் மயிலைவிட தோகையோடு வரும் ஆண்மயிலின் அழகு பார்ப்பதற்கு மனதைக் கவரும். நீண்டதோகை, லாவகமாகத் தூக்கிக் கொண்டு அது உணவினைத்தேடித்தேடி அங்கும் இங்கும் பார்த்தபடி காலடிவைக்கும் அழகே அழகு. வீட்டில் வளர்க்கப்படும் மயில்களைவிட காட்டு மயில்களிடம் மிரட்சிப்பார்வை, ஐயம் குடிகொண்டிருக்கும் மிகச் சிறிய சத்தம் கேட்டாலே மிகக்கூர்மையாக அவதானிப்பதுமட்டுமல்ல ஓடி ஒழிந்துகொள்ளும் அல்லது பறந்து செல்லும் அழகும் அலாதியுமானது.

வண்ணத்தோகை வனப்புமிக்க வர்ணங்கள். பச்சை, நீலம், கருநீலம், நாவல், பவளம் எனப்பல்வேறு நிறங்கள் மிளிரும் அழகிய வர்ணம் நிறைந்தது மயில். ஆண்மயிலும், பெண்மயிலும் வலம் வரும் காட்சி காதலர்கள் தனிமையில் கருத்தொருமித்து கூடி இன்பம் பெறும் காட்சியாகச் சங்க இலக்கியக்காட்சியாகக் காட்சிதருகின்றது.

வெண்மயில் வெள்ளை நிறத்தில் ஒளிர்வதாக படங்களிலும், இலக்கியங்களிலும் வர்ணிக்கப்படுகின்றது. அது உண்மையான-தா? அல்லது கற்பனையானதா? என்ற கருத்து சிலரிடம், வெள்ளை நிறத்து மயில்கள் சீனாவில் உள்ளன. அவற்றின் அழகும் ஒரு தனியழகே.



**த. சிவபாலு எம்.ஏ.**

அழகு கண்ணழகைப் பார்த்து? கருத்தழகைக் கண்டு, உடலழகை மெச்சி வியப்படையாமல் இருப்பவர்கள் யார்? “நான் மயிலாக வேண்டும்” எனக் கனவு காண்பவர்கள் எத்தனைபேர். இளமைக்காலத்தில் பெண்குழந்தைகள் மயிலின் அழகைக் கண்டு அதில் லயித்து விடுவது உண்மை. அதிலிருந்து விடுபடமுடியாமல் தாங்கள் மயிலாகவே பாவனை செய்வார்கள். அந்த அழகின் கவர்ச்சி அத்துணை வசீகரமானது. குழந்தைகளுக்கு மட்டுமா? காதல் வயப்படும் கட்டிழமைப் பருவத்து மங்கையர் விதி விலக்கா? கனவு காண்பார்கள். தங்களை மயிலாகவே கற்பனையும் செய்வார்கள்.

மயிலின் கண்போல தங்களுக்கும் இருக்கவேண்டும் எனப் பெண்கள் ஆசைப்படுவதும் அதேபோன்று அலங்காரம் செய்வதும் இயல்பு. கண்ணிமை, புருவம் என்பனவற்றை மயிலின் வண்ணத்தைத் தீட்டி அழகுபார்ப்பது அவர்களுக்கு மனமகிழ்வைத் தருகின்றது.




இயற்கைக்கு மாறாக பொம்மைகளைக்கூட மயிலின் சாயலில் வடிவமைத்து அல்லது அலங்கரித்து அழகாக்கிக் காட்சிப்பொருளாக வைத்து அழகுபடுத்துகின்றார்கள். உலகில் மிகவும் விரும்பி வாங்கப்படும் பொம்மைகளில் ‘பார்பி’ எனப்படும் பொம்மைகள் கூட மயில் அலங்காரத்தோடு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்துக்கது. 1988இல் செய்யப்பட்ட இந்த “மயில் பார்பி” பொம்மை கிட்டத்தட்ட 130 அமெரிக்க டொலர்களுக்கு விற்பனைக்கு வந்துள்ளன என்றால் அதன் அழகின் கவர்ச்சி எத்துணை என்பது அவர்களின் கைவண்ணத்தில கலைவண்ணம் மிளிர்கின்றது என்பதே பொருளாகும்.



# கருந்துளைகள் -18

சென்ற தடவை ஈர்ப்பலைகள் பற்றித் தெரிந்து கொண்டோம். இனிக் கருந்துளைகளுக்கும் ஈர்ப்பலைகளுக்குமான தொடர்பினைப் பார்ப்போம். நாம் இங்கு கருந்துளைகள் இரண்டு இணையும் போதான அதிலும் சிறப்பாக பெருந்திணைவுக் கருந்துளைகள் இரண்டு இணைகையில் உண்டாகும் ஈர்ப்பலைகள் பற்றி விபரங்களையே பார்க்கப் போகின்றோம். பெருந்திணிவுக் கருந்துளைகள் இரண்டு அருகருகே வந்து நேரடியாகவே இணைந்து கொள்வதில்லை என்பது உங்களுக்குத் தெரிந்திருக்கும். அருகருகே வரும்போது அவை ஒன்றைஒன்று வேகமாக வலம் வரத் தொடங்கும். அவற்றின் பாதைகள் வட்டமாக இராமல் நீள்வளையப் பாதையாக இருக்கும். இதனால் சிலகாலங்களில் இரண்டும் மிகக் கிட்டவாகவும், சிலகாலங்களில் தூரவாகவும் இயங்கிக் கொண்டிருப்பதைக் காணலாம். (புவியானது கதிரவனை நீள்வளையப் பாதையில் வலம் வருவது போன்றே) அண்மையாக வருங் காலங்களில் அவற்றின் வேகங்கள் பெரியதாகவும் தூரமாக வருகையில் வேகம் குறைவாகவும் இருக்கும் என்பது உங்களுக்குத் தெரிந்ததே.



## பேரண்டம் - 66

வேகமாக இயங்கும் பெருந்திணிவுக் கருந்துளைகளில் இருந்து இயக்கசக்தியானது வெளியினுள் இழக்கப்பட, எங்களுக்குத் தெரிந்தபடியே, அவ்விடங்களில் இருந்து ஈர்ப்பலைகள் நாற்பரிமாணவெளியினுள் செல்லும். இரண்டு கருந்துளைகளில் இருந்தும் ஈர்ப்பலைகள் வெளியினுள் செல்லும். அத்துடன் அவற்றின் நிலைமாற்றங்களுக்கு ஏற்பவே மாற்றங்களின்படியாக வெவ்வேறு அளவிலான சக்திகளைக் காவும் ஈர்ப்பலைகள் தொடர்ச்சியாக, ஒன்றன் பின் ஒன்றாக பேரண்ட வெளியில் வலிமையுடன் பயணப்படும். கிட்டத்தட்ட கருந்துளைகளின் இயக்கச்சக்தியின் முப்பது வீதமாகிலும் ஈர்ப்பலைகளால் வெயில் இழுத்துச் செல்லப்படும் என்று ஆய்வாளர்கள் கணித்திருக்கின்றார்கள். எனவே புவியினால் செலுத்தப்படும் ஈர்ப்பலைகளைப் போலல்லாது இந்த ஈர்ப்பலைகள் மிகவும் வலிமையானவையாகக் காணப்படும். அதனால் இவற்றினால் ஏற்படுத்தப்படும் இடப்பெயர்ச்சிகள் (அதாவது அலையின் ஏற்றங்களும் இறக்கங்களும்) ஒப்பீட்டளவில் பெரியனவாக இருக்கும். அதனால் இந்த ஈர்ப்பலைகளை இனம் காணுவது சிறிது வசதியாக இருக்கும் என ஆய்வாளர்கள் கூறுகின்றார்கள்.

பேரண்டத்தின் பல இடங்களில் பெருந்திணிவுக் கருந்துளைகளைக் கொண்ட கலக்சிகள் இணைந்து கொண்டிருப்பதை ஆய்வாளர்கள் இனம் கண்டுள்ளார்கள். எனவே அவ்விடங்களில் ஈர்ப்பலைகள் செல்லவேண்டும் என்பது அவர்களினது கூற்று. விண்வெளியின் எத்திசையை நோக்கினாலும் இந்தக் கலக்சிகள்தான். அவ்வளவில் கலக்சிகளின் செல்வாக்கு விண்வெளியில் உள்ளது. எனவே கலக்சிகள் இணைவது கூடப் பெருந்தொகையில் இருக்கின்றது. அதனால் வலிமையான ஈர்ப்பலைகள் பேரண்டம் முழுவதுமே விரைந்து பரவிக் கொண்டிருக்கின்றன.

இந்த ஈர்ப்பலைகளை இனம் கண்டு கொள்ளக்கூடிய தொழில் நுட்பம் எங்களுக்குக் கிடைக்குமாயின் பேரண்டத்தின் பல இரகசியங்கள் தெரியவரலாம் என்பதனாலேயே ஈர்ப்பலைகளை உணரக் கூடியதான கருவிகளை கண்டுபிடிப்பதில் விஞ்ஞானிகள் தீவிரமாக ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றார்கள். அவ்வகைக் கருவிகள் ஈர்ப்புத் தொலைகாட்டிகள் என அழைக்கப்படப் போகின்றன.

ஈர்ப்பலைகளை இனம் காணவேண்டியது வானவியலைப் பொறுத்தவரையில் அவசியமான ஒன்றாகும். 1608ல் வான்பரப்பினை நோக்கி முதன்முதலில் கலிலியோவின் தொலைகாட்டியானது வைக்கப்பட்டதிலிருந்து எத்தனையோ வகையான தொலைகாட்டிகள் வான்பரப்பை ஆராய்ந்து செய்திகளை எங்களுக்குத் தருகின்றன. எக்ஸ்ரே தொலைகாட்டிகள், புறஊதாக்கதிர்த் தொலைகாட்டிகள், சென்னிறக் கீழ்க்கதிர்த் தொலைகாட்டிகள், காமாக்கதிர்த் தொலைகாட்டிகள் எனத் தொலைகாட்டிகள் புதுப்புதுப் பரிமாணங்கள் எடுத்தாலும் அவையெல்லாம் ஒளியியற் தொலைகாட்டிகளின் அதாவது மின்காந்த அலைகளின் அடிப்படையிலானவை. ஆனால் ஈர்ப்பலைகள் மின்காந்த அலைகள் அல்ல. அத்துடன் இருண்ட கருந்துளைகளின் இருக்கையை மேலும் உறுதிப்படுத்தும் தன்மையவையாக இருக்கப்போகின்றன. எனவே வான்பரப்பை பாக்கப் போகும் புதிய சாளரமாகவே இந்த ஈர்ப்புத் தொலைகாட்டிகளை எதிர்பார்க்கின்றார்கள், விண்வெளி ஆய்வாளர்கள்.

கலக்சிகள் இரண்டு இணையும் போது அவற்றின் கருந்துளைகள் இணைகின்றன எனக் கண்டு கொண்டோம். அவ்விதம் இணையும்போது அவை பெரும் வேகத்துடன் ஒன்றை ஒன்று வலம் வருவதால் வலிமையான ஈர்ப்பலைகள் உருவாகுகின்றன அல்லவா. இதனால் அக்கருந்துளைகளில் இன்னொரு விசித்திரமான விளைவு கூட ஏற்படலாம். வலிமையான ஈர்ப்பலைகளும், கருந்துளைகளின் அபரிமிதமான வேகமும் சேர, இரண்டு கருந்துளைகளில் ஒன்று அந்தக் கலக்சித் தொகுதியில் இருந்தும் வெளியே தள்ளப்பட்டுவிடலாம். இதற்கான வாய்ப்புக்களும் உண்டு. அப்படியான வேளைகளில் பெருந் திணிவுக் கருந்துளையானது கலக்சியற்ற ஒரு தனிக் கருந்துளையாக வந்துவிடலாம். அப்படியாக கலக்சிகளைக் கொண்டிராத அல்லது கலக்சி ஒன்றினுள் இல்லாத கருந்துளைகள் ஏதும் இதுவரையில் அறியப்படவில்லை. ஆனாலும் அப்படியான கருந்துளைகள் இருப்பதற்கும் சாத்தியங்கள் உண்டு. அவற்றினை அறிந்து கொள்வதற்கான வழிமுறைகள் இன்னமும் எம்மிடை வந்தடையவில்லையோ தெரியவில்லை.

பெருந்திணிவுக் கருந்துளைகளைப் பற்றி இத்துடன் நிறுத்திக் கொண்டு அடுத்து மூன்றாவது வகையான குறுங்கருந்துளைகள் பற்றிப் பார்ப்போம்.



- கனி -
416.261.1348
kani1vimal@hotmail.com



# ஆயுள் காப்புறுதி பணம் எவர் கைகளுக்கு போய் சேர வேண்டும்?

## ஒரு நீதிமன்ற தீர்ப்பின் அனுபவம்

கனடாவில் பிரிட்டிஷ் கொலம்பியா மாகாணத்தின் தலைநகரான “விக்ரோரியா” நகரில் உள்ள நீதிமன்றத்தில் கடந்த மார்ச் 03. 2008 இல் நடந்த வழக்கும், தொடர்ந்து வழக்கில் வழங்கப்பட்ட தீர்ப்பும் கனடாவில் ஆயுள் காப்புறுதி ஒப்பந்தம் வைத்திருக்கும் சகலரையும் ஒருமுறை எச்சரிக்கை செய்யும் நீதித்துறையின் வரலாற்று நிகழ்வாகும்.

**‘ரெயின்ஸ்வோர்ட் எதிர் ஹிரிகொய்ரி’ (RAINSFORD VS GREGOIRE) என்னும் வழக்கில் மரணத்தின் பின்பு மரணமானவரின் ஆயுள் காப்புறுதி ஒப்பந்த தொகை அவரது ஒரேயொரு மகளுக்கா??** (Ms. Rainsford 28-Yrs.) **அல்லது அவரது சகோதரிக்கா? (Mrs. Gregoire) போய் சேர வேண்டும். இதுவே இவ்வரலாற்று நிகழ்வில் பதியப்பட்ட தீர்ப்பாகும்.** ‘திரு. ஸெரிவ் ஹோர்டன் நீல்சன்’ என்னும் அந்த மனிதன் கடந்த டிசம்பர் 28. 2004 இல் தமது 51வது வயதில் புற்றுநோய் காரணமாக மரணமடைந்திருந்தார்.

இவர் மரணமாகியிருந்த போது 28 வயதாகவிருந்து நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்த இவரது மகள் மூன்று வயதாக இருந்த போது தமது மனைவியினை இந்த மனிதன் விவாகரத்து செய்து விட்டார். அவரது மனைவி இன்னொருவரை திருமணம் செய்து, இருவரும் இதே பிள்ளையினையும் வளர்த்து வந்தனர்.

ஆனால் அன்று மரணமான திரு. ஸெரிவ். ஹோர்டன் நீல்சன் நீதிமன்ற உதவிகளுடன் தமது ஒரேயொரு மகளுடன் தந்தை - மகள் என்ற உறவுகளை பேணிவந்தார். தமது ஆயுள் காப்புறுதி ஒப்பந்தத்தில் தமது மரணத்தின் பின்பு பணம் பெறும் உரிமையினை தனது சகோதரியின் பெயரினை ஏற்கனவே பதிந்து வைத்திருந்த இந்த மனிதன் மகள் ஒன்பது வயதாக இருக்கும் போது (ஒகஸ்ட்-17-1989)இல் மகள் மீது கொண்ட பாசத்தின் காரணமாக தமது ஆயுள்காப்புறுதி தொகையினை பெறும் உரிமையினை சகோதரியிலிருந்து மகளுக்கு மாற்றியிருந்தார்.

மகள் 13 வயதாக இருந்த போது தந்தை - மகள் உறவு அறுந்து விட்டது. 19 வயதில் தமது பெயருடன் சேர்ந்த குடும்ப பெயரினையும் வளர்ப்பு தந்தையின் பெயருக்கு அதாவது தாயின் இரண்டாவது கணவனின் பெயருக்கு சட்டரீதியாக மாற்றியமைத்ததிலிருந்து தமது பெற்ற தந்தையினையே உதறி தள்ளிய மாதிரி எறிந்து அவர்களுக்குகிடையிலான இடைவெளியும் அதிகரித்துவிட்டது. தமது சொந்த மகளின் முரண்பாடும் உறவுகளும் முறிந்த நிலையில் தமது ஆயுள் காப்புறுதி ஒப்பந்தத்தில் பணம் பெறும் உரிமையினை மீண்டும் (ஏப்ரல் - 23 -2003) இல் தமது சகோதரியின் பெயருக்கு இந்த மனிதன் விண்ணப்ப படிவங்களை எடுத்து நிரப்பி கொடுத்து (Beneficiary Change Form) மாற்றிவிட்டார்.

இவரது வாழ்வு, வாழ்வின் நம்பிக்கை உறவுகள், சந்தோஷங்கள் யாவும் சகோதரியின் உறவிலேயே தொடர்ந்தது. பிரிட்டிஷ் கொலம்பியா மாகாணத்தின் ‘சிட்னி’ என்னும் நகரில் சகோதரி நடாத்திய தேநீர் கடை (Coffee & Donut Shop) வர்த்தகத்திலும் இவரே உறுதுணையாக இருந்து வந்தார் என்பதும் பின்னர் 2005 மார்ச் இல் சகோதரியின் நிலைமை வங்குரோத்து நிலைமைக்கு போனது என்ற தகவல்களும் வழக்கில் வழங்கப்பட்டிருந்து.

அவருக்கும் சகோதரிக்கும் உறவு பகையாக மாறிவிட்டது. ஏற்கனவே அறுந்த மகளின் உறவு பாசமாக ஆரம்பிக்கப்பட்டு விட்டது. டிசம்பர்- 28- - 2004 இல் இறுதியாக அவர் பரலோகம் போய் சேர்ந்து விட்டார்.

சகோதரியின் பகைமை காரணமாக மரணப்படுக்கையில் இருக்கும் காலத்தில் வந்து மீண்டும் சேர்ந்து கொண்ட மகளின்

## கனடிய தகவல் தொடர் 127

> “ ஆயுள் காப்புறுதி ஒப்பந்தத்தில் முதலாவது வரிசையில் பணம் பெற உரியவர்கள். இதற்கு பலரையும் எந்த விகிதாசாரத்தில் பெற உரித்துடையவர்கள் என நியமிக்கலாம்.
> ***(Primery Beneficiaries)*** ”

யூலை - 21- 2004 இல் பயங்கரமாக அந்த மனிதன் நோய்வாய்ப்பட்டார். நோய்வாய்ப்பட்ட நிலையில் சகோதரியே உதவியாக நின்றிருந்தார். தமது நிலைமையினை அறிந்து ஒகஸ்ட் - 22 - 2004இல் தமது ஓய்வூதிய திட்டத்தின் பணத்தினை பெறும் உரிமையினை சகோதரிக்கு சட்டரீதியாக மாற்றினார். வங்கியிலிருக்கும் பணம் பெறும் உரிமையும் மாற்றப்பட்டது. ஏனெனில் அவரது மரணம் இன்னும் சில மாதங்களில் என்பது மருத்துவர்களுக்கும் தெரிந்து விட்டது. சகோதரிக்கு தமது பணம் வருமானம் தொடர்பான சகல உரிமைகளையும் எழுதி வைத்து விட்டார். ‘மரணம்’ என்பது மருத்துவரீதியாக நிச்சயிக்கப்பட்டால் இறுதி மரணத்தின் முன்பே ஆயுள் காப்புறுதியிலிருந்து ஒரு பகுதி தொகையினை முற்பணமாக பெறலாம் என்பது வழமையான ஒழுங்கு விதியாகும்.

இந்த அடிப்படையில் $40,000 டொலர் பணமும் ஆயுள்காப்புறுதி ஒப்பந்தத்தில் இருந்து பெற்று சகலதையும் சகோதரியே அனுபவித்து வந்தார்.

ஒகஸ்ற் 2004 இல் இவர் கடும் நோயால் பாதிக்கப்பட்டது அறிந்து இதுவரை காலமும் தொடர்புகள் அறுந்து இருந்த மகள் மீண்டும் வந்து தந்தையுடன் சேர்ந்து தங்கள் உறவினை பலப்படுத்தி கொள்ள ஆரம்பித்து அது நன்கு இறுக்கமாக வளர்ந்து வந்தது.

சகோதரி மோசமாக தமது பணவருமானங்களை செலவு செய்வதை அறிந்து கவலை கொண்ட இவர் ஒக்ரோபர்- 04-2004 இல் தமது இறுதி நோய்வாய்ப்பட்ட காலத்தில் தமது ஒரேயொரு மகளுக்கு மட்டும் தமது சொத்து, பொருள், வருமானம் யாவும் போய் சேர வேண்டும் என இறுதி மரண சாசன பத்திரமும் (Last will) எழுதி வைத்து விட்டார். தமது அரச ஓய்வூதிய வருமானம் சேமிப்பு யாவும் சகோதரியின் பெயரில் இருந்து மகளின் பெயருக்கு நேரடியாகவே மாற்றியமைத்து விட்டார்.

தமது பணம், வருமானங்களை மோசடி செய்தது என குறிப்பிட்டு சகோதரிக்கு எதிராக தமது நோய்வாய்ப்பட்ட நிலையில் ஒலிப்பதிவில் வாக்கு மூலம் வழங்கி வழக்கும் தொடர்ந்திருந்தார். அதாவது பெயரில் இறுதி மரண சாசன பத்திரம் என எழுதி வைத்து யாவும் மாற்றியமைத்த போதிலும் அவர் செய்த தப்பு ஆயுள் காப்புறுதியில் முறைப்படி கம்பனி விண்ணப்ப படிவங்களை எடுத்து மகளின் பெயரில் எதுவும் மாற்றியமைக்க தவறியதாகும். சட்டரீதியாக எழுதி வைக்கப்பட்ட இறுதி மரணசாசன பத்திரம் போதும் என அந்த மனிதன் நினைத்து இருக்கலாம்.

இவரது மரணத்தின் பின்பே மகளும் சகோதரியும் நீதிமன்றத்தில் போய் மோத வேண்டிய நிலைமை ஏற்பட்டது. நீதி மன்றத் தீர்ப்பு எப்படி அமைந்தது?. ஆயுள் காப்புறுதி தொகை சகோதரிக்கே முழுவதுமாக போய் சேர வேண்டும் என நீதிமன்றம் இவ்வழக்கில் தீர்ப்பு வழங்கியிருந்தது.

இங்கு இந்த மனிதன் விட்ட பாரிய தப்பு! நேரடியாக ஆயுள் காப்புறுதி ஒப்பந்த பத்திரத்தில் பணம் பெற உரித்துடையவர் பெயரினை மாற்றியமைக்க தவறியதேயாகும்.

அவரது மகள் நீதிமன்றம் போயும் சாதக-மாக அவருக்கு தீர்ப்பு கிடைக்கவில்லை. இறுதியாக சட்டரீதியாக எழுதிவைத்த மரண சாசனத்தின் பத்திரமும் கருத்தில் கொள்ளப் படவில்லை. ஒலிப்பதிவு நாடாவில் வழங்கிய சகோதரிக்கு எதிரான முறைப்பாடும் இங்கு கைகொடுக்கவில்லை. ஏனெனில் காப்புறுதி கம்பனியின் பதிவில் சகோதரியின் பெயரே பதியப்பட்டு இருந்து அதன் பின்னர் இப்பெயர் மாற்றப்படவும் இல்லை.

**இங்கு இவ்வழக்கின் தீர்ப்பிலிருந்து கனடாவில் ஆயுள் காப்புறுதி ஒப்பந்தம் வைத்திருந்த யாவரும் என்ன பாடத்தினை அல்லது அனுபவத்தினை கற்றுக் கொண்டுள்ளோம். இதுவே இங்கு உள்ள கேள்வி?**

தங்கள் ஆயுள் காப்புறுதி ஒப்பந்தத்தில் பணம் பெற உரித்துடையவர் எவரை நியமித்து கொண்டீர்கள் என்பதனை பரிசீலனை செய்து கொள்ளுங்கள். மாற்றியமைக்க வேண்டிய கட்டாய நிலைமை உறவுகளுக்குள் ஏற்பட்டால் உடனடியாக காப்புறுதி வைத்திருக்கும் கம்பனியுடன் தொடர்பு கொண்டு அவர்களின் விண்ணப்ப படிவங்களை (Beneficiary Claim Change Form) எடுத்து நிரப்பி தங்களுக்கு விரும்பியவர்களின் பெயர்களை மாற்றியமைத்துக் கொள்ளுங்கள்.

“மரணம் என்பது எவருக்கும் சொல்லிக் கொண்டு வருவதில்லை.” மரணத்தின் பின்பு எவர் பெயர் பதிவில் உள்ளதோ அவர் பெயருக்கே பணம் போய் சேருமே தவிர மரணமாகியவரின் எந்த மரணசாசன பத்திர உரிமைகளில் குறிப்பிடப்பட்ட விருப்பங்கள் எதுவும் ஆயுள்காப்புறுதி ஒப்பந்தத்தில் வேலை செய்யாது.

இங்கு நான் நேரடியாக கனடாவில் நம்மவர்களுக்குள் எதிர்கொண்ட சில அனுபவங்களை இங்கு குறிப்பிட வேண்டும் போல இருப்பதால் குறிப்பிட விரும்புகிறேன்.

அந்த தமிழ் இளைஞன் திருமணத்தின் முன்பு தமது சகோதரர்களை ஆயுள்காப்புறுதி ஒப்பந்தத்தில் பணம் பெற உரித்துடையவர் என நியமித்திருந்தார். பின்னர் திருமணம் செய்துவிட்டார். திருமணவாழ்வும் சில வருடங்கள் தொடர்ந்த பின்பு ஏதோ துர்அதிஷ்டகாலம் இளம் வயதில் நோயால் மரணமாகிவிட்டார். ஆயுள்காப்புறுதி ஒப்பந்தத்தில் மனைவியின் பெயர் திருமணத்தின் பின்பு மாற்றியமைக்கப்படாத காரணத்தினால் சகோதரர்களே பணத்தினை எடுத்துக் கொண்டு கணவனை இழந்த இப்பெண்ணை நிர்கதியான நிலையில் கைவிட்டு விட்டனர்.

இப்படி பல சம்பவங்களை உதாரணமாக குறிப்பிடலாம். பணம்பெற உரித்துடையவ ரினை சரியாக நியமிக்க தவறியதாலேயோ அல்லது வாழ்வில் மாற்றங்கள் வரும்போது அல்லது தேவைகள் ஏற்படும் போது மாற்றியமைக்காத காரணத்தினாலேயோ மரணமாகியவரின் விருப்பத்திற்கு மாறாக பாதிக்கப்படுபவர்கள் எவரோ துன்பத்திலும் வறுமையிலும் சுழன்றடிக்க பணம் தேவை யற்றவர் கைகளுக்கு போய் சேருகிறது.

எனவே இங்கு தேவையான எச்சரிக்கை! தங்களின் சரியான நியமனம் ஆகும்!

ஆயுள் காப்புறுதி ஒப்பந்தத்தில் முதலாவது வரிசையில் பணம் பெற உரியவர்கள். இதற்கு பலரையும் எந்த விகிதாசாரத்தில் பெற உரித்துடையவர்கள் என நியமிக்கலாம். (Primery Beneficiaries)

முதலாவது வரிசையில் பணம்பெற உரித்துடையவர் உயிருடன் இல்லையாயின் இரண்டாவது நபர் எவர் என்பதனை நியமிக்கலாம். (Contingent Beneficiary)

இங்கு நியமிக்கப்பட்டவர்கள் எவரும் உயிருடன் அந்த நேரம் பணம் பெற இல்லையாயின் என்றால் மட்டுமே பணம் பெற உரித்துடையவரின் குடும்பங்கள் இப்பணத்தினை பெற முயற்சிக்கலாம்.



சிவ. பஞ்சலிங்கம் B.Com.,
(Licensed Insurance Broker)
காப்புறுதி சம்பந்தமான ஆலோசனைகளுக்கு:
416.321.0999

# ஆங்கில மருந்துகளால் வரும் கேடுகளும் யோகாசன சிகிச்சையின் சிறப்பும்

## நீண்டநாள் வாழ நினைத்ததை அடைய

ஆரோக்கியமான உடல் உண்மையிலேயே கிடைத்தற்கரிய பொக்கிஷம். அதைக் காப்பற்ற வேண்டியது ஒவ்வொருவரது கடமையாகும்.

### பரம்பரை நோய்கள்

எனது தாத்தாவுக்கு நீரிழிவு நோய் இருந்தது. எனது அப்பாவுக்கு உண்டு. அதனால் எனக்கும் இந்நோய் வந்துவிட்டது என்று ஒருவர் சொல்வதில் அர்த்தமில்லை. தாத்தாவும் அப்பாவும் செய்த தவறுகளால்தான் இந்நோய் தொடர்கின்றது.



அந்த தவறுகளை மகன் திருத்தி கொள்வானாயின் தனது அடுத்த தலைமுறைக்கு இந்த நீரிழிவு நோயைக் கொண்டு செல்ல வேண்டியிருக்காது. இதற்காக சில ஒழுக்கக்கட்டுப்பாட்டுடன் கூடிய யோகாசன சிகிச்சை முறைகள் மூலம் நோய் தீருகின்றது.

### நோய்கள் பெருக்கப்பட்டுள்ளன

அக்காலத்தை விட இந்தக் காலத்தில் மருத்துவமனைகளும், வைத்தியர்களும், அதி நவீன கருவிகளும், எராளமான மாத்திரைகளும், மருந்துகளும், மருத்துவ வசதிகளும் பெருகி உள்ளன. அப்படி இருக்கும்போது நோய்கள் குறைந்து நோயாளிகளே மிகவும் குறைவு என்ற அளவில் தானே இருக்க வேண்டும். என் அப்படி இல்லை என்றால் நோய்கள் பெருகவில்லை. அவை பெருக்கப்பட்டுள்ளன என்பதுதான் உண்மை.

### ஆங்கில மருந்துகளால் வரும் கேடுகள்

Antibiotics மருந்து என்பது நமது உடலிலுள்ள பக்டிறியாக்கள் (Bacteria) என்ற நுண்ணுயிர் கிருமிகளைச் கொல்லக் கூடிய இரசாயன (Chemical) மருந்தினால் ஆக்கப்பட்டவை. நமது உடலிலுள்ள பக்ரீயாக்கள் - வைரஸ் (Virus) அதிகமாக வருவதாலும் தொற்றுவதாலும் தான் நோய்கள் உருவாகின்றன என்பதுதான் நவீன மருத்துவத்தின் அடிப்படை தத்துவம். இதன் அடிப்படையில் தான் நோய்கள் அனைத்தும் ஆராயப்படு கின்றன. இறுதியில் அந்த நோய்களுக்குப் பெயரிடப்படுகின்றன.

ஒரு உறுப்பில் உள்ள நோய்க்குக் காரணம் பக்ரீயாக்களும் வைரஸ்களும்தான் என்ற போது அதை கொல்லுவதற்காகக் கொடுக்கப்படும் நுண்ணுயிர் கிருமி கொல்லிகள் (antibiotics & antivirus) ஆரம்பத்தில் ஓரளவுக்கு வேலை செய்கின்ற பின்பு ஏன் வேலை செய்ய மறுக்கின்றன.

உதாரணமாக ஒருவருக்கு முகத்தில் பருக்களோ அல்லது சைனஸ் சளியோ வருகின்றது. அதனை மேற்கூறிய மருந்து களை உபயோகித்து குணப்படுத்தலாம் பின்பு அதே வியாதி மறுபடி வரும்போது முதலில் கொடுத்த மாத்திரைகள் வேலை செய்யாமல் இன்னும் அதிக சக்தியுள்ள மாத்திரைகள் கொடுக்கப்பட வேண்டும். இவ்வாறு இந்தநோய் திரும்பத்திரும்ப வரும்போது எந்த மருந்தும் வேலை செய்ய மறுத்து விடுகின்றது. எனவே காலப் போக்கில் மருந்துகள் பலனின்றி சத்திர சிகிச்சை செய்யவேண்டியுள்ளது. இதில் ஒரு சந்தேகம் - மருந்துகள்தான் நோய்களை மேலும் மேலும் வளர்க்கிறதா?

### ஒரு சிறு விளக்கம்

தொண்டைநோவு, சைனஸ், காதுவலி, நீர்க்கடுப்பு, தலைவலி, தலைசுற்றல் இன்னும் பல நோய்களுக்கு பக்ரீயாக் கிருமிகள்தான் காரணம் என்று சொல்லப்பட்டபோதிலும் அவை மருந்தினால் மாறிய பின்னரும் திரும்ப வருகின்றது. ஏன் என்று ஆங்கில மருத்துவத்தால் அறியப்பட வில்லை. எனவே ஆங்கில மருத்துவத்தால் ஒருவரை நோயிலிருந்து பூரணமாக விடுபட்டு ஆரோக்கிய நிலைக்கு கொண்டு வரமுடியாத பரிதாப நிலைமையே காணப் படுகின்றது. அவர் வாழ்நாள் முழுவதும் நோயின் பிடிக்குள் தள்ளப்படுகின்றார்.

### யோகா சிகிச்சையின் அற்புத பலன்கள்

இவ்வாறு மருந்துகள் செயலிழந்த நிலையலிருந்து ஒரு நோயாளியை மீண்டுவரச்செய்வதற்கு ஒரே வழி நம் முன்னோர் நமக்கு விட்டுச் சென்ற யோகாசன சிகிச்சை முறைகள்தான். இப்பயிற்சியினை ஒரு நிபுணரின் உதவியுடன் உறுதியான நம்பிக்கையுடன் பொருத்தமான உணவு திட்டத்துடன் தொடர்ந்து விடாமுயற்சியுடன் பயிற்சிசெய்து வரும்போது எந்த நோயையும் முற்றாக விரட்டியடிக்கலாம் என்பது உறுதி. இந்த பயிற்சி முறைகள் நோய்வாய்ப்பட்ட உறுப்புகளைச் செம்மைப்படுத்தி அதற்குரிய இரத்த சுற்றோட்டங்களை ஒழுங்குபடுத்து வதல்தான் குறிப்பிட்ட நோயானது அந்த உறுப்பு பலம்பெற்று ஆரோக்கியமடைகின்றது.







ஆரோக்கிய வாழ்வு
N. செல்வசோதி
Diploma in Yoga Therapy (India)
416.289.2033 after 7:00pm



MOHAN
HOMEOPATHIC CLINIC
& MASSAGE CLINIC

- கழுத்து, முதுகு நோவு
- வாகன விபத்து
- மன அழுத்தம்
- விளையாட்டுக் காயங்கள்
- தலையிடி, தலைவருத்தும்

போன்ற நோய்களிற்கு அழையுங்கள் **டாக்டர் ஜே. மோகன்**




Dr. J. Mohan
D.H.M.S., N.H.C.

WE OFFER CONSULTATION
REGARDING ALL HEALTH PROBLEMS INCLUDING:

- STRESS
- SKIN PROBLEM
- RESPIRATORY PROBLEMS
- DIGESTIVE PROBLEMS
- VARICOSE VEINS
- BACK PROBLEM /NECK PROBLEM
- TENNIS ELBOW PROBLEM
- TREAT WITH MASSAGE THERAP
- ALLERGIES
- SEXUAL PROBLEMS
- SEXUAL PROBLEMS
- CHOLESTEROL
- TUMOR
- FOOT PROBLEM

HOMEOPATHIC TREATMENT ABOUT FOLLOWING

| | | | |
|---|---|---|---|
| Cough | Tonsillitis | Migraines | Prostatitis |
| Flu | Gout | Hair Loss | Obesity |
| Depression | Arthritis | Diabetes | Hemorrhoids |
| Anxiety | P.M.S | Cystitis | Stumatitis |
| Asthma | Leucorrhea | Cancer | Colitis |


Also other Acute & Chronic Problems
HOMEOPATHIC PRACTITIONER

TEL: 416-298-7537/416-291-3022
5200 Finch Ave, East Suite 210
At Middle Field, Scarborough, M1S 4Z4




YOGA - MEDITATION CLASSLESS

ஆரோக்கிய வாழ்விற்கு வழிகாட்டும் மருத்துவமுறை யோகாசன பயிற்சிகள்




மூட்டுவலி - முதுகுவலி - ஆஸ்துமா - இரத்த அழுத்தம், நீரிழிவு நோய் - பெண்களின் மாதவிடாய் கோளாறுகள் - உடல் எடை - தொந்தி குறைய மற்றும் மன அழுத்தம் போன்றவற்றிகு நிவாரணம்.

நீரிழிவு, இருதய நோயாளிகளுக்கு
தனிப்பட்ட நேரடி பயிற்சிகள்



GTA Square Mall இல் புதன்கிழமைகளில் காலை 8:00 மணிக்கு வகுப்புக்கள் ஆரம்பமாகின்றது

தொடர்புகளுக்கு: Scarborough - Markham - செல்வ சோதி - 416.289.2033

# மஞ்சள் காமாலை (*Jaundice*) யும் உணவும்

## எம்மை நாம் பாதுகாப்பது எப்படி?

நாம் இவ்வியாதியை செங்கண்மாரி எனவும் கூறுவதுண்டு. நமது உள்உறுப்புக்களில் இவ்வியாதிக்கு முக்கிய இடமாக அமைந்திருப்பது கல்லீரலாகும். இவ்வுறுப்பானது பாதுகாப்பான மார்புக் கூட்டின் கீழ்பகுதியில் வலப்பக்கமாகக் காணப்படுகின்றது. சுகதேகியான ஒருவரில் 1½ கிலோ நிறை கொண்டதாக இருக்கும். இத்தன்மை பொருந்திய உறுப்பில் ஏதும் குறைபாடு ஏற்படின் இதன் தொழில்பாடுகள் பாதிக்கப்படும். அதாவது நமது உடலுக்குத் தேவையான அணுக்களின் (Cell) இயக்கங்கள் நடைபெறாமல் போய்விடும். உடலுக்குத் தேவைப்படும் வெப்பம் கல்லீரலில் சேமித்து வைத்திருக்கும் கிளைக்கோஜன் (Glycogen) எரிசக்திப் (Energy) பொருளாகக் கிடைக்கின்றது. அத்துடன் இதில் ஏற்படும் கழிவுகளை பித்தநீராக (Bile) மாற்றி வைத்திருக்கும். இந்த பித்தநீரானது கொழுப்புப் பொருட்களைச் சீரணிக்க உதவுகின்றன. எனவே நமக்குத் தேவையான சக்தியை ஏற்படுத்தவும், கழிவுகளைப் பிரித்தெடுக்க வும் முக்கியமாக அமைகின்றது. எனவே இவ்வுறுப்பு பாதிக்கப்பட்டால் அதில் உள்ள பித்தப்பை (Bile bladder) பழுதாகி விடும். இதன் காரணத்தால் நாம் உண்ணும் உணவில் உள்ள சத்துப் பொருட்கள் பயனற்றுப் போய்விடும். இதனால் நமக்குத் தேவைப்படும் சக்தி குறைந்து விடும்.

உணவில் உள்ள சத்துப்பொருட்கள் குடல் பகுதியில் சீரணிக்கப்பட்டு இரத்தத்தோடு கலந்து கல்லீரலை அடைந்து நமக்குத் தேவையான சத்துப்பொருட்கள் பிரிக்கப் பட்டு சக்தியை (Energy) கொடுத்துக் கொண்டிருக்கின்றன.

எனவே கல்லீரல் பழுது அடைந்தால் நீர், இரத்தம் பிரிக்கும் வேலையில் மாற்றம் ஏற்பட்டு வயிற்றின் பகுதியில் நீர் தேங்கி, வயிற்றுப்பகுதியும், கால்பகுதியும் வீங்கி மினுமினுப்பாகக் காணப்படும். இந்நிலையை சிரோசிஸ் (Cirosis) எனக் கூறப்படுகின்றது. இந்நிலையில் நீரை வெளியகற்ற வேண்டும். ஆகையினால் தங்கள் குடும்பவைத்தியர்களிடம் சென்றால் அவர்கள் நன்கு பரீட்சித்து நீரையகற்றி தகுந்த மருந்துகளையும் தருவதுடன் கையாள வேண்டியவற்றையும் கூறிக் கொள்வார்கள். நமது உடலைப் பாதுகாத்துக் கொள்வது நமது கடமை என்பதை நன்கு அறிவோம். மஞ்சள் காமாலை வியாதி ஏற்பட பின்வரும் வழிகள் உண்டு.

வைரஸ் (கிருமி) இதனால் கல்லீரல் தாக்கப்படும். சத்து இன்றி சோகை ஏற்பட்டு இரத்த அணுக்கள் சிதைவடைந்து வரலாம். அல்லது பித்தநீர் நாளங்களில் தடை அல்லது அடைப்பு நிகழ்ந்து வரமுடியும். உ+ம் கட்டி, கழலை போன்றவை. அல்லது நாளங்களில் சுருக்கம், கற்கள் உருவாகி யும் வர இடமுண்டு. அல்லது பிறக்கும் போது பித்தநீர் நாளங்களில் குறைபாடு காணப்பட்டாலும் அல்லது அறுவைச் சிகிச்சை செய்யும் போது தவறுதலாக பித்தப்பை உறுப்பின் நாளப்பகுதியில் காயம் ஏற்பட்டாலும் வரலாம். நோய்களில் புற்றுநோய் ஏற்பட்டிருந்தாலும் நிகழலாம்.

பொதுவில் எடுத்துக் கூறினால் இரத்தத்தில் பித்தநீரும், பித்தநீர் அளவு தேவைக்கு மிஞ்சி அதிகம் காணப்பட்டாலும் மஞ்சள் காமாலை என்கின்ற செங்கண்மாரி வியாதி ஏற்படுகின்றது.

இந்நோய் ஆண்பெண் இருபாலாருக்கும் வரலாம். பெரும்பாலும் மதுபானம் அருந்துவதை தவிர்த்தல் வேண்டும். நமது உடலில் சேரும் நஞ்சுப்பொருட்கள் கல்லீரலைப் புண்படுத்தும். சில இரசாயன மருந்துகளினாலும் வர இடம் உண்டு எனவும் அறிய முடிகின்றது. புண் ஏற்படுமானால் நாவும் சுவையை உணர முடியாது. பசி இருக்காது. அடிக்கடி காய்ச்சலும் வரலாம். வாயில் எந்நேரமும் நீர் சுரந்து கொண்டிருக்கும். உண்ணாமல் இருந்தாலும் வயிற்றுப்பகுதி ஊதிப் புடைத்து காணப்படும். இவை கல்லீரல் தாக்கத்தினால் ஏற்படும்.
கல்லீரலில் வைரஸ் கிருமியால் ஏற்படும்

> “ இந்நோய் ஆண்பெண் இருபாலாருக்கும் வரலாம். பெரும்பாலும் மதுபானம் அருந்துவதை தவிர்த்தல் வேண்டும். நமது உடலில் சேரும் நஞ்சுப்பொருட்கள் கல்லீரலைப் புண்படுத்தும். சில இரசாயன மருந்துகளினாலும் வர இடம் உண்டு எனவும் அறிய முடிகின்றது. புண் ஏற்படுமானால் நாவும் சுவையை உணர முடியாது. பசி இருக்காது. அடிக்கடி காய்ச்சலும் வரலாம். வாயில் எந்நேரமும் நீர் சுரந்து கொண்டிருக்கும். உண்ணாமல் இருந்தாலும் வயிற்றுப்பகுதி ஊதிப் புடைத்து காணப்படும். இவை கல்லீரல் தாக்கத்தினால் ஏற்படும். ”

## Dr. F. சிற்றம்பலம்

(விஷ வைத்திய சிந்தாமணி)

**இளமையாக இருக்க இருவேளை உணவு**
**முதுமையை உண்டாக்கும் மூன்று வேளை உணவு**
**நோய்களை அதிகரிக்கும் பலவேளை உணவு**

மஞ்சள் காமாலை என்கின்ற செங்கண்மாரியை மருந்துவகை கொடுத்து சுகப்படுத்த முடியும். ஆனால் பித்தப்பையின் வாய்ப்பகுதியில் அடைப்பு, தடை இருந்தால் அதனை அகற்ற வேண்டும். இதற்கு தங்கள் வைத்தியர்கள் மூலம் ஆய்வுகள் செய்து நிர்ணயிக்க வேண்டும். இந்நிலைமையை அறியாமல் பாராமுகமாக இருந்து மஞ்சள் காமாலை அதாவது செங்கண்மாரி என வைத்தியம் செய்ய வோரும் இருக்கின்றார்கள். இதனால் நோய் முற்றி மங்கமாரி நிலை ஏற்பட்டு மரணத்தையும் ஏற்படுத்தலாம். எனவே வைத்தியர்களின் பார்வை முக்கியமாகும்.

மேலும் மருந்துவகையாலும் இவ்வியாதி அதாவது மஞ்சள்காமாலை என்கின்ற செங்கண்மாரி ஏற்படலாம் எனவும் கூறப்படு கின்றது. நாம் பாவிக்கும் உணவுகள் போல எல்லா மருந்துகளும் ஒத்துவராது. இதே போன்று உணவுவகையும் சிலவற்றில் நஞ்சுத்தன்மை உண்டு. இவை ஈரலைத் தாக்கக் கூடியது. இப்படிப்பட்ட நிலையில் பித்தநீர் தேங்கிவிடும் நிலையும் உண்டு. இதனால் கல்லீரல் பழுதாகி விட்டது என கருத இடமில்லை. எனவே எடுத்த மருந்தையோ, உணவுப் பொருளையோ பாவிக்காமல் விட்டால் சாதாரண நிலைக்கு வரலாம் எனவும் அறியமுடிகின்றது. எதற்கும் உறுப்பு பழுதாகாமல் இருக்க வேண்டும். இந்நிலைமைகளை வைத்தியர் கள் மூலம் பரீட்சித்து பயன்பெற வேண்டும்.

சில மருந்துகளில் உடம்மை வளர்ப்பதற்கும் சக்தியை ஏற்படுத்தவும் எடுக்கப்படும் மருந்துகள், கோமோன்ஸ் குறைபாட்டிற்கு எடுக்கப்படும் மருந்துகள் என்பவற்றாலும் ஈரல் உறுப்பு பாதிக்கப்பட லாம் எனவும் கூறப்படுகின்றது. எனவே கல்லீரலைத் தாக்காத வண்ணம் பாதுகாத்துக் கொள்ள வேண்டும். மேலும் இரத்தத்தில் உள்ள செஞ்சீவ அணு (R.B.C) சிதைவடைந்தாலும் பித்தநீர் அதிகரிக்கும் எனவும் அறிய முடிகின்றது. இதனை இரத்தப்பரிசோதனை மூலம் தங்கள் வைத்தியர்கள் கண்டு கொள்வார் கள். எனவே இந்நோய் ஒருவரிடம் ஏற்பட்டிருந்தால் என்ன அறிகுறிகள் எமக்குத் தென்படும் என்பதை ஓரளவு பார்போம்.

கண்கள், நகங்கள், மஞ்சள் நிறம் கொண்டு காணப்படும். சீரணக் குறைபாடு காணப்படும். வயிற்றுப்பகுதி கனமாக அதாவது பாரமாக இருக்கும். மூட்டுக்களில் வலி தென்படும். கை, கால், அசதியாக இருக்கும். களைப்பு, இளைப்பு அதிகரிக்கும். சிறுநீர் கழிக்கும் போது நிறம் மஞ்சள் நிறம் கொண்டதாகக் கூடிக் குறைந்து காணப்படும். வயிற்றின் கீழ் பகுதி சாதாரண சூட்டுடன் காணப்படும். சிலவேளை தலைச்சுற்றும் தென்படலாம். சிலவேளை வியர்வைத் துளிகள் மஞ்சள் நிறம் கொண்டதாகவும் இருக்கலாம்.

கிருமிகளை அழிக்கும் சக்தியுள்ள மூலிகை இவ்வியாதிக்கு உகந்ததாக அமையும். இவை அதிகமாக நம்நாட்டிலும் இந்தியா விலும் போதியளவு எங்கும் இலகுவாகப் பெறமுடியும். ஆனால் இங்கு கிடைப்பது கஸ்டம்.

இதில் முதன்மைபெற்ற மூலிகை ‘கீழ்காய் நெல்லி’யாகும். இது சீதவீரியம் கொண்டது. குளிர்ச்சியுண்டாக்கும் இயல்புடையது. பித்தம் என்பது சூட்டுத்தன்மையை குறிக்கும். இதனை பாவித்து வந்தால் வெப்புத் தணிவதுடன் கிருமிகளின் ஆதிக்கத்தையும் அழிக்க வல்லது. மஞ்சள் காமாலை என்கின்ற செங்கண்மாரி மாறும் தன்மையுண்டு. இதனால் பயன் பெற்றோர் நம்நாட்டில் பலர். இதனைப் பாவிக்கும் முறை. ‘கீழ்காய் நெல்லி’ மூலிகையை மூலத்துடன் (வேருடன் சேர்ந்து) யாவற்றையும் எடுத்து நன்கு துப்பரவு செய்து கழுவி, பிழிந்து சாறு எடுத்து காலை வேளை 7 நாட்கள் தொடர்ந்து கொடுத்து வந்தால் சுகம் காணமுடியும். இந்தச் சாற்றை மோர், தயிர், பால் போன்றவற்றுடன் கலந்து எடுப்பதும் உண்டு. ஆனால் தனிமையில் எடுத்தால் நற்பயன் உண்டு. (கீழ்காய் நெல்லிச்சாறு) இங்கு இதனைத் பெறுவது கஸ்டமாக இருக்கும். தங்கள் உறவினர்கள் ஊரில் இருந்து இவ்விடம் வருபவர்களிடம் சொன்னால் கொண்டு வருவார்கள். அல்லது இந்தியா செல்பவர்களிடம் சொல்லிவிட்டால் பெறமுடியும். அப்படிக் கிடைத்துவிட்டால் அதனை குளிர்சாதனைப் பெட்டியில் வைத்துத் தேவைக்குப் பாவிக்க முடியும். பெறப்படும் அம்மூலிகை தங்களுக்கு நன்கு தெரிய வேண்டும். உரியவர்களிடம் காட்டி நிச்சயத்தின் பின்தான் பாவனைக்கு எடுக்க வேண்டும். எதற்கும் மூலிகை வைத்தியர்களிடம் காணப்பிப்பது மிக நன்மை பயக்கும்.

இந்நோய் ஏற்பட்டிருப்போர் உணவில் கவனம் செலுத்தவேண்டும். கைக்குத்தரிசிச் சாதம் மோருடன் எடுக்க வேண்டும். சின்னவெங்காயம் சேர்த்துக் கொள்ளலாம். மிளகுப் பொங்கல் சாதம் மிகக்குறைவான உப்பு சேர்த்தல் வேண்டும். எண்ணெய் முழுக்கு தவிர்த்தல் வேண்டும். இளம் சூடான நீரில் குளிக்க வேண்டும். வியாதி குணமாகும் வரை இவற்றை எடுத்து வருதல் வேண்டும். மிளகு, மல்லி, புதினாக்கீரை, முளைக்கீரை போன்றவற்றை யும் எடுப்பதினால் கெடுதியில்லை. மாமிசம், மதுபானம், புகைத்தல், எண்ணெய்ப்பதார்த்தம் என்பவற்றை முழுமையாக நிற்பாட்ட வேண்டும்.



நோய்குணமான பின்பும் சிலநாட்கள் தாமதித்த பின்தான் மற்ற உணவுகளை எடுப்பது நன்று. மரக்கறிவகை சிறந்து. போசாக்குள்ளது. எளிதில் சீரணம் ஆகும் உணவுகளை எடுக்க வேண்டும். முற்றிய காய்கனி கடலைவகை எடுப்பதை தவிர்க்க வேண்டும்.

நோய் ஏற்பட்டு குணம் கண்டு, மேலும் நாலு வாரங்கள்வரை மேற்கூறிய உணவு களை எடுத்து வருவது சாலச் சிறந்தது. படிப்படியாக உணவை ஓரளவு கூட்டிக் கொள்ளலாம். எனவே உணவே வியாதியை ஏற்படுத்தவும், குறைக்கவும் இயல்பை உடையது என்பதை அறிந்து கொள்ளவும்.

தமிழ் சித்தர்களில் ‘யூகிமுனி’ என்பவர் விளம்புகின்றார் பின்வருமாறு; பாண்டு என்று அழைக்கும் மஞ்சள்காமாலை, முற்றி இருக்கும் போது மீறியே பித்தவஸ்துக் களைப் புசித்தால் ‘புளம்பவே மங்கையுடன் புணர்ச்சி செய்தால் பூண்டிடுமே காமாலை’ என்கின்றார். இதில் அவதானம் வேண்டும்.

**வைத்திய கலாநிதி**
**கே.ரி. கோபால்**
D.A.M.S R.A.M.P (Sri Lanka)
C.D.S - C.N.H.P (Canada)






# சக்கர ஊர்திப் பயணங்கள் - 5



ஊர்தி வந்து நின்றது. இது சக்கர ஊர்திப் பிரயாணிகளுக்கான விசேட ஊர்தி என்றமையால் அது எமது கார் ஓடு பாதையில் திரும்பும் பொழுதேயே குழல் சத்தம் கேட்டது, தயாராய் இருந்த நான் ஊர்தியை நோக்கிச் சென்றேன். வழக்கமாக நான் தான் ஊர்தியில் ஏறும் முதல் பிரயாணியாகவும் இறங்குவதில் கடைசிப் பிரயாணியாகவும் இருப்புது வழக்கம். இன்று என்னடாவென்றால் ஏற்கனவேயே இரு பிரயாணிகள் ஏற்றப் பட்டிருந்தனர். அதோடு எனது சலுகையும் பறிபோயிருந்தது. அதாவது முன் ஆசனத்தில் ஒரு பெருமகன் உட்கார்ந்திருந்தார். இந்த ஊர்தியில் பின்னுக்கிருந்தாலும் கால் நீட்ட வசதி இருந்தது. ஆகவே பிரச்சினை ஏதும் கொடுக்காமல் பின் ஆசனத்தில் ஏறினேன்.

அருகே இருந்த பெண்மணி முகம் மலர வணக்கம் கூறினார் நானும் பதில் அளித்தேன். 'அழகு கொள்ளை அழகு' என்றார் அந்தச் சீனப் பெண்மணி. அந்த இனத்துக்கே உரிய ஆங்கில மழலையில். அவர்கள் முகமன் கூறுவதில் வெகு தாராளம். மழலை



கொஞ்சுவது போல இருந்தது. ஆனாலும் என்னைப் பார்த்து ஒருவர் அழகு கொள்ளை அழகு என்றால் சும்மாவா?. எனது மனைவி கூட மறந்தும் ஒரு போதும் சொன்னதில்லை. 'நன்றி மிக்க நன்றி என்றேன். 'அவை மிக்க அழகாயுள்ளன' என்றார் மீண்டும் மழலையில்.

'அடி பாவி அப்போ என்னைச் சொல்லவில்லையா'? 'அவை பொன்னி தானே' என்றார். கை போன திசையைப் பார்த்ததும் புரிந்தது இல்லையடியப்பா அவை பொன்னியில்லை 'பியோனி' என்றேன் ( Peony). மீண்டும் 'அழகு மிக்க அழகு'. என்றவர் மொத்தமாக 500 பூக்களாவது இருக்குமே, பெரிதாய் அழகாய் உள்ளன' என்றார். பூக்கன்றுகள் பற்றி வாய் கொடுத்து விட்டார். 'நானா விடுவேன் அறு அறென்று' அறுத்து விட்டேன்.' 'போதுமடா சாமி' என அவர் வாய்விட்டு அழாத குறை.

பொதுவாகவே இந்தப் "பொன்னி'யை நட்டு வைத்திருப்பவர்கள் தனித்தனிச் செடிகளா-கத்தானே வைத்திருக்கிறார்கள். அவை பூத்து நிற்கும் போது கிளைகள் சாய்ந்து விடாமல் இருப்பதற்காக இரும்புக் கம்பிகளாலான Peony Rings கூட விற்கிறார்களே. நீயோ எனில் வரிசையாக நட்டிருக்கிறாயே என்றார். அதற்கும் ஒரு காரணம் உள்ளது. வரிசையாய் நட்டால் பூக்கும் காலம் முடிந்ததும் பச்சை இலைகளோடு கூடிய ஒரு புதர் வேலி வரி-சயாக (hedge) இருக்குமல்லவா. ஏனைய மரங்களைப் போல் இந்தச் செடியில் இலைகள் பழுத்து வீழ்வதில்லை. இலையுதிர் காலத்தில் செடி முற்றாகவே காய்ந்து விடுகிறது என்றேன். பூக்கள் பெரிதாக உள்ளனவே அதற்கு என்ன செய்கிறாய். இந்தச் செடி கிளைகள் இல்லாத செடி.

தொடர்ச்சி 20ஆம் பக்கம்






# சக்கர ஊர்தி...

19ஆம் பக்கத்தொடர்ச்சி

அடியில் மண்ணின் கீழே உள்ள வேரில் இருந்து பல கிளைகள முளைக்கின்றன. ஒவ்வொரு கிளையும் நுனியில் ஒரு மொட்டினையும் அதன் கீழே உள்ள இலைகளின் கக்கங்களில் சில மொட்டுக்களையும் கொண்டிருக்கும். பொதுவாகக் கீழே உள்ள மொட்டுக்கள் மலராமலே உலர்ந்து போய் விடுகின்றன. ஆகவே நடு மொட்டினுக்கு அருகே உள்ள மொட்டுக்களை அரும்புப் பருவத்திலேயே அகற்றி விட்டால் நடு மொட்டு பெரிதாக வரும் என்கிறார்கள் தாவரவியலறிஞர்கள்.

என்னை பல்வேறு நிகழ்ச்சிகளுக்கு அழைத்துப் போவதாகக் கூறும் சிலர் வருவதற்குப் பிந்துவதுண்டு. நானோ நேரத்திற்குப் போவதில் அக்கறை உள்ளவன். எனவே ஆயத்தமாகி வெளியே வந்து அவர்களுக்காகக் காத்து நிற்பேன். அவர்கள் வரத் தாமதிக்கத் தாமதிக்க எனது மன அழுத்தம் மெள்ள மெள்ள ஏறத் தொடங்கும். அதனைத் தணிப்பதற்காக இருப்பது இச்செடியே தான். ஆம், அந்தத் தேவையற்ற அரும்புகளை நான் அந்நேரத்தினில் தான் அகற்றுவேன். பூவின் சுகந்தமான வாசனையும் மன அழுத்தத்தினைக் குறைத்து விடும். பலவண்ணத்தில் உள்ள பூக்கள் மனதுக்கு அமைதியைத் தர பிந்திவருபவர்கள் மேல் உள்ள கோபம் சிறிது சிறிதாகத் தணியும்.

‘இதனை எப்படி உண்டாக்குகிறாய்’ என்றார். இதனை பல பருவத்துத் (Perennial) தாவரம் என்பார்கள். வருடம் வருடம் குளிர் காலத்தில் மண்ணிற்கு மேலேயுள்ள கிளைகள் உலர்ந்து







போக அடுத்த வசந்தகாலத்தில் புதிய கிளைகள் அடி வேரில் இருந்து முளைக்கின்றன. இலையுதிர் காலத்தின் போது வேரில் சிறு பகுதியைக் கிண்டி எடுத்து இத்தாவரத்தினை பல ஊர்களுக்கும் எடுத்துச் செல்லலாம்.

வைகாசி ஆனி முதற்பகுதியுடன் இந்தத் தாவரத்தில் பூக்கள் வரமாட்டாதே. அதன் பின்னர் வெறும் இலைகளைத் தானே காணமுடியும் என்றார். அதற்கு நான் இன்னொரு யுக்தியைக் கையாண்டிருக்கிறேன். இதனால் இலையுதிர் காலம் வரை பூக்களைக் காணக் கூடியதாக இருக்கும் என்றேன். எப்படி என்றார். இத்தாவரங்களுக்கிடையே நான் இன்னும் இரண்டு வகைச் செடிகளை நட்டுள்ளேன். அவை ஐறிஸ் (Iris) மற்றும் புளொக்ஸ் (Phlox).

ஐறிஸ் வேர்த் தண்டுகளிலிருந்து (Rhizome) முளைப்பது ஏறக்குறை பியோனி பூக்கின்ற சமயத்தில் தான் இதுவும் பூத்தாலும், இத்தாவரத்தின் பூக்கள் கூடியகாலம் நிலைத்து நிற்பதோடு ஒரே பூத்தண்டில் பல பூக்கள் தோன்றி ஒன்று உதிர மற்றையது விரிவதால் நீண்ட காலத்திற்குப் பூக்களைக் கண்டு களிக்க முடியும். ஐறிஸ் பூக்கள் பல்வேறு வர்ணங்களில் காணப்படுகின்றமையால் மிகவும் அழகாக இருக்கும். இந்தச்செடி எந்தவித பாதுகாப்பும் இல்லாமல் குளிர்காலத்தினைத் தாக்குப் பிடிக்கும். வசந்தகாலம் வந்ததும் மண்ணின் கீழே உள்ள வேர்த்தண்டுகளிலிருந்து கற்றை கற்யைாக நீளமான இலைகள் வெளி வரும் மண்ணின் மேல் இத்தாவரத்திற்குத் தண்டுகள் இருப்பதில்லை. ஒரு கற்றை இலையின் மத்தியில் இருந்து பூ அரும்புகளைக் கொண்ட ஒரு பூத்தண்டு தோன்றி அதில் பூக்கள் மலரும். அந்தப் பூச்செடி பொதுவாக பெரிய நோய்களினாலோ அல்லது பீடைகளினாலோ (Pest) பெரிதும் பாதிக்கப்படுவதில்லை என்பதால் இச் செடியினை வளர்ப்பதில் பெரிதும் கவனம் எடுக்க வேண்டியதில்லை.

மூன்றாவது தாவரம் ஃபிளொக்ஸ் எனப்படுவது. இச்செடி கோடை காலம் முடிவதற்கு அண்மையாகவே பூக்கும். பல வர்ணங்களில் பூக்கள் காணப்படும். இந்தச் செடியும் மண்ணின் கீழே உள்ள வேரில் இருந்து ஒவ்வொரு வசந்த காலத்திலும் முளைக்கும் இத்தாவரத்துக்கு மண்ணின் மேல் தண்டு உள்ளது. அது வளரும். பின்னர் ஒவ்வொரு தண்டிலும் குலை குலையாய் பூ மஞ்சரிகள் தோன்றும். ஆகவே புதர் வேலி வரிசையில் (hedge) இறுதியாக அழகூட்டும் பூக்களை இந்தச் செடி வழங்கும். மற்றைய இரண்டு பூச்செடிகளையும் போலல்லாது இந்தச் செடி மண்ணிற்கு மேலான தண்டினைக் கொண்டிருக்கும். தொடர்ந்து வளரும். ஆனால் பருவம் முடிகின்ற காலத்திலே இச்செடியின் இலைகள் கறை நோயினால் (Rust) பாதிக்கப்படும். இலைகள் சுருண்டு காய்ந்து போவதனைக் காணலாம். முதலில் அடியில் உள்ள இலைகளில் ஆரம்பித்து மெல்ல மேலே உள்ள இலைகளுக்கும் இந்நோய் பரவுவதைக் காணமுடியும். இந்த நோயினை ஏதாயினும் பங்கசுக் கொல்லிகளைப் (Fungicide) பாவித்துக் கட்டுப்படுத்தலாம் என்கிறார்கள். நான் உபயோகித்துப் பார்த்துள்ளேன். எனினும் வெற்றி கிட்டவில்லை. (படத்திலே கீழே உள்ள பாதிக்கப்பட்ட இலைகளுடன் ஒரு தாவரத்தினைக் காண்கிறீர்கள்)

தொடர்ச்சி 26ஆம் பக்கம்



பொ. கனகசபாபதி
Email: vlambaram@sympatico.ca

# மாபெரும் மலிவு விற்பனை

# TRUCK LOT

JUNE SALE

வெள்ளி 18
சனி 19
ஞாயிறு 20
நாட்களில்

**Laminate** வாங்குபவர்களுக்கு
**Under Pad** இலவசமாக
வழங்கப்படும்

| | | |
|---|---|---|
| Laminate | 8.3 | 89 cents |
| Laminate | 12.3 | $1.29 |
| Laminate | 15.3 | $1.69 |
| Laminate | 18.3 | $1.89 |

Hard Wood Oak $3.49
Hard Wood Oak $3.49

* Coustums Oak all Maple Special Price
* Bambu Hardwood $2.49 sq.ft
* Laminate over 300 in store selections

## Canadian Design Wood Flooring

Varathan (Raja) - Cell: 647.929.2345

Tel: 416.269.0362

1600 Midland Ave. (Midland & Lawrence)

# ஆவுடையார்கோயில் - திருவாசகம் மலர்ந்த மண்

## தமிழ்நாடு சுற்றுலா இடங்கள்- 78

"திருவாசகத்திற்கு உருகார் ஒரு வாசகத்திற்கும் உருகார்" என்பார்கள். அந்த திருவாசகம் மலர்ந்த புண்ணிய பூமி, "நமச்சிவாய வாழ்க" என ஆரம்பித்த புனித பதி, தமிழர்களின் சிற்பக்கலை சிறப்புக்கு சான்றாக காட்டப்படும் கோயில்களுள் மகத்தானது எனப் பல பெருமைமிகு ஸ்தலம்,



ஆவுடையார்கோயில்.

இன்று ஆவுடையார் கோயில் என்று அழைக்கப்படும் ஊர், பழங்காலத்தில் திருப்பெருந்துறை என வழங்கப்பட்டிருக்கிறது. 'மிகப் பழமைவாய்ந்த ஸ்தலமான பெருமைமிக்க திருப்பெருந்துறை' என்றுதான் திருவாசகத்தில் மணிவாசகர் போற்றுகிறார். ஏறக்குறைய ஆயிரத்து இருநூறு வருடங்களுக்கு முன்னால், சோழநாட்டின் தெற்கு எல்லையாகவும் பாண்டிய நாட்டின் கிழக்கு எல்லையாகவும், தோப்பும் சோலையுமாகச் செழித்திருந்த ஊர். உலக உயிர்கள் வீடுபேறு பெறுவதற்குச் சாதனமாக, பிறவிக் கடலிலிருந்து கரையேறுவதற்குத் துணையாக, பெரும் துறையாக விளங்கும் தலம் ஆதலின் பெருந்துறை எனப் பெயர் பெற்றது என்கிறார்கள். ஆத்மநாதசுவாமி, குருசுவாமி, பரமசுவாமி, ஆத்மநாதர், குதிரைச்சாமி எனப் பல பெயர்களில் ஆவுடையார்கோயில் சுவாமி அழைக்கப்படுகிறார். இறைவியார் திருப்பெயர்: யோகாம்பாள். சிவாலயங்கள் பெரும்பாலும் கிழக்கு நோக்கியிருக்கும், சில மேற்கு நோக்கியிருக்கும். ஆனால், ஆவுடையார் கோயில் தெற்கு நோக்கியுள்ளது. தவிர, சிவாலயங்களில் இறைவன், சிவலிங்கபாண வடிவில் அருவுருவாகக் காட்சிதர, இக்கோயிலில் மட்டும் குருந்தம் மேவிய குருபரனான ஆத்மநாதர் அருவமாக இருந்து சித்தத்தைச் சிவமாக்கும் சித்தினைச் செய்தருளுகின்றார்.

பாண்டிய நாட்டை அரிமர்த்தன பாண்டிய மன்னன் ஆட்சி செய்து கொண்டிருந்த போது, தென்னவன் பிரம்மராயன் என்பவர் அம்மன்னனின் அமைச்சராகப் பதவி வகித்து வந்தார். இவர்தான் மாணிக்கவாசகர். பாண்டியர் குதிரைப் படைக்குக் குதிரைகள் வாங்கும் பொருட்டு, அரச ஆணையை ஏற்று, வேண்டிய பொன்னுடன், கிழக்குக் கடற்கரைக்குப் பயணமானார் அமைச்சர் மாணிக்கவாசகர். வழியில் திருப்பெருந்துறைக்கும் வருகிறார். அப்போது இங்கு சிவாகமங்கள் ஒலிக்கும் ஒலி கேட்க, அங்கு சென்று பார்க்கிறார். அங்கு ஞானகுருநாதர் ஒருவர் வீற்றிருப்பதைக் கண்டார். தன்னை ஏற்றுக்கொண்டு உபதேசமளிக்கும்படி மாணிக்கவாசகர் கேட்டுக் கொள்ள, குருவும் ஒப்புக்கொண்டார். உபதேசம் கேட்டு சிவநிஷ்டையிலிருந்து கலைந்த மாணிக்க வாசகர் குரு இல்லாதது கண்டு, சிவபெருமான்தான் குருவாக வந்தது என்று தெரிந்து கொண்டார். உள்ளம் உருகி பாடினார். குதிரை வாங்க கொண்டு வந்த பணத்தில் கோயில் கட்டினார். சிவதொண்டில் ஈடுபடலானார். குதிரை வராத செய்தி கேட்டு மன்னன் மாணிக்கவாசகரை பிடித்து சிறையில் அடைத்தான். சிவபெருமான் நரிகளை பரிக-ளாக்கி (குதிரை) அவரே ஓட்டிக் கொண்டு மதுரை வந்து மன்னனிடம் ஒப்படைத்தார். ஆனால், இரவிலேயே குதிரைகள் எல்லாம் நரிகளாகிப் போக, மன்னன் மேலும் கோபம்கொண்டு மாணிக்க வாசகரை வைகை ஆற்றில் சுடு மணலில் நிறுத்தி தண்டித்தான். அப்போது வைகையில் வெள்ளம் வந்தது. கரையை அடைக்க கூலியாளாக வந்த சிவபெருமான், பிட்டு வாங்கி தின்று விட்டு வேலை செய்யாததால் மன்னன் பிரம்படிக்கு உத்தரவிட்டான். அந்த அடி எல்லோர் முதுகிலும் விழ, வந்தது இறைவன் என்பதைத் தெரிந்து கொண்ட பாண்டிய மன்னன் மாணிக்க வாசகரின் காலில் விழுந்து வணங்கி மன்னிப்பு கேட்டான். இந்த சிறப்பு வாய்ந்த திருவிளையாடற் புராண கதை நிகழ காரணமானது ஆவுடையார்கோயில் ஆகும். மாணிக்கவாசகர் கட்டிய கோயில்தான் நாம் வணங்கும் ஆவுடையார்கோயில். இப்போது இத்திருக்கோயில் திருவாவடுதுறை ஆதீனத்தால் நிர்வகிக்கப்படுகிறது. சிவபுராணம், திருச்சதகம், திருப்பள்ளியெழுச்சி, செத்திலாப் பத்து, அடைக்கலப் பத்து, ஆசைப் பத்து, அதிசயப் பத்து, புணர்ச்சிப் பத்து, வாழாப் பத்து, அருட் பத்து, பிரார்த்தனைப் பத்து, குழைத்த பத்து, உயிருண்ணிப் பத்து, பாண்டிப்பதிகம், திருவேசறவு, அற்புதப் பத்து,

தொடர்ச்சி 32ஆம் பக்கம்






# டிஸ்னி உலகம் - புளோரிடா

## அமெரிக்கப் பயணம் - 7

- துறையூரான் -



### பிரதான வீதி அமெரிக்கா

அமெரிக்காவின் பல்வேறு பகுதிகளில் காணப்படும் கட்டிட வடிவமைப்புகளுக்கேற்ப வெவ்வேறு வடிவங்களை இந்த வீதியில் அமைத்திருக்கிறார்கள். உள்ளே நுழையும் போது அமைந்திருக்கும் இவ்வீதியின் இரு மருங்கிலும் கடைகளும் உணவுச் சாலைகளும் அமைந்துள்ளன. பரிசுப் பொருட்களும் நினைவுப் பொருட்களும் இங்கே வாங்கலாம். அமெரிக்காவிலுள்ள பிரபல உணவு நிறுவனங்களின் உணவுச் சாலைகள் இங்கே உள்ளன. வண்ண விளக்குகளால் இவை யாவும் சோடிக்கப்பட்டிருப்பதால், இரவில் ஏதோ கனவுலகில் இருப்பது போன்ற பிரமை ஏற்படும். நுழைவாயிலில் 50 அடி உயரமுள்ள கிறிஸ்மஸ் மரம் பல வண்ணவிளக்குகளால் அலங்கரிக்கப்பட்டு மிகவும் அழகாகக் காட்சி அளித்தது. காட்சிச்சாலைகளுக்குச் செல்வதற்கு உள்ளேயே தொடர்வண்டிகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன. நடந்து சென்றும் இவற்றைப் பார்வை இடலாம்.

பிரதான வீதியின் முடிவில் சின்டெறல்லா மாளிகை (Cinderella Castle) அமைந்துள்ளது. இது 189 அடி உயரமுள்ளது. ஆனால் பார்க்கும் போது மிகவும் உயரமாகக் காட்சியளிக்கும். இது மிகைப்படு தோற்றம் (Forced Perspective) என்ற நவீன தொழிநுட்பப்படி கட்டப்பட்டுள்ளது. பிரதான வீதியிலுள்ள கட்டிடங்களின் இரண்டாம் மாடிகளும் இம்முறையிலேயே கட்டப்பட்டுள்ளன. மேலிருக்கும் தட்டுகள் கீழிருப்பதைக் காட்டிலும் குறைந்த உயரமுடையனவாக இருக்கும். ஆகமேலிருக்கும் ஜன்னல்கள் எல்லாம் சிறியனவாகவே இருக்கும். படத்தை பார்த்தால் இது நன்கு விளங்கும். இரவில் இது பலவண்ண விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டிருக்கும். இதன் மீது நான்கைந்து நிமிடங்களின் பின் மாறுகின்ற வண்ண ஒளி பாய்ச்சப்படுகின்றது.

குறிப்பாக முதலில் கட்டிடம் முழுவதும் சிவப்பாகக் காட்சியளிக்கும். சிறிது நேரத்தின் பின் மஞ்சளாக மாறும். பின் நீலமாக மாறும். இது பார்ப்பவர் மனதைக் கவரும் வண்ணம் அலங்கரிக்கப்பட்டு அழகாக அமைக்கப்பட்டுள்ளது. இது பூங்காவின் மத்தியில் அமைக்கப்பட்டு இதிலிருந்து பல்வேறு பாதைகள் ஆரை வடிவில் காட்சிச்சாலைகளுக்குச் செல்லுகின்றன.

நாங்கள் புத்தாண்டு முதல்நாள் அதாவது வருடத்தின் இறுதி நாளன்று (2009) அங்கே இருந்தோம். அன்று பல விசேட நிகழ்வுகள் இடம் பெற்றன. பிற்பகல் 4 மணியளவில் ஒரு ஊர்வலம் நடைபெற்றது. அதில் குழந்தைகளின் தேவதைக் கதைகளில் வருகின்ற பாத்திரங்கள் போன்று யாவரும் உடையணிந்து ஊர்வலமாகச் சென்றனர். உதாரணமாக ஸ்நோவைற்றும் 7 குள்ளர்களும், மிக்கிமவுஸ், ஓநாய், கரடி, தேவதைகள், பல்வேறு கதைகளில் வரும் மிருகங்கள், கதாபாத்திரங்கள் என நிறைய அவ்வூர்வலத்தில் இடம்பெற்றன. இவற்றிற் கிடையில் பாண்ட் வாத்திய குழுக்களும் அணி வகுத்துச் சென்றன. கதைகளில் வரும் சில காட்சிகளை ஊர்திகளின் மீது அமைத்து, அவற்றில் கதாபாத்திரங்கள் இருந்து நடித்துக் கொண்டிருந்தனர். யாவும் தத்துரூபமாக அமைக்கப்பட்டிருந்தது. கண்கொள்ளாக்காட்சியாக இருந்தது. இவற்றில் பெரும்பாலும் அங்குள்ள பாட-சாலை மாணவரே பங்கு பற்றினர். இந்நிகழ்வுகள் மார்கழி விடுமுறை காலத்தில் நடைபெறுவதால் அவர்களும் இன்பமாகப் பங்கு பற்றும் வாய்ப்பைப் பெற்றனர். பெரும்பாலும் குழந்தைகளுக்கும் இளவயதினருக்கும் இது ஒரு புதிய அனுபவமாக இருந்திருக்கும். எனினும் பெரியவர்களும் மிக ஆர்வமாகக் கண்டு களித்தனர்.

அன்று மாலை 7 மணியளவில் லேசர் ஒளியைக் கொண்டு இன்னுமொரு ஊர்வலத்தை ஒழுங்கு செய்திருந்தனர். இதில் நவீன உத்திகளைக் கொண்டு பூமி, விண்மீன்கள் பல்வேறு மிருகங்கள் போன்றவற்றை ஊர்திகளின் மேல் கட்டி அவற்றை குழாய் வெளிச்சங்களால் சோடித்துப் பல்வேறு வண்ணங்களில் ஒளிபாய்ச்சி, கண்கொள்ளாக் காட்சியாக அமைத்திருந்தனர். இரவில் இவ்வுருவங்கள் ஊர்வலமாகச் சென்றது பிரமிப்பாக இருந்தது. லேசர் ஒளியை இதில் மிக நுட்பமாகப் பயன்படுத்தியிருந்தனர். இந்த ஊர்வலத்திலும் தேவதைக் கதைப் பாத்திரங்கள் ஒளியூட்டப்பட்டுக் கலந்து கொண்டன. மாளிகைகளும் கட்டிடங்களும் ஊர்திகளின் மீது கட்டப்பட்டு ஒளி விளக்குகளாலும் ஒளிக்குழாய்களாலும் அலங்கரிக்கப்பட்டு ஊர்ந்து சென்றன. அதே நேரத்தில் பாண்ட் வாத்தியக் குழுவினரும் கவர்ச்சிகரமான குழந்தைபாடல்களை இசைத்துக் கொண்டு ஊர்வலத்தில் கலந்து கொண்டனர். மக்கள் யாவரும் வீதிகளின் இருமருங்கிலுங் கூடி நின்று தம்மை மறந்து இந்த ஊர்வலத்தைப் பார்த்து இரசித்தனர். உண்மையிலேயே அன்று காலைமுதல் இரவு வரைக்கும் ஏதோ கற்பனை உலகில் சஞ்சரிப்பது போன்றே இருந்தது.

அன்றிரவு 8 மணியளவில் சிண்டெறெலா மாளிகையின் அடிவாரத்தில் அமைக்கப்பட் டிருந்த மேடையில் பல்வேறு கலை நிகழ்வுகள் நடைபெற்றன. முக்கியமாக 'அழகியும் மிருகமும்' (Beauty and the beast) என உலகப் பிரசித்தி பெற்ற இசை நடனத்தின் சில காட்சிகளும், பிற நடனங்களும் நடைபெற்றன. மக்கள் அங்கிருந்த திடலில் நின்றும் இருந்தும் கிடந்தும் இரசித்தனர். இது ஏறக்குறைய முக்கால் மணித்தியாலத்துக்கு நடைபெற்றது. இதன் பின்னர் அரை மணித்தியாலத்துக்கு ஒரு வாணவேடிக்கை நடைபெற்றது. பல புதுவிதமான வாணங்கள் பல வண்ணங்களில் வானில் வெடித்துச்

தொடர்ச்சி 26ஆம் பக்கம்



# BASEMENT RENT

**BRIMLEY & LAWRENCE**
2 Large bedroom bsmt for rent. Sep. entrance. No smoking & No alchachole. Rent $700 + 40% utilities. Close to TTC, public school, hospital. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 647.342.3313

**MCCOWAN & DENISON**
1 bedroom bsmt for rent. Parking, laundry. Close to TTC. Single girl or single boy preferred. Avail. immediately.
416.587.5843 / 905.472.1454

**LAWRENCE & SCAR.GOLF CLUB**
3 bedroom walkout bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, mall, tamil stores. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.728.9580

**BIRCHMOUNT & MCNICOLL**
1 bedroom bsmt for rent. Attached washroom, Double garage. Close to all amenities.
Pl. Call: 416.293.6211

**WARDEN & ELLESMERE**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, cable. Close to TTC, Stores, etc. Avail. immediately.
416.686.8345 / 416.388.6603

**MORNINGSIDE & STAINS**
2 bedroom walkout bsmt apt for rent. Sep. entrance, parking, laundry. Close to mall, nofrills, library, 2 elementary schools, TTC. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.970.3404

**BRIMLEY & BRIMORTON**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, cable, laundry. Close to TTC, mall. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.431.5195

**MORNINGSIDE & SEWELLS**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, cable, laundry. Close to TTC, stores. Avail. July 01, 2010.
647.701.9555 / 416.286.6472

**MCCOWAN & ELSON**
Newly renovated 1 large bedroom bsmt apt. for rent. Sep. entrance. Parking, laundry. Close to TTC, School. Avail. immediately.
416.357.1097 / 905.472.5570

**NEILSON & FINCH**
**MARKHAM & PASSMORE**
1 Bedroom huge walkout bsmt for rent. Sep. entrance, parking, laundry, laundry, cable. Close to TTC, school, mall. Avail. immediately.
416.298.7081/416.417.9541
647.241.0944

**WARDEN & MCNICOLL**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry, cable. Close to TTC, mall, school. Avail. July 01, 2010
தொடர்புகளுக்கு: 416.494.0850

**PHARMACY & LAWRENCE**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, mall, school. Avail. immediately.
416.759.2608 /416.882.7638

**MCCOWAN & DENISON**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, mall. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 647.880.5066

**DONMILLS & SHEPPARD**
3 அறைகள் கொண்ட bsmt for rent. Sep. Entrance. Parking, laundry, cable, internet. Close to 5 நிமிட நடை தூரத்தில் பஸ் தரிப்பிடம், Donmills Subway, school, mall, DVP, hwy 404 & 401, Fair view mall. Avail. July 01, 10.
தொடர்புகளுக்கு: 416.502.8053

**MIDDLEFIELD & STEELES**
1 Bedroom bsmt apt for rent. Sep. entrance, parking, laundry, cable. Close to TTC, mall, school, clinic. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 905.209.7892

**KENNEDY & LAWRENCE**
3 Bedroom in 1st floor, 3 bedroom in bsmt for rent. Close to all amenities.
தொடர்புகளுக்கு: 416.830.5560

**BIRCHMOUNT & ELLESMERE**
2 Bedroom bsmt for rent. Kitchen, washroom, sep. entrance, parking. Close to TTC, shopping, school. Avail. immediately. பெண்கள் or young couple விரும்பத்தக்கது.
தொடர்புகளுக்கு: 647.896.9448

**BRIMLEY & LAWRENCE**
1 Room for rent in a basement. Sep. entrance & parking, laundry. Close to TTC, stores & other facilities. Very quiet place. Avail. Immediately.
தொடர்புகளுக்கு: 416.264.8177

**MARKHAM & STEELES**
3 Bedroom bsmt for rent. Sep. entrance. Close to TTC, mall, school. Avail. June15, 2010.
தொடர்புகளுக்கு: 647.828.2709

**MIDLAND & SHEPPARED**
1 bedroom bsmt for rent. Close to school, mall, go train, TTC.
தொடர்புகளுக்கு: 647.448.6464

**MARKHAM & STEELES**
1 Bedroom walkout bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, school, mall. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 647.500.4565
905.472.1370/ 647.703.1343

**MCCOWAN & 16TH AVE.**
இரண்டு அறைகள் கொண்ட bsmt Apt. வாடகைக்கு உண்டு. Sep. entrance. Parking, cable, laundry. Close to bus, mall, school. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.414.5562

**TAPSCOTT & FINCH**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, cable, utilities. Close to TTC, Malvern mall, school. Avail. August 01, 10.
தொடர்புகளுக்கு: 647.214.1085
Monday - Friday - 4:00pm - 9-00pm
weekends anytime

**SCAR.GOLF CLUB & ELLESMERE**
2 Bedroom bsmt for rent. Sep. entrance. Close to TTC, hospital. Avail. Anytime. Couple or Girls preferred.
தொடர்புகளுக்கு: 416.836.5482

**MARKHAM & ELLESMERE**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry, cable. Close to TTC, mall, school. Avail. Anytime. அறைகள் தனித்தனியாகவும் கொடுக்கப்படும்.
தொடர்புகளுக்கு: 647.996.6977

**MORNINGSIDE & SEWELLS**
Newly renovated 2 bedroom walk-out bsmt for rent. 2 washrooms. அத்துடன் 4 அறைகள் கொண்ட வீடும் வாடகைக்கு உண்டு. தனித்தனியாகவும் கொடுக்கப்படும். Avail. immediately. Close to ttc, school, mall, stores, etc. தொடர்புகளுக்கு: 416.551.8379

# வீடு வாடகைக்கு தேவை

***Middlefield & Finch*** சந்தியிலிருந்து 5 km சுற்றளவிலுள்ள வீடு வாடகைக்கு தேவை. One month notice wanted.
Raviraj: 416.666.5627

# HOUSE FOR RENT

**KENNEDY & DANFORTH**
3 Bedroom house - main floor for rent. 2 Parking, washer, dryer. Avail. Close to TTC. July 01, 2010.
Also 1 Bedroom Available.
தொடர்புகளுக்கு: 416.717.8979

**BRIMLEY & STEELES**
3 Bedroom house - main floor for rent. 1½ Washroom, 4 car parking, washer & dryer. Close to TTC, mall, tamil, tamil stores, school. Avail. July 01, 2010.
416.335.3460 / 647.233.2301

**MORNINGSIDE & MCLEVIN**
2 Bedrooms house or 1 bedroom bsmt available. Close to stores, schools, TTC. Avail. immediately. அறைகள் தனித்தனியாகவும் கொடுக்கப்படும்.
416.286.3544 / 647.836.3440
( Leave Mesage)

**MCCOWAN & LAWRENCE**
Extra large livingroom, kitchen with 3 bedrooms. Close to TTC, mall, school, hospital ஆகிய பல வசதிகளுடன் Bungalow House வாடகைக்கு உண்டு.
416.439.4076/416.729.0807

# HOUSE FOR SALE

ஹெந்தல வத்தளையில் 4 அறைகள் கொண்ட வீடு விற்பனைக்கு உண்டு. 14.5 பரப்பு கொண்டது. 2000 sq.feet. 3 Bathrooms, Air condition in one bedroom. With all facilities. Urgent sale. Quiet neighborhood.
தொடர்புகளுக்கு: 780.908.0112
E - mail : ar25th@gmail.com

வெள்ளவத்தையில் 3 படுக்கையறைகள் கொண்ட தொடர்மாடிவீடு ஒன்று வாடகைக்கு அல்லது விற்பனைக்குள்ளது. சகலவசதிகளும் கொண்ட வீடு.
தொடர்புகளுக்கு: 416.629.9601

## OFFICE SPACE FOR RENT

**KENNEDY & ELLESMERE**
Rent $395. All inclusive.
தொடர்புகளுக்கு: 416.575.5055

# TUTION CLASSES

Maths, English, Science, Art & Tamil. (JK – Gr. 3) Preparation for next grade.
• Homework help • Flexible time.
1 to 1 or group classes.
Call: 905.554.2496

# TUITION

University of Toronto மாணவனால் Gr. 3 - Gr. 8 வரையுள்ள மாணவர்களுக்கு Maths, Science கற்பிக்கப்படும்.
Ravi: 416.418.5479
Nizanth: 416.953.964

# தமிழ் வகுப்பு

பல வருடகாலம் பட்டறிவுள்ள ஆசிரியையால் தரம் 1 - தரம் 12 வரை உள்ள மாணவர்களுக்கு தமிழ் கற்பிக்கப்படும். உங்கள் பிள்ளைகளும் தமிழில் எழுத வாசிக்க அழையுங்கள். 905.554.2496

# JOB JOB JOB

Mississauga based company looking for experienced ***Table saw operator*** wanted. Pl. call: 905.629.8264

தமிழ் பேசக்கூடிய விற்பனையாளர்கள் தேவை.
தொடர்புகளுக்கு: 416.788.3939

**ICE - CREAM TRUCK DRIVER**
Male or female need class - G - license to drive Ice - cream truck in Calgary, Alberta. Full time $1000 and up Weekly pay.
Job up to October. Accommodation Provid.
403.818.2222 / 647.800.5060

# CARS FOR SALE

2005 Toyota Corolla car for sale. Single owner & driver spacious, well maintained. 147km. Price $9,999
Bala : 416.754.7764

Toyota Camry, Corolla 2004 - 2008 for sale. அத்துடன் Van வாடகைக்கு விடப்படும்.
தொடர்புகளுக்கு: 416.625.4146

Honda 98 CRV car for sale. Automatic, black colour. Good condition.
தொடர்புகளுக்கு: 416.688.8364

2002 BMW X5 Blue colour $13,900,
2002 Toyota Corolla - 80K, $4,700,
2007 BMW X3 - $34,900,
2002 BMW X5 - $13,500, 200 km,
2005 Toyota Corolla - $9,800,
2005 Honda Accord - 2 door - $ 9,500,
தொடர்புகளுக்கு: ***416.575.5055***

விளம்பரம் பத்திரிகையை இணையத் தளத்தில் வாசிப்பதற்கு
***www.vlambaram.com***

வீடு, அறை, நிலஅறை (BSMT), கட்டிடம் வாடகை / விற்பனை விளம்பரங்களை ஐந்து நாட்களுக்கு முன்பாகத் தரவும்.

மேலும் பக்கங்கம் 25, 26

# ROOM RENT

**KENNEDY & LAWRENCE**
Rooms available in main floor. Bsmt rooms available. Close to subway, bus, stores...
தொடர்புகளுக்கு: 416.830.5560

**BIRCHMOUNT & MCNICOLE**
Upper level 3 broom for rent. 2 Washrooms, kitchen, living room, parking, laundry. Close to TTC, hospital. Avail.immediately
தொடர்புகளுக்கு: 416.293.6211

**MCCOWAN & FINCH**
1 Room for rent. All bills inclusive. Close to TTC, mall, school, temple, supermarket. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 647.889.7399

**BIRCHMOUNT & MCNICOLL**
அறைகள் வாடகைக்கு உண்டு. தனித்தனியாகவும் வாடகைக்குக் கொடுக்கப்படும். Attached washroom, Double garage. Close to everything.
Pl. Call: 416.293.6211

**MARKHAM & PAINTED POST DR.**
1 room for rent. Kitchen, laundry, cable. Close to school, mall. Avail. immediately. Girls preferred.
தொடர்புகளுக்கு: 416.400.8125

**MARKHAM & 14TH AVE**
3 Bedrooms upper level house for rent. Parking, laundry. Close to YRT, mall, school. Avail. immediately. அறைகள் தனித் தனியாகவும் கொடுக்கப்படும்.
905.642.3576/647.888.8255

**McCOWAN & LAWRENCE**
Room for rent in bsmt. Sep. entrance. Parking. Close to hospital, tamil stores, 2 min. to bus. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 647.827.5529

**MORNINGSIDE & SHEPPARED**
1 Bedroom for rent. Close to TTC, mall, school. Avail. immediately.
416.724.6186/647.833.3893

**McLEVIN & TAPSCOTT**
1 Master bedroom for rent. Attached washroom. Parking & cable. Close to TTC, mall, school. Backyard patio. Avail. immediately.
292 McLevin Avenue.
905.640.0833 / 647.367.0187

**ELLESMERE & NEILSON**
3 Bedroom for house for rent.
2 bedroom bsmt for rent.
**WARDEN & 401**
4 Bedroom walkout bsmt for rent.
தொடர்புகளுக்கு: 416.889.2254

**MIDLAND & EGLINTON**
1 Bedroom for rent with all facilities. Close to TTC, mall. பெண்கள் or வயதானவர்கள் விரும்பத்தக்கது. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.906.5013

**FINCH & MIDDLEFIELD**
Bsmt இல் 1 அறை தனித்தனியாக வாடகைக்கு உண்டு. Sep. entrance. Close to mall, ஐயப்பன் கோவில். No smoking. Ladies prefered. Keep the place clean. Avail. immediately. தொடர்புகளுக்கு: 416.493.0590/Leave message

மேலும் பக்கங்கம் 24, 26

**LAWRENCE & PHARMACY**
2 நேரச் சாப்பாட்டுடன் Room வாடகைக்கு உண்டு. 4 Bedroom bsmt இல் சகல வசதிகளுடன் உண்டு. குறைந்த செலவில் Tvi, Sun TV, Vijay TV, internet, தேவையெனில் ஒழுங்கு செய்து தரப்படும்.
தொடர்புகளுக்கு: 416.288.0303

**MARKHAM & LAWRENCE**
Room available for rent in main floor. Cable inclusive. Close to TTC & plaza. Room $275.
416.439.4076/416.728.0807

**MORNINGSIDE & ELLESMERE**
1 Bedroom for rent. Avail. July01,2010. Suitable for female student. Cable & internet avail. Close to university.
தொடர்புகளுக்கு: 905.429.0280

**ROOMS FOR RENT.**
With food or without food
**ISLINGTON & FINCH (NORTHYORK)**
Islington/steeles, northyork. Students, family, single mother/dad preferred.
தொடர்புகளுக்கு: 416.744 help(4357)

**WARDEN & SHEPPARD**
ஒரு அறை basement இல் இரு நேரச் சாப்பாட்டுடன் வாடகைக்கு உண்டு. எல்லா வசதிகளும் அண்மையில் உண்டு. பெண்கள் விரும்பத்தக்கது. Avail. mmediately.
416.299.4895 / 416.201.1222

**MORNINGSIDE & MORNINGVIEW**
2 Bedroom for rent. Parking, laundry, cable. Close to TTC, mall school, U of T, bank. Avail. Anytime. அறைகள் தனித்தனியாகவும் கொடுக்கப்படும். Female or students preferred.
தொடர்புகளுக்கு: 416.805.8791

**DANFORTH & EGLINTON**
Shared Room for rent in bsmt. Another room available for a lady in main floor. Close to bus, stores, 5 min. to Kennedy subway. Males only. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 647.201.3111

# மணமகன் தேவை

யாழ். இந்து மதத்தைச் சேர்ந்த தற்பொழுது கொழும்பில் தனியார் நிறுவனத்தில் Accounts assistant ஆக பணிபுரியும் 1972 ஆம் ஆண்டு கார்த்திகை நட்சத்திரம், 5'4" உயரமுடைய அழகிய பெண்ணுக்கு நற்பண்புள்ள வரனை எதிர்பார்க்கின்றோம். திருமண சேவை செய்பவர்களும் தொடர்பு கொள்ளலாம்.
தொடர்புகளுக்கு: 647.618.9316

# COMPUTER REPAIR

உங்கள் கணினி (Computer) யில் ஏற்படும் குறைபாடுகளை நேரில் வந்து நிவர்த்தி செய்யவும் மற்றும் கணினி (computer) திருத்த வேலைகளுக்கும் அனைத்து தேவைகளுக்கும் அழையுங்கள் நிமல் - 416.301.1999

# WANTED

Used Toyota Corolla 1993 - 1997 தேவை. Any condition.
Raj - ***647.269.6552***

விளம்பரம் பத்திரிகையை இணையத் தளத்தில் வாசிப்பதற்கு
***www.vlambaram.com***

வீடு, அறை, நிலஅறை (BSMT), கட்டிடம் வாடகை / விற்பனை விளம்பரங்களை ஐந்து நாட்களுக்கு முன்பாகத் தரவும்.

# SALE SALE SALE

**TV, VCR விற்பனைக்கு**
52 Inch TV விற்பனைக்கு உண்டு. இதனுடன் VCR, Technics Music system மும் விற்பனைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு: 416.724.0159

# SPACE FOR RENT

**KENNEDY & LAWRENCE**
2 Space for rent.
416.755.8354/647.836.9255

# ஆடைகள் விற்பனைக்கு

இந்தியாவில் இருந்து கொண்டுவரப்பட்ட Fashion Tops விற்பனைக்கு உண்டு
தொடர்புகளுக்கு: 905.554.5550
(Weekdays after6.00pm)

# CAR FOR HIRE

Wedding, Airport, Temple, Special occasion ஆகிய தேவைகளுக்கும், Limousine தேவைக்கும் அழையுங்கள்:
416.274.5495

***Become a Part Of Healthy Tamil Community***

## Tamil Parents Speak English (Spoken English) - Yoga Included

**Are you a Tamil?**

Are you a Senior/Adult Person?
Is any one having difficulties in communicating with your kids and Canadian communities?
Motivate your parents by sending them for Spoken English Class
Instruction by a qualified Tamil Instructor
Plus

## வேலை வாய்ப்பு

நீங்கள் Hotels, Restaurants & Hospitals என்பவற்றில் ஒரு மணித்தியாலத்திற்கு $20 டொலர் சம்பளம் எடுக்கவேண்டுமா?
Food Handler - One day Certification Program
Sanitization and Clean Safe Program
AutoCAD Program

5310 Finch Ave E, Unit#09
Scarborough, On, M1S 5EB

For registration: Call us
***(416).412.7374 / riappa@hotmail.com***

**$100 $250 $100**
**$250 $250**

Ontario Vegetarian Food Bank
"தொண்டர் சேவை"
## "Help Ever Hurt Never"

**$100 $100**

**"மக்கள் சேவையே மகேசன் சேவை"** என எண்ணி இயங்கும் இந்நிறுவனத்துடன் இணைந்து நீங்கள் தொண்டர்களாக பணிபுரியும் வண்ணம் வேண்டப்படுகிறீர்கள்.

நீங்கள் Welfare, ODSP இல் தங்கி வாழ்பவர்களாயின் எம்முடன் பதிவு செய்து தொண்டாற்றும் பொழுது மேலதிக பணமாக $250.00ம் தொடர்ந்து 6 - 12 மாதங்களுக்கு $100.00 பெற்றுக் கொள்ளமுடியும்.

**$250 $250**

தானம் தர்மம் தொண்டு
**2370 MIDLAND & SHEPPARED**
**2400 Finch Ave w & Weston**
உணவுத்தானம் செய்ய விரும்புவோர் எம்முடன் தொடர்பு கொள்ளவும்.
***(416)744 HELP (4357)***

**$250 $100 $250 $100 $250**

# டிஸ்னி உலகம்...

23ஆம் பக்கத்தொடர்ச்சி

சிதறின் இடைகிடை சில தேவதைக் கதை வடிவங்களின் ஒளி வடிவங்களும் வெடித்து வெளி வந்தன. ஒவ்வொரு தடவையும் வாணம் வெடித்து வண்ணவடிவங்கள் வானில் தெரிந்த போது 'ஆஹா ஓஹோ' என்ற சத்தங்களும் எழுந்தன. சிலர் திறந்த வாய் மூடாமலே யாவற்றையும் பிரமிப்போடு பார்த்துக் கொண்டு நின்றனர். வாண வேடிக்கை நடந்து கொண்டிருந்த வேளை பல்வேறு பாடல்களும் ஒலி பெருக்கி களிலிருந்து வந்து கொண்டிருந்தன. அன்று



அசைவதற்கு முடியாதஅளவுக்கு மக்கள் நெருக்கமாக நின்று கொண்டிருந்தார்கள். சிலர் தரையிலும் சிலர் மடிக்கும் கதிரைகளிலும் அமர்ந்திருந்து இரசித்தனர். சிந்தைக்கு ஒரு அசம்பாவித நிகழ்ச்சியை யும் அன்று முழுவதும் நடக்கவேயில்லை என்பது ஆச்சரியமே. அங்கு பல காவலர் இருந்தபோதும் அவர்களும் மக்களோடு மக்களாக யாவற்றையும் பார்த்து இரசித்துக் கொண்டும், மக்கள் நடமாட்டத்தை ஒழுங்கான முறையில் வழிநடத்திக் கொண்டுமிருந்தனர்.

புத்தாண்டு பிறக்கும் நேரம் அண்மித்தவுடன் அதாவது இரவு 12 மணியடித்ததும் இரண்டாவது வாணவேடிக்கை 'Happy New Year' என்ற வாசகத்தோடு வாழ்த்துக் தெரிவித்து ஆரம்பமாயிற்று. யாவரும் கைதட்டிக் கரகோசம் செய்தனர். ஒருவருக்கொருவர் வாழ்த்துத் தெரிவித்துக் கொண்டனர். இந்த வாணவேடிக்கை முன்னையதை விடச் சிறப்பாக இருந்தது. களைப்புத் தெரியாமல் யாவரும் கண்டு கழித்தனர். மூலைக்கு மூலை கோப்பிக் கடைகளும் குளிர்பானக் கடைகளும் அமைந்திருந்தன. ஏராளமான பணச் செலவில் அன்றைய காட்சிகளை டிஸ்னி நிறுவனம் அமைத்திருந்தது. பாராட்டுக் குரியது. நுழைவுச் சீட்டு 85 டொலர் மட்டுமே என்பது குறிப்பிடத்தகுந்தது.

## எட்டாவது சர்வதேச தமிழ்த்திரைப்பட விழாவில் வெற்றி பெற்ற படங்கள்

சிறந்த படம் முதலாமிடம் Can I have a Dream – Norway

Second Place Durai and Saro – Singapore

Third Place Knives - Sri Lanka




Best Director – Stil Life – England

Best Camera – Black & Noir - France

Best Script – Durai and Saro - Singapore

Best Editing - Knives - Sri Lanka

Best Music – Can I have a Dream

Acting – Small Boys from Kanna (India) and Nothing (SL)

Best Movie – Critic Award – Vanni Mouse

Nattel Media Special Award – Durai and Saro


**MATH, SCIENCE & ENGLISH TUITION**

Under taken for all arades from grade 4 to university 1st year. Special classes in advanced functions, vector calculation & data management for grades 11 & 12

Indiouvale and group classes available by an experience teacher Mr. S.F. Xavier. Classes available at 1. Scarborough 2. Stauffville and Richmond Hill

**CONTACT: 647.340.9490 / 647.831.0070**


# சக்கர ஊர்தி...

20ஆம் பக்கத்தொடர்ச்சி


இலைகளில் உள்ள சாற்றினை சாறு உறிஞ்சும் ஒரு பூச்சியும் (Bug) உறிஞ்சுவதாலும் இலைகள் சுருண்டு உலருவதும் உண்டு. (Lopidea) எனும் இந்தப் பூச்சி மிகச் சிறியது. 5மிமீ அளவு



பருமன்தான். ஆகவே காண்பது கஷ்டம். ஏதாயினும் பூச்சி கொல்லியை விசுறுவதால் இதனைக் கட்டுப் படுத்தலாம். இந்த மூன்று செடிகளையும் உங்கள் வீடுகளில் வளர்ப்பதை நான் சிபார்சு செய்வேன். காரணம், இவை பல்லாண்டுகாலம் வளரக்கூடிய தாவரங்கள். ஒரு முறை நட்டாலே பின்னர் மாரி, கோடை, குளிர் என்ற கவலையே இல்லாமல் இருக்கலாம். பெரிதாக ஒன்றும் பசளை இடவோ அல்லது பூச்சி கொல்லிகளையோ வீச வேண்டிய அவசியம் இல்லை.



(பெரும்பாலான படங்கள் எனது வீட்டுத்தோட்டத்தில் எடுக்கப்பட்டவை)




SMILE....

• BUSINESS PLANS
• CORPORATE TAX PREPARATION OF FILING
• PROFESSIONAL OVER 15 YEARS EXPERIENCE
• ACCOUNTING, TAXATION
• SYSTEMS - POINT OF SALES

**RK CONSULTANTS**

**PL. CALL: 905.887.7457 / 905.751.7537**

24 hrs, 365 days

# இராஜபூக்கள் - கலைவிழா 2010

திருமதி. கோதை அமுதனின் "இராஜபூக்கள்" தமிழ்க்கலைக் கல்லூரி தனது 12வது ஆண்டு கலைவிழாவை மே 29, 2010ஆம் நாள் கனடா கந்தசுவாமி கோவில் அரங்கில் கொண்டாடியது.

இவ்விழாவிற்கு பிரதமவிருந்தினராக பேராசிரியர் அ. சண்முகதாஸ் உம் அவரது பாரியார் திருமதி. மனோன்மணி சண்முகதாஸ் உம் வந்திருந்தார்கள். கௌரவ விருந்தினராக கவிஞர் கந்தவனம் அவர்களும் சிறப்பு விருந்தினராக மகா-ஜனக்கல்லூரி முன்னைநாள் அதிபர் திரு.பொ.கனகசபாபதியும் இவ்விழாவிற்கு அழைக்கப்பட்டிருந்தார்கள்.

பிரதம, கௌரவ மற்றும் சிறப்பு விருந்தினர்கள் மங்கலவிளக்கு ஏற்றுவதுடன் விழா மாலை 5 மணி 30 நிமிடம் அளவில் ஆரம்பமானது. இதைத் தொடர்ந்து கனேடிய தேசிய கீதமும், தமிழ்த்தாய் வாழ்த்தும் இசைக்கப்பட்டு எமது தாய் நாட்டில் நடை-பெற்ற போரில் உயிரிழந்தவர்களுக்கு மௌன அஞ்சலியும் செலுத்தப்பட்டது. சுகந்தினி மணிவாசகர் தனது வரவேற்புரையில் விருந்தினர்களையும் சபையோரையும் வரவேற்றார். அதை தொடர்ந்து இரு மாணவிகள் யதூரியும், யசிகாவும் வரவேற்பு நடனம் ஆடினார்கள். சிறீ வரசித்தி விநாயகர் இந்துக்கல்லூரி நிர்வாகப் பொறுப்பாளரான திரு ஜெயானந்தசர்மா, தியாகாராஜாஐயர் வரசித்தி விநாயகர் ஆலயத்தின் சார்பில் இவ்விழாவிற்கு ஆசியுரை வழங்கினர்.

- அருந்ததி ஞா. -

இவற்றை தொடர்ந்து கலைநிகழ்ச்சிகள் ஆரம்பமானது. இந்நிகழ்ச்சிகளை திருமதி. சிவப்பிரியா சிவதாசனும் திருமதி. சுமங்களா சண்முகநாதனும் தொகுத்து வழங்கினார்கள். திருமதி. நிர்மலா சுரேஸ் இன் பயிற்ச்சியில் "திருநாவுக்கரசர்" நாடகம் நடைபெற்றது. இந்நாடகத்தில் அப்பூதிஅடிகள் சரித்திரம் நடித்துக்காட்டப்பட்டது. நல்ல பாம்பாக வந்து நடனமாடிய சிறுமியின் நடனம் சிறப்பாக இருந்தது.

"திருநாவுக்கரசர்" நாடகத்தை தொடர்ந்து திருமதி பத்மினி ஆனந்தனின் மாணவி ஜதிலா யோகீஸ்வரனின் கரகாட்டம் நடைபெ-ற்றது. கரகாட்டத்தை அவர் இரசித்து ஆடியது அவரது முகபாவனையில் மிகவும் தெளிவாக தெரிந்தது. இதைத் தொடர்ந்து "கைவீசம்மா" பாடலுக்கு கறுப்பு உடை அணிந்து வந்த பதினான்கு மாணவர்கள் இயந்திர மனிதன் போல் தங்கள் கைகளை அபிநயம் பிடித்தார்கள். சகோதரிகளான ராகவி, பிரணவி பாலகுமார் அடுத்து வயலின் இசை வாசித்தார்கள். திவ்வியராஜனின் "வெண்பனிபூக்கள்" பாடலுக்கு வெண்நிற உடையில் வந்த சிறுவர்கள் அபிநயம் பிடித்தனர். இவற்றை தொடர்ந்து CMR திருமதி மேகலா திலகன் தலைமையில் எட்டு சிறுவர்கள் "இயற்கை" என்ற தலைப்பில் கவியரங்கத்தை நடத்தினார்கள்.

கலைவிழாவில் இடைஇடையே "பச்சைக்கிளியே", "உடல்உறுப்புக்கள்", "ஓடிவிளையாடு பாப்பா", போன்ற பாடலுக்கு சிறுவர்கள் அழகாக அபிநயம் பிடித்து ஆடினார்கள். ஔவையாரின் "ஆத்திசூடி" "கொன்றைவேந்தன்" இரண்டையும் மேற்கத்தியபாணியில் சிறுவர்கள் இசைத்து அபிநயத்தார்கள்.




"பெற்றோர்கள் கஷ்டப்பட்டு உழைப்பது எங்களுக்காகவா அல்லது தங்களுக்காகவா" என சிறுவர்கள் பட்டிமன்றம் நடத்தினார்கள். இப்பட்டிமன்றத்திற்கு TVI 'மலரும்மொட்டுக்கள்" நிகழ்ச்சித் தயாரிப்பாளர் திருமதி வாசுகி நவகுலராஜா நடுவராக இருந்தார். பெற்றோர்கள் கஷ்ட்டப்பட்டு உழைப்பது பிள்ளைகளுக்காகத்தான் என படிப்புச்செலவு, உணவு, உடை பராமரிப்பு என்பனவற்றை உதாரணமாக காட்டி கிருஷ்ணன், பவிதரன் மற்றும் யதுசன் வாதிட்டார்கள். ஆனால் பெற்றோர்கள் கஷ்ட்டப்பட்டு உழைப்பது அவர்களுக்காவே என எதிர்வாதம் செய்த தோமினா, திவ்யா மற்றும் மதுஷாவின் கேள்விகள் சபையோரையும் சிந்திக்கவைத்தது. கனடாவில் வாழ்வதற்கு கார் அவசியம் தேவை ஆனால் BMW போன்ற விலையுயர்ந்த கார்கள் தேவையா? வாழ்வதற்கு வீடு தேவை ஆனால் ஒருவரோடு ஒருவர் போட்டி போட்டு பெரிய வீடு வாங்க வேண்டுமா? கனடாவில் கல்வி கற்பதற்கு பலதுறைகள் உள்ளன. ஆனால் பிள்ளைகளை Doctor ஆக மட்டும்தான் வரவேண்டும் என வற்புறுத்துதல் சரியா? என்பன இவர்கள் எழுப்பிய வினாக்களில் சிலவாகும்.

கௌரவ விருந்தினர் உரையாற்றிய கவிஞர் வி. கந்தவனமும் பின்னர் சிறப்பு விருந்தினர் உரையாற்றிய அதிபர் பொ. கனகசபாபதியும் திருமதி கோதை அமுதனின் கடந்த பன்னிரண்டு வருடகால சேவையை பற்றியும் அவர்களது மாணவர்களினது திறமையை பற்றியும் விபரித்தார்கள்.

திருமதி மோகனா ஈஸ்வரமூர்த்தியின் நடன அமைப்பில் உருவான முத்தமிழ்க்குவியலான "என்மகள்" இல் அவரும் இருபதிற்கு மேற்பட்ட மாணவர்களும் பங்கேற்றனர். இதில் ஒரு பெண் குழந்தை பிறந்து, பாடசாலை சென்று, பருவம் எய்தி, காதல் வயப்பட்டு பின்னர் திருமணமாகி தாயை பிரிந்து செல்லும் வரையிலான நிகழ்வுகள் காட்டப்பட்டன. "மழை", "பொன் மகள் வந்தாள்" என இரு திரையிசை நடனங்கள் இக்கலைவிழாவில் இடம்பெற்றன.

திருமதி கோதை அமுதனின் நெறியாள்கையில் உருவான இருபதிற்கும் மேற்பட்ட மாணவர்கள் பங்குபற்றிய கூத்தான "காத்தவராயன் கூத்து' இரண்டாவது முறையாக இக்கலைவிழாவில் மேடையேறியது. இம்மாணவர்களுக்கு இது இரண்டாவது மேடையேற்றமாக இருந்ததால் அவர்களது நடிப்பில் அனுபவமும் கூச்சமின்மையும் தெரிந்தது.

பிரதம விருந்தினர் உரை நிகழ்த்திய பேராசிரியர் அ. சண்முகதாஸ் கோதை அமுதன் இந்த தமிழ்க் கலைக் கல்லூரிக்கு தனது தகப்பனார் இராஜரட்ணத்தினுடையதும், அவரது இருமகள்களான பூங்கொடி, பூங்கோதையினதும் பெயரைக்கொண்டே "இராஜபூக்கள்" என பெயர்வைத்திருக்கலாம் ஆனால், தனக்கு இக்கல்லூரி இராஜ பூக்களை உருவாக்கி கொண்டு இருப்பதால் தான் இப்பெயர் பொருத்தமாக தெரிகின்றது என்றார்.

கலைவிழாவின் நிறைவு நாடகமாக "தசரதச்சக்ரவர்த்தி" நாடகம் நடைபெற்றது. இதில் கைகேயி கேட்ட இரு வரத்தால் இராமனின் முடிசூட்டுவிழா நிற்பாட்டப்பட்டு இராமன், சீதை இலக்குமணன் உடன் காடு செல்லுதலும் தசரதன் புத்திர சோகத்தால் இறப்பதும் நடித்துக்காட்டப்பட்டது. இந்நாடகத்தில் தசரதன் மற்றும் வசிட்டரின் நடிப்பு சிறப்பாக இருந்தது. திருமதி கோதை அமுதன், "இராஜபூக்கள்" தமிழ்க்கலைக்கல்லூரியின் 12 ஆவது ஆண்டு கலைவிழா சிறப்பாக நடைபெற உதவிய எல்லோருக்கும் நன்றி தெரிவித்தார். இதை தொடர்ந்து மாணவர்களுக்கு பரிசளிப்பு நடைபெற்றதுடன் விழா இரவு 11 மணி 30 நிமிடம் அளவில் நிறைவு பெற்றது.

APARTMENTS FOR RENT



$250 Move In Bonus

Best Building in Scarborough!

Clean, family building, FREE parking.

Close to schools, bus stop, Tamil store in building.

Pl. Call: 416.264.2818


# ஐம்புலன் வென்றார் அவனியில் மேலோர்

ஐந்திற்கு தனி மவுசு உண்டு. ஐம்பூதங்கள், ஐம்பொறிகள், ஐவகை நிலம், ஐந்துமுகம், ஐம்பொன், பஞ்சபாண்டவர், பஞ்ச சையினியம், பஞ்ச கன்னியர், பஞ்சாமிர்தம், பஞ்ச பாணங்கள் என்பன ஐந்தின் பெருமையை அறிவுறுத்தும்.

இவற்றுள் மெய், வாய், கண், மூக்கு, செவி என்ற ஐம்புலன்களும் மனிதனை ஆட்டிப் படைக்கின்றன. இவற்றால் அலைக் கழிக்கப்படும் உயிர் அவஸ்தைப்படுகின்றது. “ஓரவொட்டார் ஒன்றை உன்ன ஓட்டார், மலரிட்டு உனது தான் சேரவொட்டார் ஐவர்.” என்று ஆன்மாவை அமுக்கிப் பிடிக்கும் ஐந்து அண்டை வீட்டாரைப்பற்றி புலம்பினார் அருணகிரிநாதர். அடக்க முடியாத இந்த ஐந்து முரடர்களை ‘ஐம்புலவேடர்’ என்கின்றது சைவசித்தாந்தம். இந்த ஐந்து பொறிகளாலும் இன்பங்களை மட்டுமல்ல துன்பங்களையும் நுகரமுடியும். இன்ப துன்ப அனுபவங்களை பொறி புலன்கள் மூலமாக நுகர்வது வாழ்வின் நியதி, கட்டாயம். இந்த ஐந்து பொறிகள் வழி பெறுவது ஐந்தறிவு. இதனைத் தாண்டி ஆறாவது அறிவின் வழி உணர்வதே கடவுள். இந்த ஐந்துமே முழு அளவிற் தொழிற்பட்டுக் கொண்டிருந்தால் ஐந்தையும் தாண்டி மேலே வரமுடியாது. அப்பொழுது கடவுளை நினைப்பதற் கில்லை. புரிந்து கொள்ளவும் வழியே இல்லை. இதனால் தான் இந்த ஐந்தையும் அடக்கு, அடக்கு என்று ஞானிகள் பாடினார்கள். பொறிகளின் மீது தனி அரசாணை என்று பாடினார் பாரதியார்.

உரன் என்னும் தோட்டியான் ஓரைந்தும் காப்பான் வரன் என்னும் வைப்பிற்கோர் வித்து - என்றார் வள்ளுவர். அறிவு மூலமே ஐம்புலன்களை அடக்க முடியும் என்பது அவரது கருத்து. ஆன்ம பலத்தை ஐந்து பொறிகளின் வழி அதிகமாக்கிக் கொள்ளலாம் அல்லது கட்டுப்பாடின்றி அவற்றின் விருப்பப்படி மேயவிட்டு விரயம் ஆக்கலாம். அப்போது வாழ்கையே வீணாகி விடுகின்றது.

பொறிகளைக் கட்டுவது என்பது சாத்தியமா? அது முடியாத காரியமேயாகும். ஏனெனில் கண்கள் காட்சியை காணத் துடிக்கின்றன. மூக்கு - மணத்தை முகர முற்படுகின்றது. செவி - இசையை கேட்டு இன்புற விரும்புகின்றது. வாய் - உருசியான உணவை சுவைக்க விரும்புகின்றது. மெய் உணர்ச்சி இன்பத்தை சுகிக்க விரும்புகின்றது. எனவே இந்த ஐந்து குதிரைகளும் உடம்பை பல்வேறு திசைகளில் வேகமாக இழுத்துச் சென்று ஆட்டம் காண வைக்கின்றன. கடிவாளத்தை இறுக்கிப்பிடித்தாலும் இவற்றை கட்டுப்படுத்துவது கடினமேயாகும். ஊழியர்களாக இருக்க வேண்டிய இந்த ஐந்து பொறிகளும் எசமானர்களாக ஆகி விட்டதனால் தான் மனசு கந்தலாகிப் போய்விடுகின்றது.



நாகபூஷணி அம்மன் ஆண்டு மகோற்சவம் 12.06.2010 ஆம் ஆண்டு ஆரம்பமாகியுள்ளது என்பதை அறியத்தருகின்றோம். சென்ற இதழில் 08.06.2010 என்று தவறுதலாக இடப்பட்டதையிட்டு மனம் வருந்துகிறோம்.

பெரிய சிவன் கோவில்களில் ஐந்து பிரகாரங்கள் இருக்கும். பொறிதரும் இன்ப நுகர்ச்சி பற்றிய எண்ணங்களை ஒவ்வொரு பிரகாரத்திலும் விட்டு விட்டு ஐந்தையும் தாண்டி ஆறாவது அறிவு நிலையில் இறைவனை வணங்குவதே சிவன் கோயிலின் அமைப்பு முறையாகும்.

பொறிகளை அடக்கி ஆண்டதற்கு உதாரணமாகத் திகழ்ந்தவர் காந்தி மகான். அவர் வைத்திருந்த குரங்குப் பொம்மையே அதற்கு உதாரணமாகும். காட்சியை கட்டுப்படுத்து, செவியை மந்தமாக்கு. பேச்சை அளந்து பேசு என்பதே அப்பொம்மை உணர்த்தும் பாடமாகும். அதுவே இறைவனுடன் மனதை ஐக்கியப்படுத்துவதற்கு உரிய வழியுமாகும்.

ஐந்து முகமுடைய விளக்கினை வீட்டினில் ஏற்றும்போது அதன் கருத்து யாதெனில் ஐந்து பொறிகளும் முறையாகப் பயன்படுத்தப்பட்டால் விளக்கைப் போல் உலகை விளக்கும் என்பதாகும்.

சுவை ஒளி ஊறு ஓசை நாற்றம் என்றைந்தின்
வகை தெரிவான் கட்டே உலகு.



நா. க. சிவராமலிங்கம்






Niru Niru நிரு பிராண்ட்

தமிழர் மத்தியில் என்றும் தரமானதாகவும் ருசியானதாகவும் சுகாதாரமுறைக்கேற்ப உணவுப்பொருட்களை வழங்குவது

**நிரு பிராண்ட் தயாரிப்புக்களே.**

# ஸ்ரீ கணேசன் என்னும் அன்னை

## நூற்றாண்டு காணும் ஸ்ரீ கணேசமகா வித்தியாலயம்

புங்குடுதீவு கணேச மகாவித்தியாலயம் நூறு ஆண்டுகளைக் கடந்த கட்டிடக் கிழவியல்ல. கவிதைக் கன்னி. நூறு வகையான வாழ்க்கை அனுபவங்களைக் கொண்ட ஆயிரம் பிறைகண்ட அன்னை. குழந்தை வளர்வது போன்று நிலப்பரப்பாலும் பாடவிதானங்களாலும் மெய்ஞான விஞ்ஞான தொழில்நுட்பங்களாலும் சீராக வளர்ந்த தமிழிச்சி. கவியோகி சுத்தானந்த பாரதியாராலும் சுவாமி விபுலானந்த அடிகளாலும் தமிழுக்கென்று வந்த தாயெனப் பாராட்டப்பட்ட பட்டத்தரசி. எலும்பாலும் தோலாலும் சதையாலும் வாளித்து நின்ற வனிதை ஒருத்தியை "அவள் ஒரு கவிதை" என்று பாடினான் மொழிக்கவிதை எழுதும் கவிஞன். சைவசித்தாந்த கொள்கை வழியில் கல்வி ஞானத்தையும் கடவுள் பற்றையும் வளர்த்தெடுத்த எங்கள் குலதெய்வம் கணேச அன்னை.

தமிழ் பண்பாடு என்பது அருவமான ஓர் உணர்வே. இப்பண்பாட்டை வளர்த்தெடுத்த மூதாட்டியாய் அருவமும், உருவமாகி அனாதியாய் பழமையுமாகி நின்று விளங்கும் ஜோதி மகள். இன்று சுடர் விளக்காய் ஒளிர்கின்ற கவிதை மகளே கணேச அன்னை.

யாழ்ப்பாணத்தை அன்னியர்கள் கைப்பற்றுவதற்கு முன்பும் பின்பும் சைவ சித்தாந்தத்தின் ஒழுக்கநெறிகளே மக்களை வழிநடத்தியது. இந்தத் தத்துவ பின்புலத்தில் கல்வி கலாச்சார விழுமியங்களை வளர்க்க வேண்டும் என்னும் இலட்சியத் தாகத்துடன் கல்வித்தந்தை திரு.வைத்திலிங்கம் பசுபதிப்பிள்ளை விதானையார் புங்குடுதீவிலே பாடசாலைகளை அமைத்தவர். கணேசமகா வித்தியாலயத்துடன் ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாலயம், ஸ்ரீ பராசக்தி வித்தியாலயம் என்றும் பிராமணப் பிள்ளைகள் வேதாகமங்களைப் படிக்க வேண்டும் என்பதற்காய் வேதாகம சாஸ்திரப் பாடசாலையையும் தோற்றுவித்தவர். இப்பெரியார் புத்தளம் முந்தல் என்ற இடத்திலும் தமிழ் பிள்ளைகளுக்காய் ஒரு பாடசாலையை உருவாக்கிய பெருமைக்குரியவர்.

பெரியார் வ.பசுபதிப்பிள்ளையின் இலட்சியம் என்ன? தன்னூர் மக்கள் அடிப்படை அறிவு பெற வேண்டும். எழுத வாசிக்கத் தெரியவேண்டும், எண்கணிதம் விளங்க வேண்டும், எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும் என்ற ஆரம்பகாலப் பழமொழியை தனது நெஞ்சிலே பதியமிட்டுக் கொண்டவர் இப்பெரியார். 1910ம் ஆண்டாலே அன்றைய சமுதாயச் சூழலை அக்கறையோடு நோக்கி சமூக அசைவு இயக்கத்தின் தன்மைகளைக் கணக்கிட்டு கல்விக்கூடம் கட்டவேண்டும் என்ற கற்பனையை வளர்த்து, இன்றைய உலகத் தரத்திற்கு உயரும் மாணவர்களைக் கனவு கண்டவர். அவர்களை நாம் இன்று நான்கு திசைகளிலும் பிரகாசிக்கும் கோலத்தில் காண்கிறோம்.

அன்றைய எண்ணும் எழுத்தும் கொழும்பு, இரத்தினபுரி, குளியாப்பிட்டி, காவத்தை, பதுளை, பண்டாரவளை என்று ஆளுமை கொண்டது. அதன் வளர்ச்சி இன்று பொறியலாளர்களை, கணக்காளர்களை, மருத்துவர்களை, விஞ்ஞானிகளை, வித்துவான்களை, இசைவிற்பனர்களை, நாட்டிய வித்தகர்களை, சட்ட வல்லுனர்களை, தொழில்நுட்பவியலாளர்களை, வர்த்தகப் பிரமுகர்களை, புத்திஜீவிகளைக் கண்டு பசுபதிப்பிள்ளை பெரியாரின் பெருந்தவத்தின் பயனாய் விளைந்துள்ளமை வியப்புக்குரியதன்று. அணுவாய் அரும்பியதே பேரண்டமாய் பிரகாசிக்கும் பெற்றியது. பெரியார். வ.ப.வின் விதைகள் இன்று விருட்சங்களாகி கூடல் கண்ட களிப்பில் முதலாவது நூற்றாண்டை நினைவு கூறுகின்றது.

பெரியார் பசுபதிப்பிள்ளை அவர்கள் பிள்ளைகள் எல்லோரும் படிக்க வேண்டும். ஏற்றத்தாழ்வு இல்லாமல் சமவாய்ப்புகளைப் பெறவேண்டும். எல்லோரும் ஓர் குலம், எல்லோரும் ஓர் நிறை என்ற எண்ணங்களுடன் வாழ வேண்டும் என்னும் விருப்பமுடையவர். அந்தக் காலத்தில் சிறுபான்மை இனத்தைச் சேர்ந்தவர்களின் பிள்ளைகள் பள்ளிக்கூடம் சென்று படிப்பதை விரும்பவில்லை. தங்கள் தொழிலும் தங்கள் வாழ்வும் என்ற வட்டத்திற்குள் நின்றனர். அவர்களுடைய வீடுகளுக்குச் சென்று பிள்ளைகளை அழைத்துக் கொண்டு போய் பள்ளிக்கூட வாங்குகளில் இருத்திய இப்பெரியார் காந்தீயக் கொள்கைகளை கூறியவர். இவர் உடலிலே எப்போதும் கதர் வேட்டியும் கதர் சட்டையுமே காணப்படும்.

சிறுபான்மை இன மக்களின் பிள்ளைகளை கல்விக்கூடத்தில் சேர்ப்பதற்கு உதவிய பெரியார்களில் இருவர் நினைவில் நிற்கிறார்கள். ஒருவர் மாலைகட்டிப் பெரியார் என அழைக்கப்பட்ட கந்தையா. இவர் கிழக்கூரைச் சேர்ந்தவர். மற்றவர் குறிகாட்டுவானைச் சேர்ந்த நாகலிங்கப் பெரியார் ஆவர். இந்தப் புதுமை அல்லது முற்போக்குப் புரட்சி ஆசிரியர்கள் க.சிவராமலிங்கம், வித்துவான் சி.ஆறுமுகம், மு.தளையசிங்கம் ஆகியோர் புங்குடுதீவு மக்களிடையே பொதுவுடமைத் தத்துவங்களையும், கால்மாக்சின் பொருள் முதல் வாதக்கருத்துக்களையும் பரப்புவதற்கு முன்பே நடந்த செயல்முறைப் பணியாகும். இப்பணியில் அப்பிள்ளைகளுக்கு உடுப்பு உபகரணங்கள் வாங்கிக் கொடுத்தும் இருக்கிறார்கள். சைவசித்தாந்த தத்துவமே பசுபதிப்பிள்ளை பெரியாருக்கு மறுமலர்ச்சி முற்போக்கு எண்ணங்களை வளர்த்தது.

பசுபதிப்பிள்ளை பெரியாரின் கோலம் ஒல்லியானது. ஊதிவிட்டால் விழுந்துவிடும் தளர் உருவம். அவர் வருகிறார் என்றால் ஊர்ச் சண்டியர்களின் சன்னதங்கள் அடங்கிவிடும். பெரியாரின் மிதிதடிச் சத்தம் அல்லது அவருடைய செருமல் கேட்டாலே இது நடக்கும். ஒரு ஓசை அதிர்வில் சூழ்நிலையை அமைதியாக்கிய புருஷர். இப்பெரியார் வாழ்ந்த பெருங்காட்டில் பசுபதிவாசம் இல்லத்திற்கு கிழக்குப் பக்கமாக சிறுபான்மை சமூகத்தைச் சேர்ந்த இருசகோதரிகளின் வீடுகள். நாகமுத்தி, பொன்னி என்னும் பெயர்களை உடையவர்கள். இவர்களுக்குள் எந்த நாளும் வாய்ச்சண்டை நடக்கும். சில நாட்களில் காலை தொடங்கினால் மாலை வரை வாய்வீச்சு ஓயாமல் நிகழும். இருவரும் மேசை! மேசை! என்ற வார்த்தைகளை கூசாமல் கொட்டுவார்கள். நாகமுத்தி அக்கா பத்து மேசைகளை அடுக்கினால் பொன்னியக்கா பதினைந்து மேசைகளை அடுக்குவார். இடக்கரை அடக்கி எழுதினேன். புரிந்து கொள்வீர்கள்.

அவர்களுடைய பிள்ளைகள் கற்களால் எறிந்து கொள்வார்கள். கற்கள் உக்கிரமாய் வீசப்படும் போது பரமசிவம் என்று சொல்லியபடி பசுபதிப் பெரியார் அந்தக் களத்திற்குப் போவார். கல் வீச்சும் சொல் வீச்சும் அடங்கும். கல்லால் எறிந்து சண்டை போட்ட இளைஞர்களுக்கு தண்டனை கொடுப்பார். இருபகுதியினரும் கற்களைப் பொறுக்கி குவிக்க வேண்டும். பின்பு அவற்றை சுத்தியலால் அடித்து சல்லிக் கல்லாக்கி கடகத்தில் எடுத்துவர வேண்டும். அக்கற்கள் கணேசவித்தியாசாலை கட்டிட வேலைகளுக்குச் சேர்த்துக் கொள்ளப்படும். இக்காட்சியில் விநோதமானது நாகமுத்தி அக்காவும் பொன்னியக்காவும் கல்லடிப்பில் கலந்து கொள்வது. அவர்களுக்குக் கூலி பசுபதி வாச சாப்பாடும், ஆளுக்கு பத்துக் கொத்து நெல்லும். இவையெல்லாம் கணேச சங்கத்திற்குரியவை.

அது ஒரு பொற்காலம். பதின்ம வயதுப் பசிபோல பிறகு எப்போதும் பசிப்பதில்லை. பதினைந்து வயதில் போட்டிக்கு ஊர் இடியப்பம் 25 சாப்பிட்டவர், கனடாவில் 50 வயதில் கனடா இடியப்பம் 5 கூட சாப்பிட முடியவில்லை என்கிறார். பசி இல்லையாம். பதின்ம வயதில் வயிற்றுப் பசி, மனப்பசி, ஆன்மீகப் பசி ஆகியவற்றை பசுபதிப்பிள்ளை பெரியார் ஆற்றுவதற்கு எடுத்த முயற்சிகளில் தொண்டுகளில் முதன்மைத் தொண்டே கல்விக்கூடம் கண்டமை. இயக்குனர் தங்கர்பச்சானின் பள்ளிக்கூடம் என்ற திரைப்படம் இறந்த காலத்தின் பல நினைவுகளை மீளவும் நினைவூட்டியது என்பர் சமூகவியலாளர்கள். ஒரு பள்ளிக்கூடத்தின் இறந்த காலத்தை தொகுத்துச் சொல்லுவதும் நிகழ்காலத்தை நினைவுறுத்துவதும் இனிவரும் காலத்தை வகுத்துச் செல்வதும் உயிர்நிலை அறிவு ஜீவிகளின் கடமையாகும்.



- புலவர். ஈழத்துச்சிவானந்தன் -
(பசுபதிவாசம் புங்குடுதீவு)

ஸ்ரீ கணேசமகா வித்தியாலயம் ஈழத்தமிழரின் இறமை, சுயநிர்ணயம், இனப்பற்று, தேசியம் என்னும் விழுமியங்களுக்காய் தோற்றுவிக்கப்பட்ட கல்விக் கோட்டமாகும். இந்த விழாவில் அனைத்துத் தமிழர்களும் கலந்து கொண்டு கணேச அன்னையை கௌரவப்படுத்த வேண்டும் என விழா ஏற்பாட்டாளர்கள் விரும்பி அனைவரையும் அழைக்கிறார்கள்.

இனிவரும் 19-06-2010 சனிக்கிழமை மாலை 5மணிக்கு கனடா ஸ்ரீ ஐயப்பன் இந்து ஆலய கலாச்சார மண்டபத்தில் நடைபெறும் வைபவத்தில் அனைத்து தமிழ் மக்களும் கலந்து கொள்ள வேண்டுமாய் அழைக்கின்றோம்.

TENNIS LESSONS

By Australian certified, U.S trained professional former Srilankan Davis cup player and Coach catering for scarborough, Markham & Richmond Hill Areas. 36 years of experience.
Group Classes & Private Coaching Possible



David Selvadurai : 416.495.1277

THE DELFT PEOPLE CULTURAL ORGANIZATION OF CANADA
நெடுந்தீவு மக்கள் ஒன்றியம் கனடா

நெடுந்தீவு மக்கள் ஒன்றியத்தின் வருடாந்த ஒன்று கூடலும்.
தாயகப்பேரிழப்பில் உயிர்நீத்த உறவுகளின் நினைவு கூறலும்.

காலம்: Saturday, June.19.2010 நேரம்: 9:30am
இடம்: Morningside Park Area 3 & 4,
(Morningside & Ellesmere)Toronto, Ontario

(மெய்வல்லுனர் விளையாட்டுப்போட்டிகளும்)
நெடுந்தீவு மக்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அழைக்கின்றார்கள் நிர்வாகிகள்
Contact Us (தொடர்புகளுக்கு)
K. Thurai (416)890-5273 S. Para (416)939-5844
S. Kumar (416)454-1157 K. Thava (416)996-0708
Email: DPOC@live.com

யா/புங்குடுதீவு ஸ்ரீ கணேச மகா வித்தியாலய

# நூற்றாண்டு விழா

## 1910 - 2010








Centenary Celebration

# கணேச சங்கமம்



- ★ மங்கள வாத்திய இசை
- ★ நடன நாட்டிய நிகழ்வுகள்
- ★ இன்னிசை விருந்து
- ★ திரையிசை நடனங்கள்
- ★ நகைச்சுவை நிகழ்வு
- ★ நாடகம்
- ★ மெல்லிசை விருந்து



இன்னும் பல சுவைமிக்க நிகழ்ச்சிகளோடு
உங்களை மகிழ்விக்க,

**ஐயப்பன் ஆலய மண்டபம்**
635 Middlefield Rd
Middlefield Rd / Finch
Scarborough, ON.

**JUNE 19**
5:00 Pm
Saturday

கனடா வாழ் புங்குடுதீவு மக்கள், புங்குடுதீவு ஸ்ரீ கணேச மகாவித்தியாலய பழைய மாணவ மாணவிகள், ஆசிரியர்கள், அதிபர்கள் மற்றும் நலன்விரும்பிகள் அனைவரையும் இந்நிகழ்வில் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**அனுமதி இலவசம்**

**தொடர்புகளுக்கு:**
**905-497-6675 / 416-742-3260 / 647-300-0417**

நூற்றாண்டு விழா குழுவினர் - கனடா

# ஆவுடையார்...

22ஆம் பக்கத்தொடர்ச்சி

சென்னிப் பத்து, திருவார்த்தை, திருவெண்பா, பண்டாயநான்மறை உட்பட திருவாசகத்திலுள்ள 51 பகுதிகளுள் 20 பகுதிகள் இத்தலத்தில் பாடப்பெற்றவைதான். இங்குள்ள திருவாசகக் கோயிலில் திருவாசக ஓலைச்சுவடியே இருப்பது விசேடம்.

இக்கோயிலின் கொடுங்கைகள் (தாழ்வாரம்) மிகப் பிரசித்தமானவை. மண்டபங்களில் முறுக்கு கம்பிகளால் வேயப்பட்டது போல கொடுங்கைகள் அமைக்கப்பட்டுள்ளது. ஐந்து கம்பிகள் இணைக்கப்பட்டு, அதில் ஆணி அடிக்கப்பட்டது போல இவை இருக்கிறது. பழங்காலத்தில், கோயில் கட்டுவதற்காக ஸ்தபதிகள் உடன்படிக்கை எழுதும்போது, 'ஆவுடையார்கோயில் கொடுங்கைகளைப் போலத் தங்களால் அமைக்க முடியாது' என்பதைக் குறிக்கும் வகையில், 'ஆவுடையார்கோயில் கொடுங்கைகள் நீங்கலாக' என்று எழுதும் வழக்கம் இருந்ததாம். இதுதவிர தியாகராஜர் மண்டபத்தில் உள்ள கல்சங்கிலி, பஞ்சாட்சர மண்டபத்திலுள்ள சப்தஸ்வர தூண்கள், பெரிய மண்டபத்தில் உள்ள இரண்டு தூண்களில் ஆயிரம் சிறிய தூண்கள் பொறிக்கப்பட்டுள்ள அதிசயம் ஆகியவை நிச்சயம் பார்க்க வேண்டியது. ஒவ்வொன்றாகப் பார்ப்போம்.

கலாத்வா, தத்துவாத்வா, புவனாத்வா, வர்ணாத்வா, பதாத்வா, மந்திராத்வா முதலிய ஆறு ஆத்வாக்களைக் குறிக்கும் வகையில் இத்திருக்கோயிலுக்கு ஆறு வாயில்கள் உள்ளன. கனகசபை, நடனசபை, தேவசபை, சத்சபை, சித்சபை, ஆநந்த சபை என ஆறுசபைகளும் உள்ளன. இதில், கனகசபை 81 தீபங்களாலும், நர்த்தனசபை 224 புவன தீபங்களாலும், தேவசபையில் ஏகாதச மந்திரங்கள் 11 தீபங்களாகவும், சத்சபை 36 எண்ணுடைய தத்துவத் தீபங்களாலும், சித்சபை அகர முதலான 51 எண்ணுடைய தீபங்களாலும், ஆனந்தசபை (கருவறை) பஞ்ச கலைகள் என்னும் தீபங்களாலும் அலங்கரிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு ஆவுடையார் கோயிலில் தத்துவம் அனைத்தும் தீப வடிவங்களாகவே வைத்துக் காட்டப்பட்டுள்ளன.

ஆவுடையார்கோயில் முன் மண்டபத்தின் மேற்புறக் கொடுங்கையின் மேலே ஒரு குரங்கும் (கீழ் நோக்கியவாறு), ஒரு உடும்பும் (மேல் நோக்கியவாறு) செதுக்கப்பட்டிருக்கிறது. அலைபாயும் குரங்கு மனத்தை அடக்கி, ஆத்மநாதரின் திருவடியில் உடும்புப் பிடிபோல நிறுத்தி, அவருடைய திருவடிகளைச் சிக்கென பிடித்து உய்வுபெற வேண்டுமென்னும் எண்ணத்துடன் உள்ளே செல்லவேண்டும் என்று உணர்த்துவதாக இது உள்ளது என்கிறார்கள்.

அடுத்துள்ள பெரிய மண்டபம், ரகுநாத பூபால மண்டபமாகும். அற்புதமான வேலைபாடுடைய பெரிய மூர்த்தங்களைக் கொண்டது. இம்மண்டபம் பாலவனம் ஜமீன்தாரர்களின் முன்னோர்களான வேதவனப் பண்டாரம், ஆறுமுகப் பண்டாரம் ஆகியோர்களால் 330 ஆண்டுகளுக்கு முன் கட்டப்பட்டது என வரலாறு கூறுகிறது. ரகுநாத பூபால மண்டபத்தின் இடதுபுறத்தில் சிவானந்த மாணிக்கவாசகர் சந்நிதி உள்ளது. இம்மண்டபத்தில் வலமாக வரும்போது சுவரில் காணப்படும் வண்ண ஓவியங்கள் மிகப் பழமையானவை. அழிந்த நிலையில் உள்ள அவ்வோவியங்களில் ஒன்று, ஷஅண்டரண்ட பட்சியின் வண்ண ஓவியம். இப்பறவை இரண்டு யானைகளை ஒருசேரத் தூக்குமளவுக்கு வலிமையுடைய பறவையாகத் திகழ்ந்ததாகச் சொல்லப்படுகிறது.

அடுத்துள்ளது ராஜகோபுரம். முன்பு ஐந்து நிலைகளாக இருந்ததை மாற்றி ஏழுநிலைகளாக்கித் திருப்பணி செய்யப்பட்டுள்ளது. ராஜகோபுர வாயிலின் இடப்பக்கத்தில் - சுவரில் - வள்ளல் பச்சையப்பர் இக்கோயிலுக்கு வைத்துள்ள தர்மத்தைப் பற்றிய சாசனக் கல்வெட்டு பதிக்கப்பட்டுள்ளது.

உள்கோபுரத்தை கடந்து சென்றால் அடுத்துள்ளது பஞ்சாட்சர மண்டபம். இதுதான் கனகசபை. முந்நூறு ஆண்டுகட்கு முன் கட்டப்பட்டதாம். கொடுங்கைகளை அழகாகப் பெற்றுள்ள இம்மண்டபத்தின் மேற்புறச் சுவரில் எண்ணற்ற புவனங்களைக் குறிக்கும் அட்சரங்கள் செதுக்கப்பட்டுள்ளன. இங்குள்ள தூண் ஒன்றில் இருதலைகளும் ஒருடலும் கொண்டு பின்னிய நிலையிலுள்ள பாம்பும் சாமுத்திகா லட்சணத்தைக் காட்டும் பெண் முதலான சிற்பங்களும் உள்ளன. இங்குள்ள தூண் ஒன்றில் நவக்கிரகங்கள் கல்லில் அடித்து வைக்கப்பட்டுள்ளன. தனியாக இக்கோயிலில் நவக்கிரகங்கள் இல்லை. சந்நிதி மேற்புறத்தில் 27 நட்சத்திர வடிவங்களும் கல்லிற் செதுக்கப்பட்டுள்ளன. சந்நிதியில் வெளிச்சுவரில் வண்ண ஓவியத்தில் ஸ்பரிச - உபதேச - திருவடி தீட்சை ஓவியங்கள் உள்ளன. நிவர்த்திகலை, பிரதிபாகலை, வித்யாகலை, காந்திகலை, சாந்திதீதாகலை ஆகிய பஞ்சகலைகளையும் பஞ்சாட்சர மண்டபத்தின் மேல் பகுதியில் சிற்ப வடிவில் காணலாம்.

யாராவது ஒருவரை ஏமாற்றினால், "எனக்கே தண்ணி காட்டுறியா?" என்று சொல்வது வழக்கம். இந்த 'வழக்கு' தோன்றிய இடம் ஆவுடையார் கோயில்தான். இப்பகுதி மக்களின் நிலத்தை குறுநில மன்னன் ஒருவன் பறித்துக் கொண்டான். அவர்கள் பேரரசரிடம் முறையிட்டனர். மன்னனோ, அந்த நிலம் தன்னுடையது என்று வாதாடினான். அது மக்களுடையது என்பதற்கு ஏதாவது சாட்சி இருக்கிறதா என்று கேட்டான். மன்னனின் செல்வாக்கிற்கு முன்னால், எதுவும் செய்யமுடியாத மக்கள் சிவபெருமானை நாடினர். உண்மையை வெளிக்கொணர உன்னைத் தவிர வேறு சாட்சியில்லை என மனமுருகி வணங்கினர். சிவன் பேரரசரிடம் மாறுவேடத்தில் சென்றார். குறுநில மன்னனை அழைத்து, "மன்னா! உன் நிலம் எப்படிப்பட்ட தன்மையுடையது?" என்று கேட்டார். அதற்கு மன்னன், "அது வறண்ட பூமி" என்றான். சிவன் மறுத்தார். "பேரரசரே! அது செழிப்பான நிலம் என்பதற்கு என்னிடம் ஆதாரம் உண்டு. நிலத்தை தோண்டுங்கள். தண்ணீர் வரும்" என்றார். அதன்படியே நிலத்தை தோண்ட நீர் வெளிப்பட்டது. குறுநிலமன்னன் தலை குனிந்தான். மக்களிடமே நிலத்தை ஒப்படைத்தார் பேரரசர். சிவன் தண்ணீர் காட்டிய அந்த இடம், இக்கோயிலில் இருந்து சற்று தூரத்தில் இருக்கிறது. அப்பகுதியை, 'கீழ்நீர்காட்டி' என்று சொல்கிறார்கள். இந்த நிகழ்ச்சியை, பஞ்சாட்சர மண்டபத்தின், மேல் விதானத்தில் ஓவியமாக வரைந்துள்ளனர்.

அடுத்தது நிருத்த மண்டபம், நடனசபை. நர்த்தன சபை என்றும் அழைக்கப்படுகிறது. பதஞ்சலி வியாக்ரபாதர்கள் பெருமானிடம் கருணையை வேண்டிப் பெற்ற இடம். இதிலுள்ள குறவன், குறத்தி சிலைகள் அற்புதமான கலையழகு கொண்டவை. கை விரல் ரேகைகள் கூடத் தெளிவாகத் தெரியும் வண்ணம், தலைக்கொண்டை முதல் ஒவ்வொரு உறுப்பையும் செதுக்கியுள்ள கைவண்ணம் ஆச்சரியப்படத்தக்கது. வலதுபுறம் காட்சித்தரும் வேடன் வேடுவச்சி சிற்பங்கள் அற்புதமான கலையழகு கருவூலங்கள், குறிப்பாக, வேடனின் நளினத் தோற்றம்.

வாயிலைக் கடந்து உட்புகுந்தால் அடுத்து வருவது தேவசபை. சுந்தர பாண்டிய மன்னனால் புதுப்பிக்கப்பட்டதால் சுந்தர பாண்டிய மண்டபம் எனவும் சொல்கிறார்கள். சூரனிடம் பயந்த தேவர்கள் தவஞ்செய்த இடமாக இச்சபை சொல்லப்படுகிறது. இடப்பால் பிரகாரத்தில் மாணிக்கவாசகர் உற்சவ மூர்த்தி சந்நிதி உள்ளது. இப்பெருமானைத் தரிசித்து விட்டுத்தான் மூலவரைத் தரிசிக்க செல்ல வேண்டும் என்பது இக்கோயில் மரபு. இங்கு சுவாமியைப் போலவே அம்பாளுக்கும் தெற்கு நோக்கிய சந்நிதி உள்ளது. சுவாமியைப் போலவே யோகாம்பாளும் அருவம்தான். சந்நிதியில் திருமேனி இல்லை. 100 இதழ்கள் கொண்ட தாமரையாகிய பீடத்தில் யோகாம்பாளின் திருவடிகள் மட்டுமே தங்கத்தாலான யந்திர வடிவமாக உள்ளன. தட்சனின் யாகத்திற்கு சிவனை மீறிச் சென்றதற்கு மன்னிப்பு பெறுவதற்காக, அம்பாள் இத்தலத்தில் அரூப வடிவில் தவம் செய்தாள். எனவே, இங்கு அம்பாளுக்கும் விக்ரகம் இல்லை என ஸ்தல புராணம் சொல்கிறது. எனவே, அவள் தவம் செய்த போது, பதிந்த பாதத்திற்கு மட்டுமே பூஜை நடக்கிறது. இந்த பாதத்தை பக்தர்கள் தரிசனம் செய்வதற்காக, கண்ணாடியில் பாதம் பிரதிபலிக்கும்படி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அம்பாள் சன்னதி எப்போதும் அடைத்தே இருக்கும் என்பதால், சன்னதி முன்புள்ள ஜன்னல் துவாரம் வழியாகத்தான் பாதத்தை தரிசிக்க முடியும். அடுத்த தரிசனமாக தல விசேடக் காட்சியான குருந்தமர உபதேசக் காட்சி, கல்லில் வடித்துள்ள குருந்தமரம், கீழே இறைவன் குரு வடிவில் அமர்ந்திருக்க, எதிரில் மாணிக்கவாசகர் பவ்வியமாக இருந்து உபதேசம் பெறும் காட்சி வடிக்கப்பட்டுள்ளது.

அடுத்த சபை, சத்சபை. இங்குள்ள விசாலமான கல்மேடையில்தான் சுவாமிக்கு கைபடாத (புழுங்கல் அரிசி) அன்னம் நிவேதிக்கப்படுகிறது. இதனால் இதற்கு அமுத மண்டபம் என்றும் பெயர்.

அடுத்தது, சித்சபை, இது பூஜை செய்வோர் நிற்குமிடம். ஐந்து (பஞ்ச) கலைகள் தீபங்களாக காட்சி நல்குமிடம்.

அடுத்தது, ஆநந்த சபை. பரமசுவாமியான ஆத்மநாதர் எழுந்தருளியுள்ள கருவறை. குருவருள் கொலு வீற்றிருக்குமிடம். இங்கு, ஆவுடையார் அருவமாகக் காட்சியளிக்கிறார். தங்கத்தாலான குவளை ஆவுடையாரின் மேலே சார்த்தி வைக்கப்பட்டுள்ளது. ஆவுடையாரின் பின்னால் 27 நட்சத்திரங்களைக் கொண்டதான திருவாச்சி உள்ளது. அதன்மேலே சிவப்பு, வெள்ளை, பச்சை என மூன்று விளக்குகள் உள்ளன. இதில் சிவப்பு அக்கினியையும், வெண்மை சூரியனையும், பச்சை சந்திரனையும் குறிக்கிறது. சுவாமிக்கு முன்னால் இரு தூங்கா விளக்குகள் சுடர்விடுகின்றன.

அடுத்தது, முத்து விநாயகர் மண்டபம். இந்த மண்டபத்தின் மேற்கூரையில் தொங்கும் கற்சங்கிலிகள் கண்களை வசீகரிக்கக்கூடியவை. கொடுங்கைகளின் அற்புதத்தை இம்மண்டபத்திலும் காணலாம். எவ்வளவு கனமான கருங்கல்லை எந்த அளவுக்கு மெல்லியதாக இழைத்து, எத்தனை எத்தனை மடிப்புக்களாகக் கொண்டு வந்துள்ளார்கள் என்பதைக் கண்டு வியப்படைவதற்காக இடப்பக்கத்தின் கோடியில் இரண்டு மூன்றிடங்களில் துளையிட்டு காட்டியுள்ளார்கள். இங்கு இரண்டாம் பிரகாரத்தில் உள்ள தில்லை மண்டபத்தில் அர்ஜுனனுக்கு பாசுபதம் கொடுத்த சிவன், அம்பாள் சிற்பமும், புலையன், புலத்தி வேடத்தில் வந்த சிற்பமும் உள்ளது. இதில் அம்பாள் கழுத்தில் சங்கிலி, கையில் சுருள் வளையல் அணிந்து, பையுடன் இருக்கிறாள்.

ஆவுடையார் கோயிலில் 24 தீர்த்தங்கள் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. அவை: அக்கினி தீர்த்தம், ஆத்ம கூபம், வேத தீர்த்தம், நாராயண தீர்த்தம், தேவ தீர்த்தம், வாயு தீர்த்தம், மானவ தீர்த்தம், காலாக்னிருத்ர தீர்த்தம், ரிஷி தீர்த்தம், ஆசுர தீர்த்தம், காந்தர்வ தீர்த்தம், இந்திர தீர்த்தம், பராசர தீர்த்தம், சூரிய தீர்த்தம், சந்திர வாவி, வைதிக தீர்த்தம், லட்சுமி தீர்த்தம், சரஸ்வதி கூபம், பக்த தீர்த்தம், பாண்டவ தீர்த்தம், கௌதம தீர்த்தம், தொண்டர் குழி, கீழ் நீர், சுவேதநதி என்னும் வெள்ளாறு என்பவாகும்.



## எப்படி செல்வது? எங்கே தங்குவது?

புதுக்கோட்டை மாவட்டத்தில் அறந்தாங்கிக்கு அருகில் உள்ளது, ஆவுடையார்கோயில். அறந்தாங்கி - மீமிசல் பாதையில், அறந்தாங்கியிலிருந்து 14 கி.மீ. தொலைவில் உள்ளது. திருச்சியிலிருந்து புதுக்கோட்டை அறந்தாங்கி வழியாகவும், தஞ்சையிலிருந்து பட்டுக்கோட்டை அறந்தாங்கி வழியாகவும், மதுரையிலிருந்து திருப்பத்தூர், காரைக்குடி, அறந்தாங்கி வழியாகவும் இத்தலத்திற்கு வரலாம். காலை 6 மணி முதல் 12 மணி வரையும், மாலை 4 மணி முதல் இரவு 9 மணி வரையும் கோயில் திறந்திருக்கும். செட்டிநாட்டுப் பகுதி என்பதால், ஆவுடையார்கோயில் சிறிய ஊராக இருந்தாலும் சுவையான உணவுக்கு பிரச்னையில்லை. ஆனால், நவீன வசதிகொண்ட தங்கும்விடுதிகள் கஷ்டம். எனவே, தங்கி தரிசிக்க விரும்புபவர்கள் புதுக்கோட்டையில் தங்கலாம்.

தொடர்ச்சி 34ஆம் பக்கம்

“டொக்டர் உங்களோடை கொஞ்சம் பேசவேணும்” கணவனை ஓரக்கண்ணால் பார்த்தபடியே திலகம் டாக்டரைக் கேட்டாள். குரல் தழுதழுத்தது.

“தாராளமா” மகாதேவன்

நேரடியாகவே திலகம் விடயத்திற்கு வந்தாள். “டொக்டர்! இந்த.... ஒப்பரேசனை ...கொஞ்சநாள்.... தள்ளிப் போடலாமோ?” வார்த்தைகள் தயங்கித் தயங்கி வந்தன. அவளின் குளமான கண்கள் இடைக்கிடை கணவனையும் பார்த்துக் கொண்டன.

நாயகம் ஏதும் பேசாமல் இருந்தார்.

“கொஞ்சம் பொறுத்து என்றால்!” மகாதேவனுக்கு புரியவில்லை.

“பிள்ளைகளுக்கு ஒரு எட்டு அல்லது ஒன்பது வயது வரும்வரை பொறுத்தபின்....”

மகாதேவனுக்கு உள்ளூரக் கொஞ்சம் கோபம் வருமாப்போல் இருந்தது. ஆனாலும் அதனை வெளிக் காட்டவில்லை. இந்த ஒப்பரேசனுக்காக மகாதேவன் பட்ட கடின உழைப்பு யாருக்கும் தெரியாது. தனக்குப் பெயர் வரவேண்டும் என்பதற்காக அல்ல. இதை ஒரு வைத்தியச் சவாலாக எடுத்து, தனது சொந்த நாட்டிலேயே அதனைச் சாதிக்க வேண்டும் என நினைத்து செயற்பட்டிருந்தார். எத்தனை சோதனைகள். எத்தனை தடங்கல்கள். எத்தனை நாட்கள் தொடர்ந்து கண்முழிப்பு. இன்னமும் என்னென்னவோ தொல்லைகள் எல்லாம் கடந்து, அது மாத்திரமல்ல,

8 அல்லது 9 வயதின் பின்னராக இந்த அறுவை சிகிச்சையில் உள்ள சிக்கல்கள் அதிகம். அதையும் விளங்கப்படுத்த வேண்டி வந்துவிட்டது. “நீங்கள் ஏன் இப்படிக் கேட்கின்றீர்கள் என்று எனக்கு விளங்கவில்லையே! நல்ல தைரியமாகவும் ஒத்துழைப்புடனும்தானே இருந்தீர்கள்....” என மகாதேவன் கேட்க,

# இன்னொரு... 07

திலகம் பெரிதாக அழத் தொடங்கிவிட்டாள்.

நாயகம் காலையில் நடந்த சம்பவத்தினைக கூறினார். நீலகண்ட கணியரின் கணிப்புப் பற்றியும் ஊரில் அவரது கணிப்பிற்கு இருக்கும் மதிப்பினைப் பற்றியும் நாயகம் கூற, மகாதேவன் சிரித்து விட்டார்.

“நான் சாத்திரங்களைக் குறை கூறுகின்றேன் என்றோ அல்லது தப்பாக மதிப்பிடுகிறேன் என்றோ நினைக்க வேண்டாம். நீலகண்ட கணியர் ஒப்பரேசன் செய்யவேண்டாம் என்று உறுதியாகச் சொல்லவில்லைத்தானே! பிறகேன் நீங்கள் இருவரும் அதையிட்டுப் பயப்படுகின்றீர்கள்?”என்றவர் தொடர்ந்தார்.

**தொடர்கதை -** பரபரப்பு, மர்மம், வியப்பு என்பன நிறைந்த இக்கதையில் வரும் பெயர்கள் சம்பவங்கள் அனைத்தும் கற்பனையே

## ◇ சி.வி. நாதன் ◇

“இந்த ஒப்பரேசனைப் பொறுத்த மட்டில் இந்த வயதில் செய்வதுதான் மிகப் பொருத்தம். பிள்ளைகளின் உடல்வாகு, மூளையின் தாங்கும் தன்மை, அந்தச் சிக்குண்டிருக்கும் நரம்புகளின் இளம்தன்மை என்பன எல்லாம் ஒன்றாகவே நல்ல தேறும் தன்மையைக் கொண்டுள்ளன. எட்டு வயதின் பின்னராக இந்த ஒப்பரேசனைச் செய்தால்தான் சிக்கல்கள் அதிகம். அதிலும் கூடுதலாப் பார்த்தால் நரம்புகள் கொஞ்சம் முறுக்கேறி வலிமை பெற்றுவிடும். வலிமை பெற்ற நரம்புகளைப் பிரித்தெடுப்பது அதுவும் நாலு மணித்தியாலங்களுக்குள்ளாக என்பது இலகுவான காரியமில்லை. அதுமாத்திரமில்லாது வெட்டிய இன்பனின் நரம்பை மீண்டும் ஒன்றிணைப்பது கூட இந்த வயதில் செய்வது போலை இலகுவாகச் செய்யமுடியாது”

“ஆக மொத்தத்தில் இந்த ஒப்பரேசனுக்கு பொருத்தமான காலம் இதுதான். அமெரிக்காவில் இருந்து டொக்டர் றொபேர்ட்டும் இங்கு வருவதற்காக விமானம் ஏறிவிட்டார். இப்பொழுதுதான் அந்தச் செய்தியும் வந்தது” என்ற மகாதேவன் தொடர்ந்தார்.

“அதைவிட இன்னொரு விடயமும் கவனத்திலை எடுக்கவேண்டும். இப்ப இரண்டு வயதுதானே! இருவரது மூளைகளும் தன்னுடன் இன்னொருவர் இணைந்திருப்பதை இப்பதான் அறிய ஆரம்பித்து அதற்கு ஒப்ப தன்னை ஆயத்தம் செய்து கொண்டு இருக்கும். எட்டு வயது வந்ததும் மூளைகள் இரண்டுமே தம்மை நல்ல தயார் நிலையில் ஆக்கிக்கொண்டு இருப்பினம். இருவரதும் மூளைகள் தம்முடன் ஒருவர் இணைந்துள்ளார் என்பதை நன்கு அறிந்து அதற்குத் தக்கதாய்த் தன்னைச் சரி செய்து கொண்டு நடக்கும் தன்மையைக் கொண்டிருக்கும். ஒப்பரேசனின் பின்னராக இருவரது மூளைகளும் தன்னுடன் ஒட்டியிருந்த ஆள் எங்கே என்று தேட, ஒருவேளை அது கூடப் பிரச்சனையைத் தந்துவிடலாம்.” மகாதேவன் இன்னமும் என்னென்னவோ கூறிக் கொண்டே போனார்.

திலகத்திற்கும் நாயகத்திற்கும் தலை சுற்றுவது போல இருந்தது.

மகாதேவனின் அறிவுரைகள், நீலகண்டரின் கணிப்பு என இரண்டுமே அவர்களை அங்கு இங்கு என இழுத்துச் செல்ல, கிட்டத்தட்ட 3 மணித்தியாலங்களை மகாதேவனின் அறையில் தொலைத்தபின்னர்,

அறுவை சிகிட்சைக்கு ஒப்புதல் அளித்துக் கைெயொப்பமிட்டார்கள். - இன்னமும் வரும்


Served Over 15 Years In Toronto
Now in Richmond Hill



NTE AUTO INC.
New Trade Engineering

MS7 Quality Used Car Sales


346 Newkirk Road, #16, Richmond Hill Tel: 905-770-2575
416-399-6640

சகல விதமான வாகனங்கள் திருத்தும் நிலையம்
தற்போதைய விசேட கழிவு சேவைகள் சில....

எங்களுடன் தொடர்பு கொண்டு Towing செய்து வருபவர்களுக்கு விசேட கழிவு உண்டு.

| | |
|---|---|
| Front Brake Service From . . . . . . . . | $109. 95 |
| Rear Brake Service From . . . . . . . . . | $109.95 |
| Transmission Service From . . . . . . . | $ 99.95 |
| Lube & Oil Service From . . . . . . . . . | $ 29.95 |
| Tire Change & Balancing From . . . . | $ 14.95 |
| Engine Tune up from . . . . . . . . . . . | $159.95 |
| Air Conditioning Service From . . . . | $ 49.95 |
| Computer Scanning from . . . . . . . . | $ 39.95 |

We do BMW Service & Maintenance




Many more special, please contact for more information.

# நிறைவாக நிகழ்ந்த ஒரு விமர்சன அரங்கு

ஸ்ரீரஞ்சனி விஜேந்திராவின் 'நான் நிழலானால்' எனும் சிறுகதைத் தொகுப்பின் விமர்சனக் கூட்டம் ஒன்று East York Council Chambers இல் யூன் மாதம் 6ம் திகதி ஞாயிற்றுக்கிழமை உதயன் ஆசிரியர் லோகேந்திரலிங்கத்தின் தலைமையில் நிகழ்ந்தது. இந்திரா பார்த்தசாரதி அவர்களின் தலைமையில் தமிழிச்சி தங்க பாண்டியனால் 'நான் நிழலானால்' ஏப்ரல் மாதம் 18 ம் திகதி







## - நமணன் -

சென்னையில் வெளியிடப்பட்டது என்ற திரு. விஜேந்திரா வின் அறிமுகத்துடன் ஆரம்பமான இந்த விமர்சன அரங்கில் பேசிய தலைவர் தன் தலைமை உரையில் குறுகிய காலத்தில் நல்ல பெண் எழுத்தாளர் என இனம் காணப்பட்ட ஸ்ரீரஞ்சனியின் எழுத்தின் நோக்கத்தை அறிய கதைகளை விமர்சகர்களுக்கூடாக மட்டும் பார்க்காமல் ஒவ்வொருவரும் அவற்றை தாமே முழுமையாக வாசித்துப் பார்ப்பது அவசியம் என்றார். அத்துடன் கூட்டம் சிறிதானாலும் வந்த அனைவருமே இலக்கிய ஆர்வலர் களாகவும் எழுத்தாளர்களாகவும் இருப்பது கூட்டத்துக்கு சிறப்பு சேர்க்கின்றது என விதந்துரைத்தார்.

சபையை தன் சொல் ஆட்சியாலும் அழகான உச்சரிப்பாலும் இனிய குரலாலும் தம் வசப்படுத்தும் ஆற்றல் மிக்க எழுத்தாளர் நவம் சமூக அக்கறை மிக்க படைப்பாளியாக தம்மை இனம் காட்டியிருக்கும் ஸ்ரீரஞ்சனி பேசாப் பொருள்கள் பற்றி எவ்வித ஆபாசம் இன்றி மிக நாகரிகமாகவும் துணிச்சலாகவும் சொல்லியிருக்கிறார் எனப் பாராட்டினார். தொடர்ந்து இவை போன்ற சமூக அக்கறையுள்ள படைப்புக்களே நிலைத்து நிற்கும் என்ற கருத்தையும் சொன்ன நவம் அவர்கள் கதைகளில் பிரச்சாரதொனியைக் குறைத்து வேறுபட்ட உத்தி முறைகளைக் கையாளுவது சிறப்பு என்றும் கருத்துத் தெரிவ-ித்தார். அடுத்ததாகப் பேசிய கவிஞரும் பெண்ணியல் வாதியுமான சுல்பிகா, ஸ்ரீரஞ்சனியின் கதைகள் அகம் சார்ந்த தனி-மனித அவலங்களை, கலாச்சாரப் பிறழ்வை, தாய் - பிள்ளை உறவு முறைகளையே பெரிதும் பேசுகின்றன எனக் குறிப்பிட்டார். தொடர்பாடலினதும் அனுபவப் பகிர்வினதும் முக்கியத்துவத்தை விளக்கிய கவிஞர் சேரன் சிறுகதைகளில் அவற்றை உயிர்துடிப்பாக்கிக் காட்டுவதற்கு ஆங்கில உரையாடல்களை ஆங்கிலத்தில் எழுதுவதா அல்லது அவற்றை தமிழில் உச்சரித்து எழுதுவதா சிறந்தது என ஒரு ஆய்வு தேவை என்றார். நிறைவாக பேசிய கலாநிதி மைதிலி தயாநிதி கலாசார காவிக-ளாகச் சிக்கித் தவிக்கும் பெண்களின் மன உணர்வுகளை, புலம் பெயர் நாடுகளில் பெண்கள் அநுபவிக்கும் துன்பங்கள், ஒடுக்குமுறைகள், என்பவற்றை சொல்லும் ஸ்ரீரஞ்சனியின் கதைகள் ஒரு விடயம் குறித்துப் பொதுவாக ஏற்றுக் கொள்ளபட்ட வாதத்துக்கு எதிர்வாதம் ஒன்றை முன் வைத்துச் சிந்திக்க வைப்பனவாக உள்ளன என்றும் குடும்பத்தை மையமாகக் கொண்ட இவரின் கதைகள் புலம் பெயர் இலக்கியத்திற்கு ஒரு புதிய பரிமாணத்தை அளிக்கின்றன என விமர்சித்தார்.

அதன்பின் சபையிலிருந்து யாழ். பல்கலைக்கழக முன்னாள் விரிவுரையாளர் கணபதிப்பிள்ளை, சிந்தனைப் பூக்கள் பத்மநாதன், கவிஞர் சிவபாலு, எழுத்தாளர் குரு அரவிந்தன், கவிஞர் கந்தவனம், ரஞ்சி கதிர், திரு. தயாநிதி, எழுத்தாளர் ஜெகதீசன், திரு. முத்துலிங்கம், திரு. கதிர்காமநாதன், கவிஞர் முரளி, திரு. ஸ்ரீகதிர்காமநாதன் ஆகியோர் தமது கருத்துக்களைத் தெரிவித்தனர். ஸ்ரீரஞ்சனி யின் கதைகள் தனி மனித வாழ்வுப் பிரச்சைகளை காட்டுவனவே அன்றி அவற்றில் சமுதாயப் பார்வை இல்லை என கவிஞர் கந்தவனம் கூறிய கருத்து தனி மனிதர்களால் ஆக்கப்பட்டதே சமுதாயம் ஒவ்வொரு தனி மனிதப் பிரச்சனையும் சமுதாயப் பிரச்சனையே என்ற மிக ஆரோக்கியமான கருத்தாடலுக்கு வழி வகுத்து சபையை களைகட்ட வைத்தது. பின்னர் ஸ்ரீரஞ்சனியின் நன்றியுரையைத் தொடர்ந்து விமர்சன அரங்கு இனிதே நிறைவேறியது. தினக்குரல், ஞானம், மல்லிகை, யுகமாயினி, காலச்சுவடு, கனடா உதயன் போன்ற பல புகழ்பெற்ற ஊடகங்களில் வந்துள்ள இந்தக் கதைகள் பொன்னாடை, மாலை, ஆசி என எவ்வித ஆடம்பரமுமின்றி உண்மையாக விமர்சிக்கப்பட்டுள்ளன என்ற நிறைவு எல்லோருக்கும் காணப்பட்டது.

# ஆவுடையார்...

32ஆம் பக்கத்தொடர்ச்சி




## வழிப்போக்கன்

இத்திருக்கோயிலில் நாள்தோறும் ஆறுகாலம் மகுடாகமம் உத்தரபாகத்தின்படி ஆத்மநாதருக்கு பூஜைகள் நடைபெறுகின்றன. ஆறு காலங்களிலும் புழுங்கலரிசி நிவேதனம், புழுங்கல் அரிசி நைவேத்யம். சிவன், இத்தலத்தில் குருவாக இருந்து மாணவர்களுக்கு உபதேசம் செய்தபோது, அவரிடம் பயின்றவர்கள் வீட்டிலிருந்து புழுங்கல் அரிசி சாதம், கீரை, பாகற்காய் என எளிய பொருட்களை அவருக்கு கொடுத்தனர். அதனை சிவனும் விரும்பி வாங்கி சாப்பிட்டார். இதன் அடிப்படையில், ஆத்மநாதருக்கு புழுங்கல் அரிசி சாதம்தான் நைவேத்யம் செய்யப்படுகிறது. அடுப்பில் இருந்து இறக்கப்பட்ட சாதத்தை அப்படியே சுவாமி சன்னதிக்கு கொண்டு சென்று, படைக்கல்லில் ஆவி பறக்க கொட்டி விடுகின்றனர். அப்போது சன்னதி கதவுகள் சாத்தப்பட்டு, சிறிதுநேரம் கழித்து திறக்கப்படும். சுவாமி அரூப வடிவானவர் என்பதால், அரூபமாகி விடும் ஆவியுடன் நைவேத்யம் படைக்கப்படுகிறது. மூன்றாம் கால (காலை 11 மணி) பூஜையின் போது மட்டும் தேன்குழல், அதிரசம், வடை, பிட்டு, தோசை, பாயாசம் படைக்கப்படுகிறது. பொங்கலன்று வாழை இலை போட்டு, 16 வகை காய்கறிகளுடன், சர்க்கரைப்பொங்கல், வெண்பொங்கல் மற்றும் கரும்பு படைக்கின்றனர். அர்த்த சாமத்தில் தினமும் சுவாமிக்கு புளியோதரை, எள் சாதம், பால் சாதம், உளுந்து சாதம், பாகற்காய், முளைக்கீரை நிவேதனம் நிவேதிக்கப்படுகின்றன. திருவிழாக் காலங்களில் வழக்கமான மேற்படி நிவேதனங்களுடன் தேன்குழல், வடை, புட்டு, சீயம், அதிரசம், தோசை முதலியவை சிறப்பு நிவேதனமாகும். சுவாமிக்கு நிவேதிப்பதை நாமும் பார்த்து ரசிக்கலாம்.

ஆவுடையார்கோயிலிலுள்ள மண்டபங்களில் கல்வெட்டுக்கள் நிரம்ப உள்ளன. இக்கல்வெட்டுக்கள் மூலம் கோயிலுக்கும் சுவாமிக்கும் விடப்பட்ட நிவந்தங்கள் குத்தகைதாரர்களின் பத்திரங்கள், கும்பாபிஷேகம் நடைபெற்ற விபரங்கள், நிர்வாகச் செய்திகள் முதலியவை தெரிய வருகின்றன.

ஆனித் திருமஞ்சனம், திருவெம்பாவை உற்சவம் ஆகிய இரண்டு திருவிழாக்கள் இக்கோயிலில் மிக முக்கியமானவை. ஆனித் திருமஞ்சனம், பத்து நாட்கள் நடைபெறும். லட்சக்கணக்கான பக்தர்கள் கூடுவர். மாணிக்கவாசகரை முதன்மைப்படுத்தி இத்திருவிழாக்கள் நடைபெறும். மாணிக்கவாசகருக்கு ஈசனே குருவாய் வந்து உபதேசித்த தலம் என்பதால் இந்த தலத்தில் வழிபடுவோர் கல்வி கேள்விக-ளில் சிறந்து விளங்குவதோடு சிறந்த ஞானம் பெற்றவராகத் திகழ்வர் என்பது நம்பிக்கை. தொழில் விருத்தி, உத்தியோக உயர்வு, திருமண வரம், குழந்தை வரம் ஆகியவற்றுக்காவும் இத்தலத்தில் பக்தர்கள் பிரார்த்தித்துக் கொள்கின்றனர்.

இத்திருக் கோயிலுக்குச் சற்றுத் தொலைவில் ஆதிகயிலாயநாதர் கோயில் உள்ளது. மாணிக்கவாசகருக்கு முதல் உபதேசக் காட்சி இத்தனிக் கோயிலில்தான். இக்கோயில் மாணிக்கவாசகருக்கு முன்பிருந்தே உள்ளது என்று சொல்லப்படுகிறது. இப்பகுதிகள் அனைத்தும் ஒரு காலத்தில் காடாக இருந்ததாம். தற்போது ஆதிகயிலாயநாதர் கோயில் உள்ள இடத்தை, வடக்கூர் என்றும், ஆவுடையார்கோயில் உள்ள இடத்தைத் தெற்கூர் என்றும் சொல்கின்றனர். ஆதிகயிலாயநாதர் கோயில் கிழக்கு நோக்கியது, இங்குள்ள சிவகாமி அம்பாள் சந்நிதி தெற்கு நோக்கியது. பராசரர், புலஸ்தியர், அகத்தியர், முதலிய மகரிஷிகள் இங்கிருந்ததாகச் சொல்லப்படுகின்றது.

# Kaalpurush (Memories in the Mist) மூடுபனிக்குள் நினைவுகள்

வங்காளத் திரையுலகம் உலகளவில் பல சிறந்த படங்களை படைத்துள்ளது. வங்காளத் திரையுலகம் புத்தி ஜீவிகளுக்குரியது என்பது பல விமர்சகர்களின் கருத்து. சத்யஜித்திரேயின் பல படங்களை சாதாரண மக்களால் புரிந்து கொள்ள முடியாது. இவரது படங்கள் சாதாரண மக்களைப் பற்றியது. விதிவிலக்காக சியாம் பெனகல், மிருணாள் சென் போன்றவர்களது படைப்புக்கள் உள்ளன. இவர்களது சம கால இயக்குனர்களும், பின்னர் தோன்றியவர்களும் இந்த புத்திஜீவி மட்டத்திலேயே படங்களை படைக்கின்றனர். ரொரண்ரோ சர்வதேச திரைப்பட விழா இன்னும் சில மாதங்களில் நடைபெறவுள்ளது. ஒவ்வொரு ஆண்டும் வங்காளத் திரைப்படங்கள் இவ் விழாவில் திரையிடப்படுகின்றன. Buddhadeb Dasgupta என்ற பெயர் ரொரண்ரோ விழாவிற்கு பொதுவானது. இவர் இயக்கிய பல படங்கள் ரொரண்ரோவில் திரையிடப்பட்டுள்ளன. சில ஆண்டுகளுக்கு முன்னர் ரொரண்ரோ விழாவில் திரையிடப்பட்ட படமே 'மூடுபனிக்குள் நினைவுகள்'. 2006 ம் ஆண்டு இந்தியாவின் சிறந்த திரைப்படமாக தேர்வு செய்யப்பட்டது.

அண்மைக் கால வங்காளத் திரைப்படங்கள் மத்திய-மேல் தட்டு வர்க்கத்தினர்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள கலாச்சார, பண்பாட்டு மாற்றங்களை பதிவு செய்கின்றன. இந்த மாற்றங்கள் புலம் பெயர் சமூகத்தில் கூட ஏற்படவில்லை. புலம்பெயர் இரண்டாம் சந்ததியிடம் இவ்வாறான மாற்றங்கள் உள்ளன.

இப்படத்தின் கதை சொல்லும் உத்தி வித்தியாசமானது. ராகுல் போசுக்கும் சமீரா ரெட்டியும் காதல் திருமணம் செய்து கொண்ட தம்பதிகள். இவர்களுக்கு இரு குழந்தைகள். ராகுலுக்கு குழந்தைகளின் மீது அளவு கடந்த பாசம். ராகுலின் வாழ்க்கை பல தோல்விகளுடையது. இதனை இவரது மனைவியும் இடைக்கிடை சுட்டிக் காண்பிப்பார். சமீரா ரெட்டி ஓர் எழுத்தாளர். இவரது கட்டுரைகள் பல பத்திரிகையில் வெளிவந்துள்ளன. இவருக்கு ஒரு அண்ணன் அமெரிக்காவில் உள்ளார். அண்ணனின் அழைப்பை ஏற்று சமீரா செல்கின்றார்.

இப்பொழுது மற்றொரு கதை தோன்றுகின்றது. படத்தின் ஆரம்பத்தில் ஒரு வயது முதிர்ந்தவர் ராகுலை பின் தொடர்ந்து வருகின்றார். அந்த முதியவர் ஒரு வயதான பெண்ணை கிராமத்தில் சந்திக்கின்றார். அவர்களுக்கிடையிலான உரையாடல் அவர்கள் கணவன் மனைவி என உறுதிப்படுத்துகின்றது. அதே சமயம் இவர்கள் நீண்ட கால இடைவெளியின் பின்னர் சந்திக்கின்றனர் என்பதும் உறுதியாகின்றது. இவர்களிடையே ஏன் இந்த பிரிவு? வயது முதிர்ந்தவர் மிதுன் சக்கரவர்த்தி. அவரது மனைவி லபோனி சாகர். இவர்கள் அன்பான அந்நியோயமான தம்பதிகள். மிதுன் ஓர் வைத்தியர். இவர்கள் வாழும் கிராமத்திற்கு ஒரு நாடக குழு வருகின்றது. இக் குழுவில் உள்ள நடிகை சுடிபிதா. சுடிபிதாவும், மிதுனும் முன்னாள் காதலர்கள். சுடிபிதா, மிதுன் தனிமையில் உள்ள போது ஒரு நாள் மிதுனை நெருங்கி 'ஒரு நாள் நான் தனிமையில் உள்ள போது நீங்கள் வீட்டிற்கு வந்து என்னுடன் நெருக்கமானீர்கள். அன்று நான் உங்களுடன்



உறவு கொண்டிருந்தால், இன்று எனக்கு இந்த நிலைமை வந்திராது' எனக் கூறி முத்தமிட முயற்சிக்கும் பொழுது, மிதுனின் மனைவி லபோனி கண்டுவிடுகின்றார். இதன் பின்னர் லபோனி தனது குழந்தையுடன் மிதுனை பிரிந்து சென்றுவிடுகின்றார். இந்தப் பிரிவின் பின்னர் நீண்டகாலத்தின் பின்னர் இவர்கள் சந்திக்கின்றனர். அப்பொழுது தந்தையின் மீது ஏற்பட்ட வடு மகனை தந்தையிடமிருந்து விலத்திவிடுகின்றது.

சமீரா அமெரிக்கா சென்ற பின்னர், ராகுல் குழந்தைகளுடன் தாயிடம் வருகின்றார். தாய் லபோதினிக்கும் ராகுலுக்குமான உறவு மிக நெருக்கமானது. தாய் தந்தையை சந்தித்ததை தெரிவிக்கின்றார். ராகுல் எதிர்பாத்த வேலை உயர்வு ராகுலுக்கு கிடைக்கவில்லை. இதனால் ராகுல் கோபமடைந்தாலும் தொடர்ந்து வேலை செய்கின்றார். அமெரிக்கா சென்ற சமீரா தொடர்ந்து பயணக் கட்டுரைகளை எழுதுகின்றார். இவை அனைத்தும் சமீரா விடியோவில் பார்த்தவை. நேரில் பார்த்தது போல எழுதுகின்றார்.

ராகுல் ஒரு நாள் தந்தையை பேரூந்தில் சந்திக்கின்றார். இவர்கள் இருவரும் பரஸ்பரம் அறிமுகப்படுத்துகின்றனர். பல விடயங்களை கதைக்கின்றனர். நினைவுகளை மீட்டுகின்றனர். திடீரென மிதுன் காணாமல் போய்விடுகின்றார்.

ஊர் திரும்பும் சமீரா எனக்கு வேறு காதலன் உண்டு எனக் கூறுகின்றார். பிள்ளைகளின் தந்தையும் அவரே என மேலும் கூறுகின்றார். அமைதியாக கேட்டுக் கொண்டிருந்த ராகுல் 'எனக்கு இது பல காலங்களுக்கு முன்னரே தெரியும்' எனக் கூறுகின்றார். இவர்கள் வெறும் அறைத் தோழர்கள் போலவே நீண்ட காலம் வாழ்ந்து வந்துள்ளனர். சமீரா, ராகுல் ஒரு மேல் தட்டு வர்க்க நிர்வாகியாக வந்து அந்த வர்க்கததை பிரதிநிதிப்படுத்த வேண்டும் என எதிர்பார்க்கின்றார். அவரது எதிர்பார்ப்புக்களுக்கு ஏற்ப ராகுல் இல்லை.



ராகுலின் தந்தை திடீரென தற்கொலை செய்து விடுகின்றார். ராகுல் சமீராவின் குழந்தைகளுடன் தொடர்ந்து வாழ்கின்றார். உணமையில் ராகுலும் லபோதினியும் மிதுனை தேடும் பொழுது மிதுன் ஒரு விபத்தில் மிதுன் இறந்து விடுவது தெரிகின்றது. இருவருக்கும் ஏற்படும் குற்றஉணர்வு மிதுன் அவர்களது வாழ்வில் ஒவ்வொரு நாளும் வருவது போல் மாயையை ஏற்படுத்துகின்றது. படத்தில் தோன்றும் மிதுன் ஒரு ஆவியே. படம் முடியும் பொழுது படம் மீண்டும் ஆரம்பமாகின்றது.

படத்தில் ஆரம்பத்தில் இருந்து இருவர் வந்து போவர். ஒரு வயது முதிர்ந்தவர் புல்லாங்குழலுடன் சிறுவனுடன் வருவார். இவர்கள் முதலில் கிராமத்திலும் பின்னர் நகரத்திலும் வருவார்கள். இவர்களது தோற்றம் காலத்திற்கு ஏற்ப முதிர்ச்சியைக் காணலாம். அதைத் தவிர இவர்களில் எந்த மாற்றமுமில்லை. வறுமைக் கோட்டின் கீழ் வாழ்பவர்களில் எப்பொழுதும் ஒரே மாதிரித்தான் தோற்றுவார்கள் என்பது போல

## தூறல்

## வானரன்

இவர்கள் படத்தில் பிரதிபலிக்கின்றார்கள்.

இயக்குனர் அமெரிக்க மேலாதிக்கத்திற்கு எதிரானவர் என்பது படத்தில் வரும் காட்சிகளூடாகவும். வசனங்களூடாகவும் தெரிகின்றது. இது வங்காள புத்திஜீவிகள் மட்டத்தில் சகஜம். இன்றைய மாற்றங்கள் பெண்கள் மத்தியில் பல மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளன. குடும்பம் என்பதனையும் ஒரு பொருள்முதல் நோக்குடனேயே பார்க்கின்றார்கள். சுதந்திரம் என்பதற்கு அப்பால் இந்த பொருள் முதல் நிலை முக்கியமாக தெரிகின்றது. இவர்கள் மத்தியில் ஏற்படும் பல கட்டுடைத்தல் இதனை நோக்கியே நகருகின்றன. இதனால் இந்த கட்டுடைத்தல்கள் ஏற்படுத்த வேண்டிய சமூக மாற்றங்களை ஏற்படுத்தவில்லை என்பதே உண்மை. இயக்குனர் இதனை வெகு அழகாக படத்தில் வெளிப்படுத்தியுள்ளார். மிதுனும் லபோதினியும் மிதுனை மீண்டும் தேடும்பொழுது இருவரும் தங்களது கற்பனையில் மிதுனை தூய்மையானவராக கருதியே தேடுகின்றார்கள். இந்த சமூக கலாச்சார கூறுகள் எப்பொழுதும் ஆணின் நிலை சார்ந்தே இயங்குகின்றன. ராகுல் என்ற அற்புதமான நடிகனின் நடிப்புக்கு இப் படம் நல்லதொரு உதாரணம்.

இப் படத்தை குமரன், வி.ஜ.பி விடியோக்களில் பெற்றுக் கொள்ளலாம்.

### கொக்குவில் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் கனடா

## வருடாந்தப் போட்டிகள் - 2010

கொக்குவில் இந்துக்கல்லூரியின் நூற்றாண்டுவிழாவை முன்னிட்டு, கொக்குவில் இந்துக் கல்லூரிப் பழைய மாணவர் சங்கம் - கனடா தன் அங்கத்தவர்கள், அவர்களின் வாரிசுகள் மத்தியில் நடத்தும் வருடாந்தப் போட்டிகள்:

பண்ணிசை, பேச்சு, வாசிப்பு, கட்டுரை, சொல்வதெழுதுதல், எழுத்துக் கூட்டிச்சொல்லுதல், உறுப்பெழுத்து, கணிதம், ஆங்கிலம் ஆகிய போட்டிகள் நடைபெற உள்ளன. கல்லூரியின் நூற்றாண்டுவிழாவை முன்னிட்டு வெற்றியாளர்களுக்கு விசேட பரிசுகள் வழங்கப்படும். அங்கத்தவர்களின் வாரிசுகளை இப்போட்டியில் பங்குபற்றுமாறு கேட்டுக்கொள்ளுகின்றோம்.

இடம்: *St. Stephen's Pressbyterian Church*
*3817 Lawrence Ave.East , Scarborough,Ontario, M1G 1R2*

காலம்: ஜுலை 03, 2010 - சனிக்கிழமை - காலை 8:30 மணிக்கு

விண்ணப்ப முடிவுத் திகதி: ஜுன் 30, 2010

மேலதிக விபரங்களுக்கும், விண்ணப்பப்படிவத்திற்கும் கீழ்வரும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்புகொள்ளவும்.

(416) 856-8055 / (416) 431-1060 / (416) 296-7037 / (416) 318-6195


Sales Reps. Welcome

For All your Real Estate & Investments Needs!

Raja M. Mahendran, P. Eng.
(Broker / Owner)



* INDEPENDENTLY OWNED AND OPERATED

HomeLife GTA Realty Inc. Brokerage *
1711 McCowan Rd. #206, Toronto - 416.321.6969
145 Traders Blvd # 28, Mississauga -905.712.2666

# கமல் சொன்னது சரிதான்!

‘கோரிப்பாளையம்’ படத்தில் நான்கு பேர்களில் ஒருவராக வந்தாலும், ‘யார் இவர்?’ என்று தமிழ் சினி-மா ரசிகர்களை புருவம் உயர்த்திப் பார்க்க வைத்தவர் நடிகர் பிரகாஷ். ஏற்கெனவே ‘12பி’, ‘ஆயுத எழுத்து’ போன்ற படங்களில் சிறு சிறு வேடங்களில் தோன்றியவர். இயக்குநர் பிரபு சாலமனிடம் உதவி இயக்குநராகப் பணியாற்றியவர். தற்போது இராசுமதுரவனின் அடுத்த படத்தில் ஒரு முக்கிய கதாபாத்திரத் தில் நடிக்கிறார். அவரை சந்தித்துப் பேசினோம்.

உங்களுடைய சொந்தப் பெயரே பிரகாஷ்தானா?

பிரகாஷ்: ஆமாம். பெயரை மாத்தலாமான்னுகூட யோசிச்சேன். ஆனா, என்னைச் சேர்ந்தவங்க எல்லாருமே இந்தப் பேரு நல்லா இருக்குன்னு சொல்லிட்டாங்க. அதோட, என் அப்பா ஆசையா வச்ச பேரு. அதை நான் மாத்த விரும்பல. பிரகாஷ்னா வெளிச்சம்னுகூட ஒரு அர்த்தம் இருக்கு.

## சந்திப்பு: கோரிப்பாளையம் பிரகாஷ்

## நேர்காணல் - பாலு சத்யா


உங்களுடைய சொந்த ஊர்?
பிரகாஷ்: விழுப்புரம்

எப்படி சினிமாவுக்கு வந்தீர்கள்?
பிரகாஷ்: அப்பா பிசினெஸ்மேன். இரும்பு ஸ்க்ராப், அதாவது இரும்பு கழிவுப் பொருள்களை வாங்கி, விக்கிற வியாபாரம் செய்துகிட்டு இருக்கார். கூடவே விவசாயமும் இருக்கு. அம்மா வீட்ல இருக்காங்க. எனக்கு ஒரு அண்ணன், ஒரு அக்கா, ஒரு தங்கச்சி. அண்ணனுக்கு, அப்பா சொல்ற அறிவுரையையெல்லாம் சின்ன வயசுலருந்து கேட்டு கேட்டே வளர்ந்தேன். அது சின்னதா எனக்குள்ள ஊறிக்கிட்டு இருந்துச்சு. என் அண்ணன் நல்லா படிப்பாரு. அதைப் பாத்து, எனக்கும் நல்லா படிக்கணும்னு எண்ணம் வந்துச்சு. படிக்கும்போது எல்லாத்துலயும் நான் தான் ஃபர்ஸ்ட் ரேங்க். என் குடும்பத்துல யாரும் சினிமா பின்னணி உள்ளவங்க கிடையாது. ஆனால், எனக்குள்ள சின்ன வயசுலயே கலை மேல ஒரு ஈர்ப்பு இருந்துச்சு. ஊர்ல திருவிழா ஒரு வாரம் நடக்கும். தினமும் விடிய விடிய கூத்து நடத்துவாங்க. நான் என் நண்பர்களோட தினமும் போய், தூங்காம விடிய விடிய கூத்து பார்ப்பேன். கூத்துக் கலைஞர்கள் வேஷம் கட்டும்போது, எட்டி எட்டிப் பார்ப்பேன். பகல்ல போய், கூத்து ஆடுறவங்களோட பேசிட்டு வருவேன். இது நான் மூணாவது படிக்கும்போது நடந்தது. திருவிழா முடிஞ்சு, அந்தக் கலைஞர்கள் எல்லாம் ஊருக்குப் போனதுக்கு அப்புறம் எங்க கூத்து ஆரம்பிக்கும். தெருவுல இருக்குற பசங்க எல்லாம் ஒண்ணா சேருவோம். கூத்து நடத்துவோம். அட்டையை வெட்டி, தலையில கட்டிக்கிட்டு, மாலை மாதிரி எதையாவது போட்டுக்கிட்டு, கரியை எடுத்து முகத்துல மீசை மாதிரி போட்டுக்கிட்டு, திரை மாதிரி வேட்டியைப் புடிச்சுகிட்டு கூத்து நடத்துவோம். கட்டியங்காரனா ஒருத்தன் நடிப்பான். திரௌபதியா ஒருத்தன் நடிப்பான். நான் எப்பவும் அர்ஜுனன் வேஷம்தான் போடுவேன். அதே மாதிரி சின்ன வயசுல வீட்டுக்குள்ள நண்பர்கள் எல்லாம் சேர்ந்து படம் காமிப்போம். அஞ்சு காசு பத்து காசுக்கு ஃபிலிமை வாங்குவோம். அதோட ரெண்டு பக்கமும் துடைப்பக் குச்சியை ரெண்டு பக்கமும் மாட்டி, மத்தியான வெயில் நேரத்துல வெயில்ல கண்ணாடிய வச்சு, ஒரு லென்ஸைப் பிடிச்சு வீட்டுக்குள்ள படம் காட்டுவோம். இதெல்லாம் என்னை அறியாம எனக்குள்ள ஊறின ஒரு விஷயம். நான் அப்போ எதையும் யோசிச்சு செய்யல. அந்த ஏழு, எட்டு வயசுல எனக்கு தோணின விஷயம்தான் என்னை சினிமாவை நோக்கி நகர்த்தியிருக்குன்னு நினைக்கிறேன். ஒரு கட்டத்துல, நமக்கு ஏத்த லைன் சினிமா அப்பிடின்னு எனக்கு தோணிச்சு. என்னால இதுல ஏதாவது உருப்படியா ஏதாவது செய்ய முடியும்னு நம்பிக்கை வந்துச்சு.

சிதம்பரம் அண்ணாமலை யூனிவர்சிட்டியில எம்.ஏ. தமிழ் படிச்சேன். முடித்ததும் சினிமா முயற்சிகள்ல இறங்கினேன். ஆரம்பத்துல ‘12பி’, ‘ஆயுத எழுத்து’ போன்ற படங்கள்ல சின்ன ரோல்ல நடிச்சேன். ரெண்டு, மூணு நாள் ஷூட்டிங் அதுக்கு அப்புறம் சும்மாவே இருக்க வேண்டி இருந்துச்சு. எனவே, அஸிஸ்டெண்ட் டைரக்டரா பிரபு சாலமன் சார்கிட்ட சேர்ந்தேன். ‘கொக்கி’, ‘லீ’, ‘லாடம்’ இந்த மூணு படத்துலயும் வேலை பார்த்தேன். இராசுமதுரவன் சார் ‘கோரிப்பாளையம் படத்துல நடிக்க வர்றியான்னு கேட்டாரு. நான் அஸிஸ்டெண்ட் டைரக்டரா வேலை பார்த்தாலும், எனக்குள்ள நடிக்கணுங்கற ஆர்வம் ஓடிக்கிட்டே இருந்துச்சு. எனவே, அவர் கேட்டப்போ சரின்னேன். அது ஒரு நல்ல வாய்ப்பு. அவரே, ‘நீ ரொம்ப நல்லா பண்ணியிருகே!’ன்னு சொன்னாரு. ஒருத்தர், நம்மளை நம்பி வாய்ப்புக் குடுத்துட்டு, ‘நல்லா பண்ணியிருக்கே!’ன்னு சொல்றது பெரிய விஷயம் இல்லையா? படம் வந்ததுக்கப்புறம் மக்கள்கிட்ட இருந்தும் எனக்கு வரவேற்பு கிடைச்சுது. சினிமா ஃபீல்டுல இருக்குறவங்கள்ல நிறையபேரும் என்னை பாராட்டினாங்க. இப்போ இன்னும் நல்லா நடிக்கணுங்கற எண்ணம் ஏற்பட்டிருக்கு.

சினிமா எப்போதுமே ஒரு போராட்டமான விஷயம். வெற்றி பெறுபவர்கள் பத்து பேர் என்றால், தோற்கிறவர்கள் ஆயிரக்கணக்கில். இந்தச் சூழலில் நீங்கள் சினிமாவுக்கு வரும்போது, உங்கள் வீட்டில் ஒப்புக்கொண்டார்களா?

பிரகாஷ்: வீட்டுல முதல்ல யாருமே ஒத்துக்கலை. ஒரு கட்டத்துல அப்பா, ‘சரி. எங்கேயோ போ! என்னவோ பண்ணு! உன்னால என்ன பண்ண முடியுமோ, அதை பண்ணிக்கோ! நான் உன்னை எதிர்பார்த்து இல்ல’ அப்பிடின்னுட்டாரு. இது எனக்கு ஒரு பெரிய ப்ளஸ்தான். அப்பா, அப்பிடி சொல்லலைன்னா நான் சினிமாவுக்கே வந்திருக்க முடியாது. அம்மாவுக்கு உலகமே தெரியாது. வீடு, விவசாயம். இது மட்டும்தான் அவங்களுக்குத் தெரியும். எப்போ பார்த்தாலும் ‘கல்யாணம் பண்ணிக்கோ! கல்யாணம் பண்ணிக்கோ!’ன்னு சொல்லுவாங்க. அவ்வளவுதான். அவங்க கிட்டருந்து பெரிய எதிர்ப்பு எதுவும் வரலை. என் அண்ணன், ஏற்கெனவே சினிமாவுல உதவி இயக்குநரா சேர்றதுக்கு முயற்சி செஞ்சவரு. அதுவும் எனக்கு ஒரு அனுபவமா இருந்துச்சு.





மூன்று படங்கள் உதவி இயக்குநராக வேலை பார்த்திருக்கிறீர்கள். திரைப்படம் இயக்கவே வண்டும் என்கிற எண்ணம் இல்லையா?

பிரகாஷ்: கண்டிப்பா இயக்குநராகணுங்கற எண்ணம் இருக்கு. ரொம்ப கஷ்டப்பட்டுதான் நான் இந்த ஃபீல்டுல நிக்கிறேன். ஒவ்வொரு மனுஷனுக்கும் இருபது வயசுலருந்து முப்பது வயசு வரைக்கும் முக்கியமான காலக்கட்டம். அதுதான் அவனோட வாழ்க்கையைத் தீர்மானிக்கிற இளமையான காலக்கட்டம். அந்த முக்கியமான காலத்தை என்னை மாதிரி சினிமாவுல ஜெயிக்கணும்னு வர்ற எல்லாருமே இழந்திருக்கோம். இவ்வளவு தூரம் கஷ்டப்பட்டுட்டு சும்மா போயிட முடியாது. ஆரம்பத்துல சினிமாவுக்கு வர்றப்போ, எதையாவது செஞ்சா போதும்னு இருந்துச்சு. இப்போ அப்பிடி இல்ல. சிறப்பா எதையாவது செய்யணும். அப்பிடி செஞ்சாதான் நம்மளால இங்க நிக்க முடியும். நிறைய போட்டியும் திறமைசாலிகளும் இருக்கற துறை இது. ஒரு படம் ஃப்ளாப் குடுத்தா, அடுத்த படம் பண்ண முடியாது. என் மனசு இந்தக் கதையை பண்ணலாம், கண்டிப்பா ஜனங்க ஏத்துக்குவாங்க அப்பிடின்னு சொல்றப்போ ஒரு படத்தை இயக்குவேன்.

‘கோரிப்பாளையம்’ படத்தில் முக்கியமான பாத்திரத்தில் நடித்திருக்கிறீர்கள். இது போலவே முக்கியமான குணசித்திர கதாபாத்திரங்களில் நடிக்கத்தான் விரும்புகிறீர்களா?

பிரகாஷ்: இல்ல, இல்ல. எனக்கு ஹீரோவாகணுங்கறதுதான் ஆசை. நிச்சயமா அந்த வாய்ப்பு வரும்ங்கற நம்பிக்கை இருக்கு. அதுக்காக முயற்சி பண்ணிக்கிட்டே இருக்கேன். இப்போவே என்னோட நண்பர்கள் ரெண்டு, மூணு பேரு கதை சொல்லியிருக்காங்க. தயாரிப்பாளர்களோட பேச்சு வார்த்தை நடந்துக்கிட்டு இருக்கு. அது முடிஞ்சிடுச்சுன்னா, பட வேலைகள் ஆரம்பிச்சுடும்.

அடுத்து எந்தப் படத்தில் நடிக்கிறீர்கள்?

பிரகாஷ்: இயக்குநர் இராசுமதுரவன் ‘முத்துக்கு முத்தாக’ன்னு ஒரு படத்தை இயக்கப் போறார். அதுல முக்கியமான ஒரு கதாபாத்திரத்துல நடிக்கிறேன்.

சமீபத்தில் நடிகர் கமல்ஹாசன், “குறைந்த செலவில் எடுக்கிற நாடகத்துக்கே நிறைய ஒத்திகை தேவைப்படும்போது, அதிக செலவில் எடுக்கப்படும் சினிமாவுக்கு ஒத்திகை அவசியம் தேவை” என்று ஒன்று சொல்லியிருக்கிறார். ஒரு நடிகரா இதைப்பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

பிரகாஷ்: கமல் சொன்னது சரிதான். கண்டிப்பா ஒவ்வொருவரும் ஏத்துக்க வேண்டிய விஷயம். ரிகர்சல் பண்ணாம, நேரா ஸ்பாட்ல போய் நடிக்கும்போது, தேவையில்லாம கால விரயம் ஆகும். நமக்காக மொத்த யூனிட்டே காத்திருக்க வேண்டி இருக்கும். பிராக்டிஸ் மேக்ஸ் பெர்ஃபெக்ட். அதனால ரிகர்சல் ரொம்ப அவசியம்.

‘கோரிப்பாளையம்’ படத்துக்கு ஒத்திகை ஏதாவது பார்த்தீர்களா?

பிரகாஷ்: அதுக்கு எங்களுக்கு நேரம் கிடைக்கலை. அவசர அவசரமா ஷூட்டிங்குக்கு கௌம்பிட்டோம். ஆனா, நடிக்கவேண்டிய கேரக்டரைப் பத்தி டைரக்டர் முன்னாடியே சொல்லிட்டார். கஞ்சா அடிக்கிறவன், வாழ்க்கையைத் தொலைச்சவன். அது மாதிரி நானே நிறையா பேரைப் பாத்திருக்கேன். அதனால, என்னால ஈசியா அதை உள்வாங்க முடிஞ்சுது. என்னால, முடிஞ்ச வரைக்கும் அந்த பாத்திரத்தை நல்லா பண்ணியிருக்கேன்.

ரிகர்சல் இல்லை சரி. குறைந்தபட்சம், முதல் நாளாவது அடுத்த நாள் நடிக்கவேண்டிய காட்சிக்கான வசனங்களை உங்களுக்குத் தருவார்களா? நாளைக்கு எந்தக் காட்சியில் நடிக்கவேண்டும் என்றாவது சொல்வார்களா?

பிரகாஷ்: இயக்குநருக்கு எல்லாமே தெரியும். ஒவ்வொரு காட்சியையும் எப்படி எடுக்கணும்னு முன்கூட்டியே தீர்மானம் செஞ்சு வச்சிருந்தார். ஸ்பாட்டுக்கு போவேன். அவர் என்ன சொல்றாரோ, அதை செஞ்சுட்டு வந்துடுவேன். அவ்வளவுதான். அவர், ரொம்ப வருஷமா சினிமாவில் இருப்பவர். மணிவண்ணன் சாரோட அஸிஸ்டெண்ட். அவங்க ஸ்டைலே வேற. அவங்கள்லாம் சினிமாவை கரைச்சுக் குடிச்சவங்க. கவலையேபடாம சினிமாவை எடுக்கறவங்க. அதனால, எதையுமே கேக்காம அவர் சொல்றதை மட்டும் செஞ்சுட்டு வந்துட்டேன். அதற்கு பின்னால், மக்கள் மத்தியில் நல்ல வரவேற்பு இருந்ததுதானே. அந்தப் படத்தில் கைலி கட்டிக்கிட்டு, கஞ்சா அடிச்சுக்கிட்டு, ஒரு மாதிரி தாடி வளத்துக்கிட்டு இருக்கற கேரக்டர். இப்போ சாதாரணமா நான் இருக்கறப்போ, நிறைய பேருக்கு அடையாளம் தெரியறதில்ல. அடையாளம் தெரிஞ்சதுக்கு அப்புறம் கிட்ட வந்து பேசறாங்க. அந்த அளவுக்கு அந்த பாத்திரமா ஆகியிருக்கேன். ரொம்ப சந்தோஷமா இருக்கு. எனக்கு இயல்பாவே இருக்குற நம்பிக்கை இன்னும் அதிகமாயிருக்கு.

மறக்க முடியாத அனுபவம்?

பிரகாஷ்: இறுதிக் காட்சியில ரவிமரியாவை நானும் நண்பர்களும் துரத்துவோம். அந்த இறுதிக் காட்சியில ஓடும்போது, ஒரு இடத்துல தடுக்கி, கீழே விழுந்துட்டேன். முட்டியில பயங்கரமா ரத்தம் ஊத்துது. எனக்கு தெரியவே இல்ல. அடுத்து ‘ரீ டேக்’னு டைரக்டர் சொன்னார். அப்போதான், முட்டியில ரத்தம் ஊத்தறது தெரிஞ்சுது. காலைல பதினோரு மணிக்கு இது நடந்தது. அன்னிக்கி மிச்சம் இருக்குற காட்சியை எல்லாம் எடுக்கணும். ஃபைட் சீன். ‘முடியலை’ன்னு சொல்ல முடியாது. எனக்கு இது ஒரு நல்ல வாய்ப்பு, விடக்கூடாதுன்னு தோணிச்சு. என்ன வேணாலும் நடக்கட்டும்னு, கால்ல கட்டுப் போட்டுக்கிட்டு நடிச்சேன். அந்த சண்டைக் காட்சியைப் பார்த்தாலே தெரியும். லுங்கிய முழுக்க இறக்கிவிட்டிருப்பேன். கால் எடுத்து வைக்க முடியாது அந்த அளவுக்கு வலி. ஆனா, டைரக்டர் ‘டேக்’னு சொல்லிட்டா, எங்கருந்துதான் அப்பிடி ஒரு வேகம் வருமோ தெரியாது. துள்ளி ஓடுவேன். அன்னிக்கி சாயந்தரம்தான் அந்த காட்சி முடிஞ்சுது. எனக்கு கொஞ்சம் கொஞ்சமா குளிர ஆரம்பிச்சுது. குளிர், ஜுரமா மாறிடுச்சு. எட்டு வச்சு நடக்க முடியல. அந்த அளவுக்கு ஆயிப்போச்சு.

உங்க கூட நடிச்ச மத்த நாலுபேரும் எப்படி?

பிரகாஷ்: ராமகிருஷ்ணனும் ஜெகனும் ஏற்கெனவே நல்ல அறிமுகம். சேரன் சார்கிட்ட சான்ஸ் கேட்டுப் போகும்போது பாத்திருக்கேன். ஹரீஷ் புதுசா வந்தாரு. மணிவண்ணன் சார் பையன் ரகு, அந்தப் படத்தப்போதான் அறிமுகமானாரு. அந்தப் படத்துல பின்னால, இட்லிக் கடை வைப்பார் இல்லியா, அவர்தான் ரகு. அவர், பெரிய இடத்துப் பையன்ங்கற பந்தா கொஞ்சம்கூட இல்லாம பழகினார். அந்தப் பெருமை எல்லாம் மணிவண்ணன் சாரைத்தான் சேரும். அப்படி வளர்த்திருக்கார். எல்லாருமே ரொம்ப ஃபிரெண்ட்லியா இருந்தாங்க. குறிப்பா, ஜெகன் எனக்கு ரொம்ப உதவி செஞ்சாரு. சில இடங்கள்ல, நான் ஸ்ட்ரக் ஆகி, அப்பிடியே தேங்கிப் போய் நின்னாக்கூட, ‘நல்லா பண்ணு! நல்லா பண்ணு!’ன்னு ஊக்கப்படுத்துவார்.

# கண்ணில் தெரியாத கதைகள்

"கண்ணில் தெரியும் கதைகள்" எனக்கு மிகவும் பிடித்த ஒரு தமிழ் சினிமாத் தலைப்பு! (படம் இன்னும் பார்க்கவில்லை) ஆனால் 2010 Oscar Foreign Movie Category இல் "ரகசியமாக" விருதைத் தட்டிகொண்ட படத்தின் பெயர் "The Secret in Their Eyes" (கண்ணில் தெரியாத கதைகள்?!) எப்படி இந்தப் படம் விருதைப் பெற்றுக்கொண்டது என்று பலர் ஆச்சரியப்பட்டார்கள்! பலரின் தெரிவாக (Choice) ஆக இருந்தவை White Ribbon அல்லது The Prophet. படம் பார்த்த போது எனக்கும் அந்த சந்தேகம் வந்தது.

'The Secret in Their Eyes' ஒரு ஸ்பானிஷ் மொழிப் படம் (Argentina). அப்படி ஒன்றும் மோசமான படம் அல்ல, அதே நேரம் "அந்த மாதிரிப் படமும்" அல்ல! ஆரம்பத்தில் கொஞ்சம் அலுப்புத் தட்டும் படம். பின்பு சட்டென்று வேகம் எடுத்து உச்சம் தொடுகிறது! Argentina மத்திய நீதித் துறை அலுவலராக இருந்து ஓய்வு பெறும் பெஞ்சமின் ஒரு நாவல் எழுத ஆரம்பிக்கி றார். கதைக் கரு - அவர் காலத்தில், அவர் பணியாற்றிய ஒரு முற்றுப் பெறாத பாலியல் வல்லுறவுக் கொலை வழக்கு!

**- கிறிஸ்ரி-**

அவர் இளமையோடும், உற்சாகத்தோடும் வேலை செய்து கொண்டிருந்த காலத்தில் ஒரு கொடூரமான பாலியல் வல்லுறவுக் கொலை வழக்கு இவர் பக்கம் வருகிறது. கொல்லப்பட்ட பெண்ணின் கணவன் அவள் மேல் வைத்திருக்கும் காதல் அபரிதமாக இருக்கிறது. போலீசாரே விசாரணையில் கோட்டை விட, பெஞ்சமின் மட்டும் பெண்ணின் கணவன் காட்டும் ஆரம்பகாலப் புகைப்படங்களில் இருந்து குற்றவாளி இவனாக இருக்குமோ என்று சந்தேகம் கிளப்புகிறார். புகைப்படத்தில் எல்லோரும் கேமரா பார்க்க, ஒருவன் மட்டும் வல்லுறவுக்கு உள்ளாகி இறந்து போன (போட்டோ எடுத்த போது உயிரோடு இருக்கிறாள்!) பெண்ணையே வெறித்தபடி பார்த்துக்கொண்டு நிற்கிறான். அவன் அந்த இறந்த பெண்ணினதும், கணவனதும் முன்னாளைய நண்பன் என்று தெரிய வர தேடுதல் வேட்டை ஆரம்பமாகிறது. அத்தோடு படத்தின் முக்கிய கதாபாத்திரங்களின் கண்கள் சொல்லும் / சொல்லாத ரகசியங்களும் ஆரம்பிக்கின்றன!

பல முறை சந்தேகநபருக்கு மிக அருகில் வந்தும் கோட்டை விடுகிறார்கள். இது இப்படி இருக்க பெஞ்சமின் ஒரு முறை ரயில் நிலையத்தில் நிற்கும் போது கொல்லப்பட்ட பெண்ணின் கணவனைக் காண்கிறார். "என்ன செய்து கொண்டிருக்கிறாய்" என்று பெஞ்சமின் அவனைக் கேட்க, "கொலையா-ளி புறநகரப் பகுதியில் வேலை செய்கிறான்" என்று தனக்கு தகவல் கிடைத்ததாகவும் அவன் எப்படியும் இங்கு வரத்தானே வேண்டும் என, ஒவ்வொரு நாளும் வேலை முடிந்ததும் அங்கு வந்து அவனைப் பிடிக்கக் காத்திருப்பதாகக் கூறுகிறான் கணவன், (ஆனால் கொலையாளி பிடிபடும் போது தான் பஸ் வண்டியிலேயே பயணம் செய்து வந்ததாகச் சொல்லுவது வேதனை கலந்த வேடிக்கை!) உறைந்து போகிறார் பெஞ்சமின்!

ஆனால், அந்தக் கணத்தில் பெஞ்சமினுக்கு இரண்டு விடயங்கள் தெளிவாகின்றன, கொல்லபட்ட பெண்ணின் கணவனின் புனிதமான காதல், இரண்டாவது எப்படி இந்தக் கொலை வழக்கு தன் வாழ்க்கையையும் "மென்று தின்று" கொண்டிருக்கின்றது என்று! எதைப் பற்றியும் சிந்திக்க முடியாமல் இந்தக் கொலை வழக்கு எப்படி அவர்கள் இருவர் வாழ்வையும் ஆட்கொண்டு விட்டது என்பதை! (ஒரு தொடர் கொலையாளியைத்- Serial Killer- துரத்தும் நாயகனின் வலி சொல்லும் இன்னுமொரு படம் 'Zodiac' - அதன் அழகான போஸ்டர் வரிகள் இப்படிச் சொல்லும் - There is more than one way to loose your life to a killer!)

> ஒரு பார்வை பார்க்கும் போது உயிர் பாடும் நூறு பாட்டு
> மறு பார்வை பார்க்கும் போது மனம் ஓடும் கேள்வி கேட்டு



இந்தப் பரபரப்புகளுக்கிடையே பெஞ்சமின் அவருக்கு மேலதிகாரியாக வரும் Irene மேல் "சொல்லாமலே" காதல் கொள்கிறார். ஆனால் இருவருக்குமிடையே "தமிழ்ப் பட இடைவெளி", அதாவது Irene பணக்கார வீட்டுப் பிள்ளை, பெஞ்சமினோ ஏழை(!?) ஆனால் படத்தின் இந்தக் "கண்களால் மட்டும் பேசிக் கொள்ளும்" காதல் தான் அதி சுவாரசியம்! (தமிழ்ப் பட இயக்குனர்களே ஜாக்கிரதை!)

*ஒரு பார்வை பார்க்கும் போது உயிர் பாடும் நூறு பாட்டு*
*மறு பார்வை பார்க்கும் போது மனம் ஓடும் கேள்வி கேட்டு*

Irene இக்கும் பெஞ்சமின் மீது காதல் தான். ஆனால் ஒவ்வொரு முறையும் பெஞ்சமின் பார்வையால் மட்டும் காதல் சொல்லும் போது, "சொல்லித் தொலையேண்டா" என்று பார்வையால் Irene கெஞ்சுவது (பார்வையா-ளர்களும் கூடத்தான்!) கவிதை!

*கோடி வார்த்தைகளை சேர்த்து வைத்துக் கொண்ட உள்ளம்*
*ஓடி ஓடி அது பாய்ந்து செல்லுகின்ற வெள்ளம்*

பல முறை பெஞ்சமின் "உன்னிடம் ஒன்று சொல்ல வேண்டும் என ஆரம்பிக்க", Irene பூத்துக்குலுங்கும் முகத்துடன் "ஆகா காதல் சொல்லப் போகிறான்" என்றிருக்க பெஞ்சமின் "அந்தக் கொலை" வழக்குப் பற்றித் தன் கண்டுபிடிப்புகளை அடுக்கிக்கொண்டு போகும் போது Irene க்காகப் பார்வையா-ளர்கள் கவலைப்படுகிறார்கள்! ஒரு வழியா-கப் பிடிபடும் கொலையாளி Argentina வில் நிலவும் அரசியல் காரணங்களால் சில வாரங்களிலேயே விடுதலை செய்யப்பட்டு வெளியே வர மிகுந்த ஏமாற்றத்துக்குள்ளாகி-றார்கள் பெஞ்சமினும் கொல்லப்பட்ட பெண்ணின் கணவனும்! வெகுண்ட கொலையாளி, அரசியல் பலத்துடன் பெஞ்சமினை வேட்டையாட முனைகிறான்.

அந்த கொலை வெறியில் பலியாவது பெஞ்சமினின் அப்பாவி நண்பன். ஆனால் திடீரென்று எல்லாமே அமைதியாகி விடுகிறது. பெஞ்சமினும் Irene க்கு திருமணம் நிச்சயமாகி விட வேலை விடயமாக ஊரை விட்டு வெளியேறுகிறான், தன் காதலைச் சொல்லாமலே!

நினைக்கிறேன் சொல்ல மொழியில்லை,
எனக்குத்தான் என்ன நாணமோ
நீயும் மௌனராகம் நானும் மௌனகீதம்!

காலங்கள் கரைந்தோடுகின்றன, ஓய்வு பெறும் பெஞ்சமின் தனது 25 வருடக் காதலையும், குற்றவாளி தண்டிக்கப்படாத அந்தக் கொலை வாழ்க்கையும் மறக்கவில்லை! நாவல் எழுத வழக்குப் பற்றிய தகவல்கள் வேண்டும் என்ற சாக்கில் மீண்டும் தன் "கண்ணுக்குள் இருக்கும் காதலியைச் சந்திக்கிறான். பெஞ்சமின் இப்போது விவாகரத்துப் பெற்றவன், Irene இன்னொருவனின் மனைவி, குழந்தைகளுக்குத் தாய்! கண்கள் மீண்டும் பேசிக்கொள்கின்றன!

கொலையளிக்குத் தான் சரியான தண்டனை வாங்கித் தரத் தவறி விட்டதாக ஒரு குற்ற உணர்வு இன்னும் இருக்க, தான் எழுதப் போகும் கொலை வழக்கு நாவல் பற்றியும் சொல்ல, இறந்த பெண்ணின் கணவனைத் தேடிப் போகும் பெஞ்சமின் கடந்த 25 வருடங்களாகத் தனது தூக்கம் கலைத்த கொலை வழக்குக்குத் தீர்வு காண்கிறானா என்பது அதிர வைக்கும் climax!

தொடர்ச்சி 38ம் பக்கம்

**COMPLETE MAINTENANCE SERVICES**

Cleaning - We come to your home door

(Interior Exterior) - Van, car, bus, carpet upholstery - Area Rug

உங்கள் வீட்டிற்கு நாங்கள் நேரடியாக வருகின்றோம்

**416.829.0970**

**Complete Basement Works**

Hard Wood, Laminate, Title Flooring, Pluming, Electrical works.

குறித்தநேரத்தில் வேலைகள் முடித்துத் தரப்படும்

**416.666.5627/647.269.0912**

**Complete Painting Works**

Interior & Exterior - Houses, Basement, Offices

**416.666.5627 / 416.319.1106**

19 வருட கூட்டு அனுபவமிக்கவர்களின் சேவை

# சிங்கம் - திரை விமர்சனம்

முன்னணி நடிகர்களுக்கு 25, 50, 75, 100ஆவது படங்கள் என்பது ஒரு வெற்றிக் கொண்டாட்டம், அதே நேரத்தில் ஒரு பரீட்சையும்கூட. எம்.ஜி.ஆர்., சிவாஜி, ரஜினி, கமல் உட்பட எல்லா பெரிய நடிகர்களில் இந்த நான்கில் சிலதில் தோற்றும் சிலதில் வெற்றிபெற்றும் உருண்டு எழுந்துதான் தங்கள் சினிமா வாழ்க்கையில் முன்னகர்ந்திருக்கிறார்கள். சமீபத்திய உதாரணம்: விஜய்யின் 50ஆவது படம் என மிகப் பிரம்மாண்டமான அறிவிப்புகளுடன் வந்து படுதோல்வியடைந்த 'சுறா'. நடிகர் சூர்யாவுக்கு இது முதல் பரீட்சை. 25ஆவது படம், ஜெயித்திருக்கிறார்.
திருநெல்வேலிக்குப் பக்கத்தில் நல்லூர்



**- பிலிம் நியூஸ் கிருஷ்ணன் -**

கிராமத்தில் மளிகைக் கடை வியாபாரத்தைக் கவனித்துக்கொள்ள ஆசைப்படும் சூர்யா, தன் அப்பாவின் ஆசைக்காக போலீஸ் வேலையில் சேருகிறார். தன் சொந்த ஊரான நல்லூர் கிராமத்திலேயே சப் இன்ஸ்பெக்டர் போஸ்டிங் கிடைக்கிறது. போலீஸ் வேலையில் விருப்பமில்லாமலே தொடர்கிறார். நேர்மையான போலீஸ் சப் இன்ஸ்பெக்டரான அவருக்காக எதையும் செய்யத் தயாராக இருக்கிறது அந்த ஊர். ஊரில் உள்ளவர்கள் எல்லாம் மாமன், பெரியப்பா, சித்தப்பா உறவு முறைகளில் இருப்பதால் ஊரில் உள்ள பிரச்சினைகளை எ.்.ப்.ஐ.ஆர். போடமேலேயே சமாதானமாக பேசி எல்லோரையும் சேர்த்து வைக்கிறார். அதே ஊருக்கு விடுமுறையில் நாசர் பொண்ணுங்க அனுஷ்கா மற்றும் அவர் தங்கை வர, அனுஷ்காவுக்கு சூர்யாவுடன் காதல். சென்னையில் பெரிய தாதா பிரகாஷ்ராஜ். ஆள்கடத்தல், புதிதாய் கட்டிடம் கட்டுபவர்களை மிரட்டி பணம் பறிப்பது தான் வேலை. ஒரு முறை பிரகாஷ் ராஜ், வீடு கட்டிகொண்டிருக்கும் ஒரு சேட்டிடம் இருந்து பணம் கேட்க, அவர் அமெரிக்காவில் உள்ள தன் மகனுக்கு மின்னஞ்சல் அனுப்பிவிட்டு தூக்கு மாட்டிக்கொள்கிறார். பிரச்சினை பெருசாக, கோர்ட் அவரை நல்லூரில் உள்ள போலீஸ் ஸ்டேஷனில் 15 நாட்களுக்கு தினமும் கையெழுத்து போடுமாறு நிபந்தனை ஜாமீன் வழங்குகிறது. ஆனால், பிரகாஷ் ராஜ் நல்லூர் வராமலே அங்கு உள்ள ஆட்களை வைத்து கையெழுத்து இட சொல்கிறார். சூர்யா போலீஸ் ஸ்டேஷன் வரும் பொழுது யாரோ ஒருவர் கையெழுத்து போட, அவனை அடித்து, "பிரகாஷ்ராஜ் இன்னும் மூன்று மணி நேரத்துல பிளைட்டை பிடிச்சாவது இங்க வந்து கையெழுத்து போடனும்" என்று கர்ஜிக்கிறார். சூர்யாவைப் பழிவாங்க ரவுடி கும்பலுடன் பிரகாஷ்ராஜ் வர, ஊர் மக்கள் எல்லாம் ஒன்று சேர, ஒன்றும் செய்ய முடியாமல் திரும்புகிறார் பிரகாஷ்ராஜ். சப் இன்ஸ்பெக்டர் சூர்யாவை அவரது சொந்த ஊரில் மோதமுடியாமல், சென்னை செல்லும் பிரகாஷ்ராஜ், உள்துறை அமைச்சர் விஜயகுமாரிடம் பேசி, தனது செல்வாக்கைப் பயன்படுத்தி, சப் இன்ஸ்பெக்டர் சூர்யாவை, இன்ஸ்பெக்டர் சூர்யாவாக பதவி உயர்த்தி, தனது திருவான்மியூர் ஏரியாவுக்கே மாற்றல் செய்ய வைக்கிறார். அங்கே ஆரம்பிக்கிறது இருவருக்குமான கள்ளன் - போலீஸ் விளையாட்டு.

பிரகாஷ்ராஜ் தொல்லைகள் தாங்காமல் ஊர் திரும்ப முடிவெடுக்கும் சூர்யா, காதலி அனுஷ்கா சொல்லும் உபதேசத்தில் பிரகாஷ்ராஜை எதிர்கொள்கிறார். திணறுகிறார் பிரகாஷ் ராஜ். சூர்யாவுக்கு அசிஸ்டென்ட் கமிஷனர் பதவி உயர்வும் கிடைக்கிறது. பிரகாஷ்ராஜை கைது செய்ய அமைச்சர் அனுமதியை பெறுகிறார். இதனால் கோபம் அடையும் பிரகாஷ்ராஜ் கர்நாடக அமைச்சரின் பெண்ணை கடத்துகிறார். கிளைமாக்ஸ்: எப்படி சூர்யா பிரகாஷ்ராஜைப் பிடிக்கிறார், அந்த பெண்ணை காப்பாற்றுகிறார் என்பது.

ஆட்கடத்தல் கும்பல், வசதியான வீட்டுப் பிள்ளைகளை குறி வைத்து பிடித்துக்கொண்டு போவதும், பிறகு அவர்களிடம் பணம் கேட்டு மிரட்டி போன் வந்ததும், 50 லட்சமோ ஒரு கோடியோ சத்தமில்லாமல் கொண்டு வந்து வைத்துவிட்டு தங்கள் பிள்ளைகளை பெற்றோர்கள் மீட்டுக்கொண்டு செல்வதும் சென்னை மாநகரில் ஒரு வாடிக்கையான செயலாக இந்தப் படத்தில் வருகிறது. இது சற்று நெருடினாலும் இத்தகைய குற்றங்கள் தமிழகத்தில் தற்போது பெருகி வருகிறது என்பதை மறுக்க முடியாது.

உயரம் கொஞ்சம் கம்மிதான் என்றாலும், முரட்டு மீசை உருட்டு விழி என நேர்மை, நாணயம், உண்மை, உழைப்பு, கடமை, கம்பீரம், வீரம் என சினிமா போலீசாகவே வாழ்ந்திருக்கிறார், சூர்யா. 'மூன்று முகம்' போலீஸ் ரஜனியை ஞாபகப்படுத்தும் பாத்திரம். இனி போலீஸ் கதை என்றால் சூர்யா தான் என சொல்லும் அளவுக்கு துரைசிங்கமாக வருகிறார். அவரை விரட்டி விரட்டி காதலிக்கும் அனுஷ்கா! கவர்ச்சிக்காகத்தான் தான் என்பதைப் புரிந்துகொண்டு வந்து போகிறார். அழகாகவும் இருக்கிறார். அனுஷ்காவை காட்டினாலே, "அய்யயோ பாட்டு போட்டுருவானுங்க போலருக்கே'' என்று மனம் பதறுகிறது. அந்தளவுக்கு, யானை வரும் பின்னே மணியோசை வரும் முன்னே' என்பதுபோல், அனுஷ்கா வந்ததும் பாட்டு வருகிறது.

நாசர், பிரகாஷ்ராஜ் இருவரும் மீண்டும் தங்கள் நடிப்புத் திறனை நிரூபித்திருக்கிறார்கள். அனுஷ்காவின் அப்பாவாக வரும் நாசர், போலீஸ்காரனுக்கு பொண்ணைக் கட்டிக்கொடுக்க மாட்டேன் என முரட்டு பிடிவாதம் செய்யும்போது சபாஷ் போட வைக்கிறார். விவேக்கின் காமெடி ரெட்டை வசனங்கள் முகம் சுளிக்க வைக்கின்றன. வர வர விவேக் இன்னொரு வெண்ணிற ஆடை மூர்த்தி ஆகிவருகிறார். டிவியில் என்றால், விவேக் முகம் தெரிந்ததும், பழக்கதோஷத்திலேயே கைவிரல்கள் ரிமோட்டில் சேனலை மாற்றிவிடும். தியேட்டரில்



அது முடியாது. சகித்துதான் ஆக வேண்டிய கட்டாயம்.

தேவிஸ்ரீ பிரசாத் இசை. எல்லாப் பாடல்களும் அருமை இல்லையென்றாலும் பரவாயில்லை. பின்னணி இசை காதை றுத்தவில்லை. சண்டைக் காட்சிகளில் அனல் பறக்கிறது. பிரியன் ஒளிப்பதிவும் உழைப்பும் படம் நெடுகிலும் தெரிகின்றது.

இயக்குநர் ஹரி, வழக்கமான தன் முத்திரைகளுடன் இந்த படத்தை கொஞ்சம் விறுவிறுப்பாகவே கொடுத்து இருக்கின்றார். போலீஸ் கதை, பஞ்சிங் வசனங்கள் இல்லாமலா. கொஞ்சம் குறைத்திருக்கலாம். படத்தின் ஒவ்வொரு அடுத்தகாட்சியையும் எளிதில் யூகிக்க முடிவது மிகப் பெரிய பலவீனம்! சூர்யா, சிங்கம் தான், அதுக்காக பறந்து அடிக்கும் போது சிங்கத்தை காட்டுவது, சிங்கம் போல் பிராண்டுவது எல்லாம் கொஞ்சம் அதிகம். படம் முழுக்க ஆயிரக்கணக்கில் லாஜிக் மீறல்கள். ஆனால், அதுதானே தமிழ் சினிமா என்பதால் பேசிப் பயனில்லை. சொத்தையான கிளைமாக்ஸ், மற்றப்படி படம் பரபரன்னு போகுது. இந்த 'மாதிரி படங்களில் ரசிகர்கள் என்னவெல்லாம் எதிர்பார்ப்பார்களோ அதில் எந்த விதமாற்றமுமில்லாமல் அப்படியே கொடுத்திருக்கிறார், ஹரி.

குடும்பக் கதை, காதல் கதை, ரவுடி கதை, போலீஸ் கதை அல்லது கதையே இல்லாத கதை எதுவாக இருந்தாலும் திரைக்கதை மிக முக்கியம் என்பதை மீண்டும் நிரூபித்திருக்கிறது, சிங்கம். ஆரம்பத்தில் இருந்து இறுதி துவளாத சுவாரசியம், இடைவேளைக்குப் பிறகு இன்னமும் வேகமெடுக்கிறது. ஹீரோயிஸம், தூள் பறக்கும் சண்டைக்காட்சிகள், அனுஷ்கா அழகு பிடிக்குமென்றால் தாராளமாக பார்க்கலாம்.

சிங்கம் - பக்கா மசாலா!

# கண்ணில்...

37ஆம் பக்கத்தொடர்ச்சி

படம் முடியப் போகிறது, அவசரமாக வரும் பெஞ்சமின் "உன்னிடம் ஒரு விடயம் சொல்ல வேண்டும்" என்று பரபரக்க, Irene க்கோ 25 வருடத்துக்கு முன்னே முகத்தில் வந்த அதே பூரிப்பு! அலுவலகக் கதவை பூட்டச் சொல்கிறாள்! மூடிய கதவு சில வினாடிகளுக்கு திரையில் தெரிய, 'Closing Credits' திரையில் ஓட ஆரம்பிக்கிறது. பார்வையாளர்கள் காத்திருக்கிறார்கள், படமே முடிந்து திரை இருண்டு விட்டது. பலர் இருக்கையில் இருந்து எழுந்திருக்கவே இல்லை! மூடிய கதவின் பின்னே பெஞ்சமின் தன் 25 வருடக் காதல் சொன்னானா? இல்லை, வழக்கம் போல் தான் கண்டுபிடித்த வழக்குப் பற்றிய திடுக்கிடும் உண்மை சொன்னானா? அந்தக் கணத்தில் இயக்குனர் Juan José Campanella பெறுகிறார் Oscar விருது!

....சொன்னால் ஏற்றுக் கொள்வாய் என்னால் முடியவில்லை!....

பின்குறிப்பு: இடை இடையே வந்த பாடல் வரிகள் 'The Secret in Their Eyes" திரைப்படத்தில் இடம் பெற்ற தமிழ்த் திரைப்படப் பாடல் அல்ல!
"நங்கூரம்" திரையில் வந்த அற்புதமான ஒரு பாடலின் சில வரிகள்!


**REAL ESTATE**

**வகுப்புகள்**

ரொறொன்ரோவில் இலவச ஆதனவியல் (*Real Estate*) வகுப்பு நடைபெறுகின்றது.
தொடர்புகளுக்கு: *Vanessa - 416.321.6969*




Mmm Ahh
dollar drink days
$1 any size soft drinks
plus tax
all summer long
Coca-Cola zero®
Real Coca-Cola Taste
Zero Calories • Zero Sugar Cola
Markham and Progress
Drive thru open 24 hours
Markham and Finch
Drive thru open 24 hours
Markham and Highglen
Drive thru open 24 hours
Port Union and Kingston Rd
Drive thru open 24 hours
Malvern Town Centre
Markham and Steels Wal Mart
Not valid with any Extra Value Meal or Happy Meal®.
For a limited time only. At participating McDonald's® restaurants in Canada.
"Coca-Cola Zero" is a registered trademark of Coca-Cola Ltd., used under license.
©2010 McDonald's.
i'm lovin' it®

# எனக்கு என்மேலுள்ள உட்புறக் கோபமும் அதன் விளைவுகளும்

வாழ்க்கையில் நான் செய்த தவறுகளுக்காக, என்மேலேயே எனக்கிருக்கும் கோபத்தை இதுவரை ஒப்புக்கொள்ளாததற்காக என்னை மன்னித்திட இன்று உடன்படுகிறேன்.

பிறர் உன்னைத் தகாத விதத்தில் அவமரியாதையாக நடத்தும் போது அதை நீ ஏற்றுக் கொண்டால் ஒரு முக்கியமான கேள்வியை உன்னிடம் நீ கேட்க வேண்டும். எனக்கு என்மீதுள்ள ஆத்திரத்தினால் எதற்காக இவ்வாறு இத்தனை அவமரியாதையான துன்புறுத்தல்களுக்கு நான் உடன்படுகிறேன். பிரியமானவர்களே! தமது தவறுகளினால் தம்மேலுள்ள உள்முகக் கோபத்தை மூடி மறைத்துக் கொண்டு எம்மிடையே பலர் வாழ்கிறார்கள். வாழ்வில் தாம் முன்பு செய்த அல்லது செய்யாதவற்றிற்காக அவர்கள் தம்முடனேயே கோபித்துக் கொள்கிறார்கள். தமது சினம் இப்போ தணிந்துவிட்டது என அவர்கள் வெளியே காட்டிக்கொள்ளலாம். ஆனால் அவர்களுக்கு ஆழமாகத் தமக்குள் தம்மை மன்னித்திட முடியாமல் அல்லது தம்மை மன்னிக்க விரும்பாமல் நடந்த சம்பவங்களை மறக்கவும் முடியாமல் திண்டாடலாம். ஆனால் அதேநேரம் அவர்கள் தம்மைக் குற்றம் சாட்டிக் கொள்ளவும் உடன்படாதிருப்பார்கள். தாம் செய்த தவறிற்காகத் தம்மைத் தண்டிக்கும் வேலையை வேறொருவரிடம் விட்டு விடுவார்கள். இப்படிப்பட்டவர்கள் தான் தாம் கட்டாயம் தண்டிக்கப்பட வேண்டியவர் கள் என நம்புவதால் பிறர் தம்மைத் துன்புறுத்திட அனுமதிக்கிறார்கள்.

வெளிப்படுத்தப்படாது அடக்கி வைக்கப்பட்ட உனது உள்முகக் கோபம் தான் நீ அனுமதித்து அனுபவிக்கும் பிறரின் துன்புறுத்தலாக உருவெடுக்கின்றது என்பதைத் தெரிந்து கொள்.




வெளிப்படுத்தாது அடக்கி வைக்கப்பட்ட சினம் உனது ஆன்மாவைக் காயப்படுத்திய சிவப்பு விளக்கு வடுவாய் ‘நான் தவறு செய்தவன், கூடாதவன், என்னைப் பேசு, அடி, துன்புறுத்து’ என உரத்துச் சொல்கிறது. எம்மை அறியாது மௌனமாக நாம் ஒலிப்பரப்பும் இந்த எதிர்மறைச் சக்தி நாம் மானசீகமாக விரும்புவதைச் செய்து எம்மைத் துன்புறுத்தக் கூடியவர்களை எம்பக்கம் ஆகர்ஷிக்கின்றது. இவ்வாறு நாம் ஒலிபரப்பும் எமது விருப்பத்தைப் பற்றிய புரிந்துணர்வு எமக்கில்லாதபடியால் எமக்கும், எம்மைத் துன்புறுத்துபவர்களுக்கும் ஏற்றதாய் ஏதேதோ சாக்குப் போக்குகள் சொல்லி சமாளித்து விடுகிறோம். உடல்ரீதியான, உணர்வுரீதியான, வாய்ப்பேச்சினால் எம்மைத் துன்புறுத்திட அனுமதித்து அதை ஏற்றுக்கொள்வது, உண்மையில் சுயமன்னிப்பு சுயகுணப்படுத்தலுக்காக நாம் ஏங்கி அழுவதன் அடையாளம் தான். ஆனால் உன்மேல் உனக்கிருக்கும் உள்முகக் கோபத்தினால் தான் இத்தகைய துன்புறுத்தலை அனுமதித்து நீ ஏற்றுக் கொள்கிறாய். இதை அடையாளங்கண்டு விழிப்புணர்வடைந்திட நீ உடன்படாவிடில் இந்தச் சுயமன்னிப்பும் குணப்படுவதும் உனக்கு ஒருபோதும் வந்து சேராது.

நீ எவ்வாறு நடத்தப்படவேண்டும் என விரும்புவதின் பிரதிபலிப்பாகத்தான் வாழ்வில் நீ நடத்தப்படுகிறாய் என்பதை அடையாளங் கண்டிட முடியாமல் அல்லது காண விரும்பாமல் இன்றுவரை நீ வாழ்ந்திருக்கலாம். உனது வாழ்வில் உன்னைத் துன்புறுத்துபவர்களையும், துன்ப அனுபவங்களையும் இன்று நன்கு பரிசோதித்துப்பார். இத்தகைய துன்புறுத்த லுக்குள்ளாக என்னை அனுமதித்திட நான் ஏன் இன்றும் என்னுடன் இவ்வளவு கோபமாக இருக்கிறேன்?

**மன்னிக்கவே முடியாத எனது தவறுகள் என நான் இதுவரை நம்பியவற்றை இன்று மன்னிக்கின்றேன்.**

ஆளுமை வளர்ச்சிக்குப் பிரார்த்தனைகள் 172

மேலதிக தகவல்களுக்கு அழையுங்கள் 905-270-1214



லலிதா புரூடி







